

தருமபுரி மாவட்டத்தில் கல்கி – 1

KALKI 13.7.86 ரூ. 1.50

கல்கி


பத்தாயிரம் பேரைப் பாதிக்கும் பிரச்னை...





விளையாடும்போது குழந்தைக்கு வியர்ப்பது இயற்கை. ஆனால் அதன் விளைவாக சக்தி இழந்து களைப்புற்றால் படிப்பது எப்படி? இக்களைப்பு நீங்க, அவனுக்கு அளிப்பீர் எலெக்ட்ரோஸ். இது விரைவில் சுறுசுறுப்பூட்டுகிறது.

வியர்வையினால் அவன் இழந்த அத்தியாவசியமான உப்புக்களை (body salts) மீட்டுத்தரும் க்ளுக்கோஸ் அடங்கிய ருசிமிக்க பானமாகும் எலெக்ட்ரோஸ். ஆரஞ்ச் சுவையுள்ளது.



க்ளாக்ஸோ வழங்கும்
புதிய படைப்பு— எலெக்ட்ரோஸ்

CLARION/B/GX/11.183 TML

இந்தப் படம் சொல்லும் கதை...



இது ஏதோ காட்டுப் பறவைகளின் கூடோ என்று நினைக்க வேண்டாம். தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாளையம் என்ற மலைப்பகுதி கிராமத்தில் வசிக்கும் 'இருளர்' என்னும் பழங்குடியினரின் குடியிருப்புத்தான் இது. அந்தக் கிராமத்தில் வசிக்கும் சுமார் எண்பது குடும்பத்தினருக்கும் விறகு பொறுக்கி விற்று வரும் வருமானத்தில்தான் ஜீவனம் நடக்கிறது. அது போதவில்லை என்றால் மலையிலுள்ள வள்ளிக் கிழங்கைத் தோண்டியெடுத்துச் சாப்பிடுகிறார்கள். இப்படிப்பட்ட தோர் அவல நிலையில் வாழும் இவர்களுக்கு இன்னமும் அரசாங்கத் தின் சலுகைகள் ஏதும் கிடைக்கவில்லை என்பதுதான் கொடுமை!



° பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் குச்சி சீவும் சிறுமி சகுந்தலா.

° காட்டிலிருந்து மூங்கில் சுமந்து வரும் பாண்டு.





10,000 பேரைப் பாதிக்கும் பிரச்னை

இன்று காட்டிலாகா ரேஞ்சர்களிடம் மாட்டிக் கொள்ளவே கூடாது!' என்பதில் மிக உறுதியாக இருந்தான் வெங்கட்ராமன். காலையில் காட்டிற்குச் சென்று, மேட்டிலும், பள்ளத்திலும் ஏறி இறங்கி முட்களில் உரசிக் கொண்டு, யானைகளுக்குப் பயந்து, வெட்டிக் கொண்டு வந்த இருபது கிலோ பச்சை மூங்கில் தண்டுகளையெல்லாம் சிறுசிறு துண்டங்களாக்கி அதை மறுபடியும் ஊதுவத்திசெய்வதற்கான சன்னமான ஈர்க்குகளாகச் சீவியாகிவிட்டது. விற்பனைக்காக அதை எடுத்துக் கொண்டு கிளம்பும் போதே, பலமுறை இந்த ரேஞ்சர்களிடம் அடிபட்டு, உதைபட்டுத் திரும்பியதை

ஞாபகப்படுத்திக் கொண்டான் அவன். எப்படியாவது தேன்கனிக் கோட்டையை அடைந்துவிட்டால் அப்புறம் பிடிப்பதற்கு யாராலும் முடியாது. பகலில் போனால் மாட்டிக் கொள்ளுவோம் என்றே, இரவில் மலைக்காடுகளின் வழியே கிளம்பிச் சென்றான்.

வெங்கட்ராமனுடன் இன்னும் நான்கு பேர் வந்தார்கள். அருளாளம் என்ற இடத்திற்கு அருகில் வரும்போதுதான் ரேஞ்சர்கள் உருவத்தில் ஆபத்து வந்து முன்னால் நின்று வழியை மறித்தது. ''ஏண்டா, திருட்டுப் பயல்களா, ராத்திரியிலே கொண்டு போனா யாரும் கண்டுக்க மாட்டாங்கன்னு பாத்திங்களா? எவ்வளவு கிலோடா இது?'' — ரேஞ்சர் உறுமினார்.

''ஐயா, இந்தத் தடவை உட்டுடுங்கய்யா. இதை விற்றுச் சென்றால்தான் வீட்டில் அடுப்பெரியும்!'' — வெங்கட்ராமனும் மற்றவர்களும் மன்றாடினார்கள்.

''அப்புறம் என்ன ஆச்சு வெங்கட்ராமன்?''

''வேறே என்ன ஸார், ரஸீது இல்லாத ஃபைன்தான்! இருநூறு ரூபாய் சரக்கையும் எடுத்துக்கிட்டாங்க. கடந்த சில வருடங்களாக இப்படித்தான் ஸார் எங்கள் வாழ்க்கை!''

வெங்கட்ராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கிருஷ்ணன், பாண்டு ஆகியோர் வந்தார்கள். வெங்கட்ராமன் சொன்ன சோகக் கதையையே அவர்களும் தங்கள் அனுபவமாகக் கூறினார்கள். இது இவர்கள் பிரச்னை மட்டுமல்ல; அஞ்செட்டி, மற்றும் சுற்று வட்டாரங்களில் உள்ள பத்தாயிரம் மக்களின் எரியும் பிரச்னை.

ஹொசூரிலிருந்து தேன்கனிக் கோட்டைக்கு வந்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அஞ்செட்டிக்குச் செல்லும் பஸ் வரும். தேங்காய் நார் ஸீட் பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டு இருபத்தைந்து கி.மீ. பயணப்பட்டால் அஞ்செட்டியை அடையலாம். பஸ்ஸில் தூங்கும் வழக்கமுடையவர்கள் அஞ்செட்டிக்குச் சென்றால் அழகான இயற்கைக் காட்சிகளைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்காது. மலைகளும் பள்ளத்தாக்குகளும், சலசலத்து ஓடும் சிற்றாறுகளும் ஓடைகளும், காட்டாறுகளுமாக ('அதிர்ஷ்டம் இருந்தால் யானையை பார்க்கலாம்' என்றார் உள்ளூர் சாம்ராஜ்.) எழில் கொஞ்சுகிறது.

ஆந்திரா, கர்நாடகா எல்லையோரங்களில் இருப்பதாலும் கணிசமான அளவில் முஸ்லிம்கள் வசிப்பதாலும், மக்கள் தமிழில் உரையாடிக் கொண்டு, உருதுவில், 'க்யா ஹை' என்று கேட்டுக் கொண்டு, 'ஏன்றி' என்று கன்னடத்தில் கத்திக் கொண்டு, தெலுங்கில் 'மாட்லாடி'க் கொண்டிருப்பார்கள். சமயத்தில் 'ஹெக்டே ஈஸ் அல்ரைட் மேன்' என்று கூறிச் செல்லும் வெள்ளைக் காலர் காரர்களும் உண்டு.

நாங்கள் வெங்கட்ராமனையும், மற்றவர்களையும் சந்தித்த இடம் அஞ்செட்டியிலிருந்து ஒன்றரை கி.மீ. தள்ளியுள்ள சிங்கக்கோட்டை என்ற கிராமத்தில். போகும்போது இடையில் மற்றொரு கிராமத்தைக் கடக்க வேண்டியிருந்தது.

''இங்க யாராவது குச்சி சீவுறாங்களா?'' என்று சாம்ராஜ் எதிரில் தென்பட்ட சிலரைக் கேட்டபோது, 'இல்லீங்க!' என்று மிரட்சியுடன் பதில் சொன்னார்கள். நாங்கள் காட்டிலாகாவைச் சேர்ந்தவர்களாக இருப்போமோ என்ற பயம்தான் அதற்குக் காரணம் என்றார் சாம்ராஜ்.

காடு, மலை என்று இருப்பதால், பயிர் செய்யத் தகுதி வாய்ந்த நிலம் கொஞ்சம்தான். அதற்கும் நீர் வளம் போதாது. ஆக பிழைப்புக்கு என்ன வழி என்று இருந்தவர்களுக்கு, அருகிலுள்ள காடுகளில் ஏராளமாக மூங்கில், மரங்கள் இருக்கவே அதை வெட்டி ஊதுவத்தி தயாரிப்பதற்கான சிறுசிறு குச்சிகளாகக் கிழித்து விற்றால் என்ன என்று தோன்றியது. செய்தார்கள். இப்போது அதுவே பரம்பரைத் தொழிலாகவும் வளர்ந்துவிட்டது.

1970 வரை எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. ஆனால் 1980ல் நிலைமை மிகவும் ஸீரியஸாகிவிட்டது. காட்டில் போய் பத்து மைல் வட்டாரத்துக்குச் சுற்றியலைந்து மூங்கிலுடன் திரும்பி, அவற்றைக் குச்சிகளாகச் சீவி, தேன்கனிக் கோட்டைக்கு எடுத்துப் போகும்போது மாட்டிக் கொள்வார்கள். பிறகு அடி, உதை, ஃபைன் (ரசீதுடனும், ரசீது இல்லாமலும்). பல பேர் இது நமக்குத் தாங்காதப்பா என்று காட்டுக்குப் போவதையே நிறுத்திவிட்டுப் பிழைப்புக்கு வேறு வழி தேடினார்கள். அப்போது நடந்ததை மெஹராஜ் முகமது என்பவர் சொன்னார்:

''ஆயிரக்கணக்கில் இந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறி ஆந்திராவில், கர்நூல் மாவட்டத்திலும், நந்தியால் பகுதியிலும், கர்நாடகாவில் உள்ள சோமவார் பேட்டை, மாகடி, கந்தி போன்ற இடங்களுக்கும் பிழைக்கப் போனார்கள். அங்கேயும் இதே மூங்கில் சீவும் வேலைதான்; இரக்கமற்ற காட்டிலாகா அதிகாரிகளின் தொந்தரவுதான்! ஆந்திராவுக்குப் போனவர்களில் நான்கு பேர் சீதோஷ்ண நிலை தாங்காமல் இறந்து போனார்கள். சென்றவர்களில் பலர் இங்கு மீண்டும் வந்தாலும் இன்னும் நிறையப் பேர் அங்குதான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.''

இவர்கள் கஷ்டத்தைப் போக்க என்ன செய்வது என்று யோசித்துப் பார்த்து, பழைய எம்.எல்.ஏ. ராஜாராம்நாயுடு போன்றவர்கள் 'அஞ்செட்டி ஃபிர்க்கா, வத்திக்குச்சித் தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம்' என்ற ஒன்றை 1973ல் ஆரம்பித்தார்கள். ஆனாலும் இந்தச் சங்கம் வேகமாகச் செயல்

பட ஆரம்பித்தது என்னவோ, காட்டிலாகா அதிகாரிகளால் மக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளான 1980ம் வருடம் முதல்தான்!

காட்டிலாகாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு, மலையில் பல பகுதிகளைக் குத்தகை எடுத்தது சங்கம். அந்த இடத்தில் உள்ள மூங்கில்களைச் சங்கத்தின் உறுப்பினர்கள் வெட்ட அனுமதித்தது. அவர்கள் அந்த மூங்கில்களைவெட்டிச்சீவிக்குச்சிகளைக்கொண்டு போய் விற்று வந்த பணத்தில், கமிஷனுக்குச் சிறிது தொகையைச் சங்கம்பிடித்துக்கொண்டது. காட்டிலாகாவுக்குக் குத்தகைப் பணம் கொடுக்கவும் நிர்வாகச் செலவுகளுக்காகவும் கமிஷன் பயன்படுத்தப்பட்டது. சங்கமும் லாபகரமாக நடைபோட்டது. 80—81ம் வருடம் மட்டும் ஒரு லட்சம் ரூபாய் லாபம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அஞ்செட்டி பகுதியே பொருளாதாரத்தில் சற்று உயர்ந்து நின்றது. இன்று ஈயடித்துக் கொண்டிருக்கும் கடைகளுக்கெல்லாம் அன்று நல்ல பிஸினஸ். ஆனால் இந்தச் சந்தோஷம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. என்ன காரணம்? சங்கத்தில் பொருளாளராக இருந்த சாம்ராஜ், என்ன நடந்தது என்பதைச் சோகத்துடன் சொல்ல ஆரம்பித்தார்....

மெம்பர்கள் கொண்டு வரும் சரக்குகளை ஊதுவத்தி செய்பவர்களே நேரடியாக அஞ்செட்டிக்கு வந்து குச்சிகளின் தரத்திற்கேற்ப விலையை நிர்ணயித்து வாங்கிக் கொண்டு போனார்கள். இப்படி வாங்கிக் கொண்டு போனவர்கள் அதிக லாபம் அடைவதாகக் கருதிய நாங்கள், அதைத் தடுத்து இனி சங்கம் மட்டுமே நேரிடையாக விற்பனை செய்வது என்று தீர்மானித்தோம். குச்சிகளின் தரம் எப்படி இருந்தாலும் கிலோவுக்கு இவ்வளவு ரேட் என்று எடைக்கு விலை வைத்தோம். பல மெம்பர்கள் குச்சியின் எடை அதிகமாக இருக்க வேண்டுமென்று காய்ந்த குச்சிகளையும் தண்ணீரில் நனைத்துக் கொண்டு வர ஆரம்பித்தார்கள். இதன் காரணத்தால் நாங்கள் தேன்கனிகோட்டையிலும், பெங்களூரிலும்வைத்த விற்பனை நிலையங்களில், எங்கள் மெம்பர்கள் கொடுத்த குச்சிகள் நல்ல விலை போகவில்லை. இதற்கிடையில் எங்கள் சங்கத்திற்கு நிர்வாக இயக்குனர், சார்பதிவாளர் போன்றவர்களை அரசு நியமித்தது. இவர்களுக்கெல்லாம் சம்பளம் எக்கச்சக்கம்! ஆக எல்லாச் செலவுகளும் சேர்ந்து எங்கள் தலையில் உட்கார்ந்து விட்டன. அகலக்கால் வைத்து விட்டோமே என்று வருந்தினோம். என்ன பயன்? 81 — 82 இல் சங்கத்திற்கு 32,000 ரூபாய் நஷ்டம். சங்கம் மூடப்பட்டது. அதனால்தான் மறுபடியும் திருட்டுத்தனமாக மூங்கிலைக் கொண்டு வந்து சீவி அதிகாரிகள் கண்களில் மண்ணைத் தூவிப் பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

''சங்கம் இல்லாததால்தானே இந்த நிலை ஏற்பட்டது! சங்கத்தை மறுபடியும் செயல்பட வைத்து, காட்டிலாகா நிலங்களையும் எங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கச் செய்தால் எங்கள் பகுதி மக்கள் இந்த அரசை வாயாரப் புகழ்வார்கள். அரசுக்கும் இதுவரை எத்தனையோ விண்ணப்பங்கள் அனுப்பியாகிவிட்டது. சமீபத்தில் கூட அமைச்சர் விஜயலட்சுமி பழனிச்சாமி இந்தப் பகுதிக்கு வந்த போது எங்கள் நிலையை விளக்கினோம்! ஆனால் இதுவரை ஒன்றும் நடக்கவில்லை! இன்று பத்தாயிரம் பேர் வீட்டில் அரிசி வாங்குவது காட்டிலாகா அதிகாரிகள் கையில்தான் இருக்கிறது!'' என்று சொல்லி முடித்தார் சாம்ராஜ்.

''சந்தன மரங்களையும், யானையைக் கொன்று விட்டுத் தந்தங்களையும் எடுத்துச் செல்லும் சமூக விரோதிகளுக்குத் துணை நிற்கும் அதிகாரிகள், எங்கள் மேல் கொஞ்சம் கருணை வைத்தால் என்ன? எங்கள் வயிற்றில் அடிப்பது ஏன்? பல சமயங்களில், யானையைக் கொன்றுவிட்டுத் தந்தங்களை எடுத்துச் சென்றவுடன், இறந்து போன யானையைப் பள்ளம் தோண்டிப் புதைப்பதற்கு அஞ்செட்டி பகுதிகளிலிருந்துதான் ஆட்களைக் கூட்டிச் செல்வார்கள், அதிகாரிகள்!'' என்று சொன்ன சின்னச்சாமி என்




* வெங்கட்ராமன் * நூர் முகமது

* சாம்ராஜ் * சின்னச்சாமி




பாலாஜி வெட்கிரைண்டர்

ஊறவைத்த உணவு தானியங்கள்: மசாலா, சட்னி போன்றவைகள்
அரைப்பதற்கு வீட்டிற்குத் தேவையான ஈர அரவை மிஷின்கள்
தூசி துரும்புகள் விழாமல் பாதுகாக்கும் நவீன ரிங் வசதியுடன்.



வீட்டின் தேவைக்கும்
உணவு விடுதி
சிற்றுண்டி நிலையம்
மற்றும்
தொழில் ரீதியான
வகைகளுக்கும்

- சத்தமில்லாத ஓட்டம்
- பாதுகாப்புள்ள அமைப்பு முறை
- தேவைக்குத் தகுந்தாற் போன்ற அளவுகள்
- நீடித்த உழைப்பு
- எளிதான பராமரிப்பு

விற்பனையாளர்:

அருணா & கோ.

தலைமை நிலையம்:
340, T.H. ரோடு
சென்னை-600 021.
தொலைபேசி: 553644 552728

534, T.H. ரோடு
சென்னை-600 021.

கிளைகள்:
1, நரசிங்கபுரம் தெரு
சென்னை-600 002.
தொலைபேசி: *566251*

அருணா & கம்பெனி
669, அண்ணா சாலை,
ஆயிரம் விளக்கு, சென்னை-600 006 தொலைபேசி: 89997

பவர் நியாயமாக நடப்பவர்களையும் காட்டிலாகாவினர் விட்டு வைப்பதில்லை என்று ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார்.

''சிறு அளவில் ஊதுவத்தி தயார் செய்து விற்றுக் கொண்டிருக்கும் அன்வர் என்பவர் அண்மையில் நாலாயிரம் ரூபாய்க்குப் பெங்களூரிலிருந்து மூங்கில் குச்சிகளை வாங்கி வந்து ஊதுவத்தி தயார் செய்து அஞ்செட்டி அருகில் இன்னொருவரிடம் விற்ற போது, அதிகாரிகளால் பிடிக்கப்பட்டார். இத்தனைக்கும் பெங்களூரில் வாங்கிய அந்த மூங்கில் குச்சிகளுக்கு அன்வர் ரசீது வைத்திருந்தார். ஆனால் அந்தக் காட்டிலாகா



• மெஹராஜ் முகமது



• சந்தனக் கட்டைகள் கடத்தப்பட்டதாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் லாரியும், ஊதுவத்திக்கான குச்சிகளும்...

அதிகாரிகள் ஊதுவத்திகளை எரித்துவிட்டு, கோர்ட்டில் தாக்கல் செய்வதற்குப் பச்சை மூங்கில் கட்டைகளை வெட்டி எடுத்து வந்தார்கள்! இந்தக் கொடுமைக்கெல்லாம் விடிவு காலம் கிடையாதா சார்?'' என்று கேட்டார் சின்னசாமி.

காட்டில் போய் மூங்கிலை வெட்டினால் அடி, உதை! விவசாயம் செய்யலாம் என்றால் நீர் வசதி போதாது. அப்படியென்றால் இந்தப் பகுதி மக்கள் பிழைப்பதற்கு வேறு என்னதான் வழி?

''இருக்குது ஸார் ஒரு திட்டம்!'' என்று குரல் கொடுத்தார் நூர் முகமது என்பவர்.

''மழைக்காலங்களில் இங்கு ஓடும் இரண்டு, மூன்று காட்டாறுகளின் தண்ணீரைச் சேமித்து வைக்க, இங்கு ஓர் அணை கட்ட வாய்ப்பு இருக்கிறது. கலைஞர் காலத்தில் திட்டம் போடப்பட்டது. 'தொட்ட ஹள்ள' என்ற இடத்தில் கட்டப்பட இருந்த இந்த அணைக்கான சர்வே வேலை கூட முடிந்து விட்டது. ஆனால் அப்புறம் ஒரு வேலையும் நடக்கவில்லை. 1977 இல், தேர்தல் பிரசாரத்துக்காக இந்தப் பகுதிக்கு வந்த எம். ஜி. ஆர்., 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் 'தொட்ட ஹள்ள' அணையைக் கட்டித் தருவோம்' என்றார். அவர் வந்தும் பத்தாண்டுகள் ஓடிவிட்டன. மற்ற வாக்குறுதிகளைப் போலவே இதுவும் காற்றோடு போய்விட்டது!'' என்று சோகப் பெருமூச்சு விட்டார் நூர் முகமது.

இந்த அணை கட்டும் பணியை ஆரம்பித்தால் அந்த இடத்திலேயே முதலில் சில வருடங்களுக்கு இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதோடு பிற்காலத்தில் அடிப்படைத் தொழிலே விவசாயமாக மாறிப் போகும்; அடி, உதையெல்லாம் இருக்காது.

இப்போது இந்த மக்கள் வைக்கும் கோரிக்கை இதுதான்:

- சங்கத்துக்கு அரசு நிதியுதவி செய்து உயிரூட்டி, அதன் மூலம் அரசாங்கமே மூங்கில்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி மூங்கில்குச்சிகளைக் கிழித்தே எங்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொள்கிறோம்.
- இல்லையென்றால் தொட்டஹள்ள அணை வேலையை ஆரம்பியுங்கள்.


மேற்கண்ட இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்தால்தான் இந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைப் பிரச்னை தீரும். இது ஒருவர், இருவர் பிரச்னை அல்ல; பத்தாயிரம் பேரைப் பாதிக்கும் பிரச்னை.

— ப்ரியன்

அட்டையில்:
சிங்கக்கோட்டை கிராமத்தின் தோற்றமும்; குச்சி சீவும் அந்தக் கிராமத்துப் பெண்களும்.

வண்ணப்படங்களும் தரும
புரி மாவட்டச் செய்திகளுக்
கான படங்களும் எடுத்தவர்:
மணி

MASTER
STORY TELLER



கல்கி

ஆகஸ்டு 3'
ஆண்டு
மலர்

சுஜாதா எழுதும் மினி தொடர்

பம்பாய்த் தமிழர் சிறப்பிதழ்

—நடைபாதைத் தமிழர் முதல் நாடாளும் தமிழர் வரை

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி 1988

ரூ1000 முதல் பரிசுக் கதை



பட்டுக்கோட்டை பிரபாகர்:

என்னைக் காணவில்லை!

—க்ரைம் த்ரில்லர்

தண்டல்கார ஹெட்மாஸ்டர்?!



• பள்ளிக்கூடம்



• பாபு



• தமிழரசு

* டி. ஸி வேண்டுமா; கொடு நூறு ரூபாய்.

* எஸ். எஸ். எல். ஸி. சான்றிதழ் வேண்டுமா; 25 ரூபாய் வெட்டு.


* கம்ப்யூட்டர் ஸயன்ஸ் பிரிவில் சேர்க்க வேண்டுமா; எடு 700 ரூபாய்.

— இப்படியாக லிஸ்ட் தொடர்கிறது. குற்றச்சாட்டுக்குள்ளாகி இருப்பவர் ராயக்கோட்டை மேல்நிலைப்பள்ளித்தலைமையாசிரியர் சீனிவாசன். இவை மட்டுமா? அ.தி.மு.க. பிரமுகர் தமிழரசு பெரிய பட்டியலே போட்டார்!

"ஸார், இந்தப் பள்ளியில் உள்ள எல்லாக் கட்டடங்களுமே ஊர்ப் பொதுப் பணத்தில் கட்டப்பட்டவைதான். அப்படியிருக்க, கிராமத்து ஏழை மாணவர்களிடம் கட்டட நிதி கொடு என்று ஐம்பது நூறும் வாங்கிக் கொள்கிறார். பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டடம் கட்டுவதற்காக ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. ஆனால் ஊர்ப் பொதுப் பணத்தில்கட்டப்பட்ட ஒரு பள்ளிக் கூடக் கட்டடத்தையே பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டத்திற்குக் கொடுத்துவிட்டு அந்த ஐயாயிரம் ரூபாயை அபேஸ் செய்துவிட்டார். பிற்பட்ட வகுப்பினருக்கு வருகிற ஸ்காலர்ஷிப்பைக் கொடுப்பதில்லை. அதுபோல அரசின் இலவசப் புத்தகங்களைப் பையன்களுக்கு விலைக்கு விற்கிறார். இந்தப் பள்ளி கோ — எஜுகேஷன் பள்ளி. தனியாக ஒரு பெண்கள் பள்ளி திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த ஹெட்மாஸ்டர் குறுக்கில் நிற்கிறார்..." — படபடத்துத் தள்ளினார் தமிழரசு.



• ரமேஷ்



• பாபு

"என்ன ஸார், நீங்கள் ஆளும் கட்சிப் பிரமுகர். உங்களால் கூட இந்த ஹெட்மாஸ்டரின் செய்கைகளைக் கேள்வி கேட்க முடியவில்லையா?"

"ஒன்றும் நடக்கவில்லை ஸார். மேல் அதிகாரிகள் அவருக்குப் பக்க பலமாக இருக்கிறார்கள். எங்கள் புரட்சித் தலைவருக்கு இரண்டு முறை பெட்டிஷன் போட்டுவிட்டேன். ஒரு நடவடிக்கையும் இல்லை!"

தமிழரசு சொல்வது உண்மைதானா என்று அறிந்து கொள்ள அந்தப் பள்ளியில் 1984—85ம் வருடம் படித்த ரமேஷ் என்ற மாணவனைக் கேட்டபோது, "உண்மைதாங்க. என்கிட்ட டி.ஸி. கொடுக்க நூறு ரூபாய் கேட்டார். 'நாற்பதுதாங்க கொடுக்க முடியும்' என்று சொன்னேன். 'சரி அதையாவது கொடு' என்று வாங்கிக் கொண்டார்!" என்றான் ரமேஷ்.

இதற்குள் எங்களைச் சுற்றி சிறு கும்பல். கூட்டத்திலிருந்து ஒவ்வொருவரும் ஒரு குற்றச்சாட்டைத் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"தற்போது தர்மபுரியிலுள்ள பள்ளி ஒன்றில் பணிபுரியும் ரங்கசாமி என்ற ஆசிரியர் அறிவியலில் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். அவர் இந்தப் பள்ளியில் ஆசிரியராக இருந்தபோது அறிவியல் ஆர்வம் காரணமாகப் பள்ளி முடிந்த பின்பும் பள்ளியிலுள்ள சோதனைச் சாலையில் பரிசோதனைகளைச் செய்து கொண்டிருப்பார். அவருடைய அதிக ஆர்வத்தை கண்டு பொருமை கொண்ட ஹெட்மாஸ்டர், ரங்கசாமியைப் பள்ளி நேரம் முடிந்த பின்பு இருக்கக் கூடாது; ரெஸ்ட் ரூமில் சிகரெட் பிடிக்கக் கூடாது என்றெல்லாம் கண்டிஷன் போட்டார். அந்த ஆசிரியர் மனம் நொந்து தர்மபுரிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டார். தேசிய அளவில் பல விருதுகள் வாங்கிய அந்த ஆசிரியரை 'டீஸ்' பண்ணிய ஒரு குற்றத்துக்காகவே இவரை ஹெட்மாஸ்டர் பதவியிலிருந்து விலக்க வேண்டும்!" என்று வேகமாகச் சொன்னார் உள்ளூர் டாக்டர் பாபு.

தொடர்ந்து, "1980ல் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் பெரும்பாலான மாணவர்கள் பாஸ் செய்தார்கள். ஆனால் இந்த ஹெட்மாஸ்டர் வந்தவுடன் தேர்ச்சி பெற்றவர்களின் சதவீதம் குறைந்து கொண்டே வந்தது. (இது உண்மைதான் என்று பின்னர் பள்ளியில் எழுதியிருந்த சார்ட்டைப் பார்த்துத் தெரிந்து கொண்டோம்) இவரை இங்கேயிருந்து மாற்றினால்தான் எங்கள் ஊர்ப் பையன்களுக்கு விடிவு காலம்" என்று முடித்தார் டாக்டர் பாபு.

இந்த ஹெட்மாஸ்டர் சின்ன விஷயங்களில்கூட பணத்தைக் குறிக்கோளாக வைத்துத்தான் செயல்படுவார் என்பது நியூஸ் ஏஜெண்ட் ரவி சொல்லித் தெரிந்தது. விடுமுறையின்போது 'பள்ளிக்கு தினசரிப் பேப்பர்களைப் போடாதே' என்று கூறி நிறுத்திவிட்டுப், 'போட்டதாக ரசீது கொடு' என்பாராம்!

இவ்வளவு குற்றச்சாட்டுக்களுக்கும் இந்த 'பலே' ஹெட்மாஸ்டர் என்னதான் பதில் சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள அவரைச் சந்தித்தோம்.

அட்மிஷன் பிஸியில் இருந்த அவர், 'அப்புறம் வாருங்களேன் பார்க்கலாம்' என்று எங்களை முதலிலேயே துரத்திவிட நினைத்தார். ஆனால் நாங்கள் விடாமல் மீண்டும் மீண்டும் அவர் பதிலைப் பெற முயற்சி செய்த போது, "மிஸ்டர், நீங்க யாரு? இது பற்றியெல்லாம் கேட்க உங்களுக்கு உரிமை கிடையாது!" என்று முதலில் கடுகாக வெடித்

தாலும், சற்று நேரம் நிதானித்துவிட்டுச் சொல்ல ஆரம்பித்தார்:

''நல்லது செய்தாலே இந்த ஊர் மக்களுக்குப் பிடிக்காது ஸார். இங்கே இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் பார்த்தால் விகிதாசாரப்படி பொருத்தமாக இராது. இந்தப் பள்ளிக்கு நான் எவ்வளவோ செய்ய நினைக்கிறேன்.....'' என்கிற ரீதியில் பல விஷயங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனாரே தவிர, அவர் மீதுள்ள குற்றச்சாட்டுக்களைப் பற்றி ஒன்றும் பேசவில்லை.

''ஸார் குற்றச்சாட்டுக்களுக்கு உங்கள் பதில்?''

''அவை விசாரணையில் இருக்கின்றன. அவை பற்றி நான் பேசக்கூடாது'' என்றார்.

''சரி, இது போதும். வருகிறோம் ஸார்!'' என்று வெளியில் வந்தோம். பள்ளி ஆசிரியர்கள் இருவர் எங்களருகில் வந்து மற்றவர்கள் சொன்ன அதே குற்றச்சாட்டுக்களை மீண்டும் எங்களிடம் கிசுகிசுத்துச் சொன்னார்கள்.

குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடக்கிறது என்று ஹெட்மாஸ்டர் கூறியதால் ஏதோ புகைய ஆரம்பித்திருப்பது புரிகிறது. விசாரணை சீக்கிரம் முடிந்து விஷயம் வெளியே வந்து தப்புச் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டால் சரி.

— நமது நிருபர்



ஒரு வித்தியாசமான கேரக்டர்!

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் இணையத்தின் தலைவர் பதவிக் காலம் ஆறே மாதங்கள்தான். ஆனால், மூன்றாவது முறையாக 'எக்ஸ்டென்ஷன்' பெற்று இன்னும் அதே பதவியில் அழுத்தமாக உட்கார்ந்திருப்பவர் தருமபுரி தொகுதியின் முன்னாள் எம். எல். ஏ. அரங்கநாதன்.

'இது எப்படி சாத்தியமாயிற்று?' என்று கேட்டால்,

''இது தலைவர் (எம். ஜி. ஆர்.) என் மீது எத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதற்குச் சாட்சி'' என்கிறார் அரங்கநாதன்.

தலைவருக்குத் தம் மீது உள்ள நம்பிக்கைக்குச் சான்றாக அவர் மேலும் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்:

பேட்டரில் ஒரு கல்யாணத்துக்கு வந்திருந்த எம். ஜி. ஆர். இவரைப் பார்த்ததும், ''என்ன, எனக்கு வர்ற புகார்லே பாதிக்கு மேல உன்னைப் பத்தித்தான் வருது'' என்றாராம். உடனே இவர், ''என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா தலைவரே!'' என்றாராம். அவ்வளவுதான்!

இதன் பிறகுதான் தருமபுரி தொகுதி இவருக்கு ஒதுக்கப்பட்டதாம்! ஒருமுறை வென்றார். இந்த முறை தேர்தலில் தோற்ற பிறகு கிடைத்திருப்பது பால் உற்பத்தியாளர் இணையத்தின் தலைவர் பதவி!

ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதில் எத்தனை வசதி பாருங்கள்! தேர்தலில் வென்றாலும் பதவி; தோற்றாலும் பதவி! புகார்கள் குவிந்தாலும் தொகுதி; புகார்கள் இல்லையென்றாலும் தொகுதி!

இவ்வளவு சுவாரஸ்யமான எம். ஜி. ஆர். ஆட்சியின், அதிசுவாரஸ்யமான மனிதர் அரங்கநாதனைப் பற்றிப் பல்வேறு தரப்பின

ரும் படுசுவாரஸ்யமான குற்றச்சாட்டுக்களையும் கருத்துக்களையும் கூறவே அவசியம் அவரைப் பார்த்தே தீர வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு போனோம்.

பேசினோம், பேசினோம்; இரவு பன்னிரண்டு மணி வரை பேசினோம். நிறையப் பேசுகிறார்:

''உங்களுக்கு இங்கே நிறைய எதிர்ப்பு போல் இருக்கிறதே?''

''அப்படித்தாங்க இருக்கும்; அதெல்லாம் பார்த்துப் பயந்தா முடியுங்களா?''

''நிறையச் சம்பாதித்து விட்டீர்கள் என்று...''

''நான் அரசியலுக்கு வந்து சொத்துச் சேர்க்கணும்னு அவசியமே இல்லே. நான் பரம்பரைப் பணக்காரன். இந்த வீடு நூறு வருஷ வீடு. எங்க குடும்பச் சொத்தாக நிறைய நிலம் இருக்கிறது. நான் தலை எடுத்து, எங்க குடும்பச் சொத்தை அழிக்காம, என் உழைப்பினாலே பெருக்கியிருக்கேன்! அதான் விஷயம்.''

இவர் எம். எல். ஏ.வாக இருந்த போது, திருவள்ளுவர் டிரான்ஸ்போர்ட் டிரைவர் ஒருவரை அடித்துவிட்டார் என்று புகார். இதுபற்றிக் கேட்டபோது சொன்னார்:

''ஆமாங்க! பஸ் ஸ்டாண்டுக்குப் போகிற வழியிலேயே என் வீடு. அன்னிக்கு திருவள்ளுவர் பஸ்ல தர்மபுரி வந்தேன். வழியிலே ஒரு இடத்துல பஸ்ஸை நிறுத்தச் சொன்னேன். டிரைவர் நிறுத்தலே; இன்னும் கொஞ்ச தூரம் போனதும், மறுபடி பஸ்ஸை நிறுத்தச் சொன்னேன். கேட்கலே! நான் ஒரு அ. தி. மு. க. எம். எல். ஏ. நான் சொல்வதை ஒரு டிரைவர் மதிக்காததைப் பார்த்ததும் எனக்குக் கோபம் வந்தது. விட்டேன், ஒரு அறை! பின்னே ஒரு எம். எல். ஏ. சொன்னாக் கேக்க வேணாம்?''

சட்டத்துக்குப் புறம்பான ஆக்கிரமிப்புகளை அகற்றியபோது கமிஷனருக்கும், எம். எல். ஏ. யின் தம்பிக்கும் தகராறு வந்து, கமிஷனரை மற்றவர் அடித்துவிட்டார் என்கிற செய்தியைப் பற்றிக் கேட்டபோது, அரங்கநாதன் கூறினார்:

''என் தம்பி கொஞ்சம் அவசரக்காரன்; கையைக் காலை ஆட்டி, ஆவேசமாய்ப் பேசுவான். அதை வைத்துக் கதை கட்டிவிட்டார்கள். அவ்வளவுதான்!''

தர்மபுரியின் சில பகுதிகளில் அரங்கநாதனை எதிர்த்து வாசகங்கள் எழுதிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. இது பற்றிச் சொன்னார்:

''இது நக்ஸலைட்டுங்க வேலை; கிடக்கு, போஸ்டருங்களை விடுங்க; 'ரௌடி ரங்கன்'னு என்னைப் பற்றி ஒரு புஸ்தகமே போட்டிருக்காங்க. என்னை எதிர்த்து ஊர்வலம் நடத்தினாங்க. அதுல பின்னாலயே நானும் போனேன்! இந்தப் பசங்களுக்கெல்லாம் பயப்பட்ற ஆளு நான் இல்லே!''

ரோடு போட, பாலம் கட்ட என்று பினாமி பெயரில் காண்டிராக்ட் எடுத்துக் கொண்டு, வேலையைக் குறித்த காலத்தில் முடிப்பதில்லை;



உதவியாளர்: சார் உங்கள் மகன் பிரபுவை நம்ம தொகுதி மக்கள் 'கிட்நாப்' செய்து வைத்திருக்கிறார்கள்!
எம். எல். ஏ.: எதுக்கு? அவங்களுக்கு என்ன வேண்டுமாம்?
உதவியாளர்: நீங்க ஒருமுறையாவது நம்ம தொகுதிக்கு வரணுமாம். அதுக்குத்தான் இந்த ஏற்பாடாம்!
— கலைப்பிரியன்.

அதிகாரிகளை மிரட்டி காண்டிராக்ட் காலத்திற்கு எக்ஸ்டென்ஷன் வாங்கிக் கொண்டே போவார் என்று ஒரு குற்றச்சாட்டு. கொல்லம்பட்டி பாலத்தை, எக்ஸ்டென்ஷன் கொடுத்தும் முடிக்காததால், காண்டிராக்ட் ரத்து செய்யப்பட்டது. (தேர்தலில் தோற்ற பின்தான் ரத்து செய்யப்பட்டது.) தருமபுரி நீச்சல்குள வேலை (பணம் போதவில்லை என்று காரணம் காட்டி) பாதியில் நிற்கிறது. இதன் காண்டிராக்டர் அரங்கநாதனின் உறவுக்காரர்தான்.


இவை பற்றிக் கேட்டபோது அரங்கநாதன் கூறினார்: ''நானும், எங்கள் சொந்தக்காரர்களும் பல வருஷங்களாகக் காண்டிராக்ட் வேலை செய்து வருகிறோம். நான் ஆளுங் கட்சிக்காரன் என்பதால், அவர்கள் அரசாங்க காண்டிராக்ட்களை எடுக்கக் கூடாது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம்? என் செல்வாக்கை உபயோகித்து, சட்டத்துக்குப் புறம்பாய்க் காண்டிராக்ட் பெறப்பட்டால் தவறு. அவர்களும் மற்றவர்களுடன் போட்டி போட்டு, வேலையை எடுத்துக் கொள்கிறார்கள். நான் எம். எல். ஏ., ஆளுங் கட்சிக்காரன் என்பதால் என் குடும்பத்தினருக்கு காண்ட்ராக்ட் எடுக்கும் உரிமைகள் கிடையாதா?''


இவரது தடாலடி நடவடிக்கைகளால் நன்மை விளைவதும் உண்டு: உதாரணமாக ஒரு கிராமத்துக்குப் போக வேண்டிய தண்ணீர் வாய்க்கால் தேசிய நெடுஞ்சாலையைக் கடக்க வேண்டும். சாலையை வெட்டிக் குறுக்கே குழாய் போட, நெடுஞ்சாலைத் துறையினரின் அனுமதி தேவை. அதற்கு மாதக் கணக்கில் தாமதம் ஆகும். பார்த்தார் அரங்கநாதன். ஆட்களை வைத்து, இரவோடு இரவாய்ச் சாலையை வெட்டி, குழாய்கள் போட்டு, மறுபடி மேலே ரோடையும் போட்டு, விடிவதற்குள் கச்சிதமாய்க் காரியத்தை முடித்து விட்டார். பிரச்னை தீர்ந்தது! அரசாங்கம் இதைக் கவனித்ததோ இல்லையோ, கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவேயில்லை!

அரங்கநாதன், ஒரு வித்தியாசமான கேரக்டர்தான்!

— மௌலி


தேசிய
ஒருமைப்பாடு
பர்னாலா


ஜெயவர்த்தனே
புதுச் சமரசத் திட்டம்
திட்டத்திற்கு
விளக்கம்
ம்.ம். சீக்கிரம்!
அமிர்தலிங்கம்
சிதம்பரம்
ஈழப் போராளிகள்


எம்.ஜி.ஆர்
ஆட்சிக்குத்
தொடக்கம்
தான் உண்டு.
முடிவே
கிடையாது.
வாழ்க புரட்சித்
தலைவர்.
வீரப்பன்
கண்
டாக்டர்
எம்.ஜி.ஆர். ஆட்சிக்குத்
தொடக்கம் தான் உண்டு
ஊழலுக்கு
முடிவே கிடையாது!



கல்கி

1986 ஜூலை 13
மலர் 44 இதழ் 50
அக்ஷய ஆனி 29



பொற்காலத்தில் நடந்த பித்தளைச் சாதனைகள்!

இடைஞ்சல்தான்; போக்குவரத்துக்கு இடையூறுதான்; ஆனாலும் ஊர்வலம் போகட்டும், குறுக்கே நிற்கவில்லை; கூட்டங்கள் நடக்கட்டும், தடை கூறவில்லை; ஒன்பதாண்டுச் சாதனைகளை மேடைகளில் முழங்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை; கட்சிப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதட்டும், ஏன் என்று கேட்கவில்லை.

ஆனால் பெரிய பெரிய நாளிதழ்களில் பக்கம் பக்கமாக வாடகைக்குப் பெற்று விளம்பரங்களை வெளியிடும்போது, அதுவும் அரசுச் செலவில் வரிப் பணத்தை இதற்காகக் கொட்டிக் கொடுக்கும்போது, தட்டிக் கேட்கத்தான் வேண்டியிருக்கிறது. இரண்டு பக்கம், நாலு பக்கம் என்று 'புரட்சித் தலைவர்,' 'பொன்மனச் செம்ம'லின் படங்களுடன் 'சாதனைகள்' விளம்பரப்படுத்தப்படும் போது பார்க்கிற மக்கள் பிரமித்துப் போகலாம். ஆனால் இது மோசடி — இரு விதங்களில்:

முதலாவது, கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசமின்றி அரசு விளம்பரங்களைக் கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்கிற குயுக்தி. வரி கொடுப்பவர்கள் ஆளும் கட்சிக்காரர்கள் மட்டுமல்ல என்பது தெரிந்திருந்தும் அதை மதிக்காத ஆணவம்.

ஒன்பது ஆண்டுகளில் அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று இந்த விளம்பரங்கள் பறை சாற்றுகின்றன. செய்யத் தவறிய விஷயங்கள் பற்றி ஒரு வார்த்தை கூறுகிறதா? இல்லை! செய்தவற்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறதா? அதுவும் கிடையாது! கோப்புகள் ஆமை வேகத்தில் நகர்வதையும் லஞ்ச ஊழல் அசுர வேகத்தில் பரவுவதையும் பற்றிப் பேசுகிறதா? மூச்!

'எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளவா விளம்பரம் செய்வோம்?' என்று கேட்காதீர்கள்! இந்த விளம்பரங்கள் அரசாங்கத்தின் கோபுரச் சின்னம் தாங்கி வெளிவராமல் கட்சியின் இரட்டை இலைச் சின்னத்துடன் வெளிவந்திருந்தால் விவாதத்துக்கே இடமில்லை.

இனி இரண்டாவது மோசடி: சாதனை சாதனை என்கிறார்களே, பட்டியலிடப்படும் அந்தச் சாதனைகள் என்ன? மிகப் பெரும்பாலும் சமூக நலத்திட்டங்களே. அதாவது, சத்துணவுத் திட்டம், சீருடைத் திட்டம், இலவச பாடநூல் திட்டம், தன்னிறைவுத் திட்டம், கடன் நிவாரணம், இலவச மின்சாரம், இடு பொருள் மான்யம், வீட்டு வசதித் திட்டம் போன்ற பலப்பல. இவையெல்லாம் செலவினங்கள்; வருவாய்க்கு வழி காணாத செலவினங்கள். வோட்டுப் பெற உதவுமேயன்றி மாநிலத்தின் வளம் பெருக உதவாது. இவற்றை வேண்டாம் என்று கூற முடியாது. ஆனால் இவை மட்டுமே சாதனையாகி விடாது என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும். இவை எந்த லட்சணத்தில் அமுல்படுத்தப்படுகின்றன என்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாநிலத்தின் வளம் பெருக்கும் இனங்களான தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, மின்சார உற்பத்தி போன்றவைதாம் உண்மையான முன்னேற்றத்தின் அளவுகோல். இந்த இனங்களில் தமிழக அரசின் சாதனை — என்னதான் அமைச்சர் வீரப்பன் அறிக்கை விட்டாலும் கூட — வேதனைதான்! ஒன்பது ஆண்டுகளில் இந்த அளவுக்குத் தொழில்—விவசாய உற்பத்தி, மின் உற்பத்தி நடந்திருக்கிறது என்று சொன்னால் போதாது. அது சாதனையும் ஆகாது. எந்த ஒரு கட்சி ஆட்சியில் இருந்தாலும் பத்தாவது ஆண்டுத் தொடக்கத்தில் ஏதேனும் வளர்ச்சி இருக்கவே செய்யும். எனவே, இந்தத் துறைகளில் வளர்ச்சி, அகில இந்திய ரீதியில் ஒப்புநோக்குகையில் எப்படி இருக்கிறது? மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம் போன்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டால் என்ன நிலைமை? என்றெல்லாம் ஆராய்ந்தால்தான் உண்மைகள் புரியும். அப்படிப் பார்க்கும்போது தமிழக அரசின் ஒன்பதாண்டுச் சாதனை பெருமைப்படும்படியாக இல்லை. அகில இந்திய ரீதியில் வருவாய் வளர்ச்சி 5.25 சதம் எனில் தமிழகத்தில் 3.8 சதம்தான்! கடந்த ஆறேழு ஆண்டுகளாகவே அகில இந்திய ரீதியில் நடந்து வரும் தொழில் புரட்சியின் ஒரு சின்னஞ் சிறிய சலசலப்புத்தான் இங்கு ஏற்பட்டிருக்கிறதேயொழிய, மகத்தான முன்னேற்றம் ஏதுமில்லை. தமிழக அரசு குறட்டை விடுவதை நிறுத்தி, விழிப்புணர்ச்சி பெற்று, தொழில் வளர்ச்சியையும் பொருளாதார நிர்வாகத்தையும் கவனித்தால்தான் உண்டு. அது நடக்கப் போகிறதா? சந்தேகமே!

இந்த லட்சணத்தில் ஊருக்கு ஊர் சாதனைத் தூண்கள் நிறுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கு ஒதுக்கப்படக் கூடிய அரசு நிலம், பொதுமக்களின் சொத்து. கட்சிப் பிரசாரத்துக்கு உதவ அவற்றை ஆர்ஜிதம் செய்வது பெரும் குற்றமாகும்.

வேடிக்கை; அதைவிட வேடிக்கை!

* எம். ஜி. ஆர். கொடுத்த விளம்பரம் வேடிக்கை என்றால் சுப்பு கொடுத்த விளக்கம் அதை விட வேடிக்கை; படு அபத்தம்.

திவாகதுருகம்,ஜி. ஆர். கிருஷ்ணன்

* முதல்வர் எம். ஜி. ஆரின் அரை வேக்காட்டு அறிக்கையினை பண்பட்ட பலர் பீஸ் பீஸாகக் கிழித்திருந்தனர்.

தோட்டக்குறிச்சி,

இரா. வளையாபதி.

* சுஹாசினியின் பேட்டி, ரொம்ப வித்தியாசமாக, ஒரு ஃப்ரெண்டிடம் பேசுவது போல் ஜோவியலாக இருந்தது.

கோவை, உமார்த்தி.

* கவர் ஸ்டோரியாக கமலஹாசனின் சிறப்புப் பேட்டி. நடுப்பக்கத்தில் விமலின் ரசிகர்கள் ஜனங்களைப் பரிதவிக்க விட்டுவிட்டுக் கட் அவுட்டுக்குப் பால பிஷேகம் செய்த மூடத்தனத்தை அற்புதமாகக் கூறிய பட்டுக்கோட்டை பிரபாகரின் 'பால்' சிறுகதை! சரியான ஆள் சார் நீங்க!''

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

* விக்ரம் படம் பற்றிய கமலின் சிறப்புப் பேட்டி சூடு + சுவை. இக்கட்டான கேள்விகளுக்குக் கூட மிகத் திறமையாகவும், துணிச்சலுடனும், பதிலளித்த கமல் பாராட்டுக்குரியவர்.

சைதை, வி. முரளி.

* கமல் ஒரு தாஜ்மகாலைக் கட்டநினைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இமயமலை — எவரெஸ்ட் சிகரத்தை எட்டிடப் போகிறேன் என்று விளம்பரமும் — செய்திகளும் கொடுத்துவிட்டுப் பரங்கி மலையைக் கூட ஏறிடாமல் ரசிகர்களை ஏமாற்றியதை அவர் ஒப்புக்கொண்டே தீர வேண்டும்.

பெங்களூர், ப. மூர்த்தி.

* கவர்ஸ்டோரியில்நாட்டில்நடக்கும் அராஜகங்களைப் பற்றிப் படித்துப் படித்து ரணகளமாகியிருந்த மனத்திற்குக் கமலின் பேட்டி இதமாக இருந்தது. கேள்விகளில் வேலின் கூர்மை இருந்ததென்றால் பதில்களில் வேங்கையின் பாய்ச்சல் இருந்தது!

கோவை—9, கோ. க. சுரேஷ்.

* வையவனின் 'அடிவேர்' மிகவும் உன்னதமான, நெஞ்சைத் தொடும் கதை!

பட்டிவீரன்பட்டி,வி.பி.ரங்கசாமி.

* வெல்டன் மிஸ்டர் கல்கி! ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்துள்ளீர்கள்! 'மாதிரிப்பள்ளி' விஷயத்தில் வாசகர்களுக்கேற்பட்ட சில சந்தேகங்களைத்தீர்த்து வைத்ததோடு, ஹிந்தித் திணிப்பு விஷயத்தில் தங்களின் முடிவான நிலையையும் உணர்த்திவிட்டீர்கள்.

குடியாத்தம் — 2,

சே. வெங்கடசுப்ரமணியன்.

* வெள்ளையரின் நிறவெறி, அதிகார ஆணவம், அநியாய மனப்பாங்கு ஆகியவற்றை எதிர்த்துத் தளராத உறுதியுடன் போராடும் தீரன் மன்டேலா பற்றிய கட்டுரை நெஞ்சைத் தொட்டது.

சென்னை—28, எம். தியாகராஜன்.

* 'உள்நாட்டு அகதிகள்' தலையங்கம் படித்தேன். ஹிந்துக்கள் அடித்து விரட்டப்படுவதை வன்மையாகக் கண்டித்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

கொடைக்கானல், வி. பாலன்,

* ஹிந்துக்கள் பஞ்சாபை விட்டு வெளியேறுகிறார்கள்என்பதுஉண்மையே. ஆனால், அதற்காக நீங்கள் சொல்லும் தீர்வுதான் என்னை அதிர்ச்சியடைய வைத்தது. பஞ்சாப் மக்கள் 'காலிஸ்தான்' கோஷத்துக்கு எந்தவித ஆதரவும் தரத் தயாரில்லை. அதனால்தான் பர்னாலா அரசால் தாக்குப் பிடிக்க முடிகிறது. அதுவும் சென்ற சில வாரங்களில் அந்த அரசு பயங்கரவாதிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த நேரத்தில், பஞ்சாப் ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கோரியும், பர்னாலா அரசைக் காப்பாற்றக் கோரியும் நாம் குரல் கொடுக்க வேண்டுமே தவிர, பஞ்சாபிற்குள் ராணுவத்தை அழைக்கக் கோரக் கூடாது.

கரூர், சே. பாஸ்கர்.

* ஒரு வாசகரின் கேள்விக்குத் தாங்கள் அளித்துள்ள பதிலில், "சீசனில்தான் குற்றாலத்தை அனுபவிக்க முடியும்...'' என்று கூறியுள்ளீர்கள். சமீப காலமாக இந்தப் பகுதியில் ஒரு ஜோக் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளது. அது:

சீசனுக்கு வெளியூரிலிருந்து குற்றாலத்திற்கு வந்த ஓர் அன்பர் குற்றாலத்தில் உள்ள தம் நண்பர் வீட்டுக்குச் சென்றார். அப்போது அந்த நண்பர் வீட்டில் இல்லை. நண்பரின் துணைவியார், "அவர் தென்காசிக்குப் போயிருக்கிறார், குளிப்பதற்கு!'' என்றார்!

இந்த ஆண்டு வழக்கமாக நடைபெறும் சாரல் விழா நடைபெறவில்லை. காரணம் சாரல் விழாதது தான்!

வெள்ள கால், இரா. சுந்தையா.

கல்கியால் நிரந்தரமானோம்!

* கடந்த 18.5.86, தஞ்சை மாவட்டத்தில் கல்கி—II இதழில் மாவட்ட கலெக்டரை பேட்டி கண்டபோது எனது வேண்டுகோளுக்குச் சிறப்பளித்து மாவட்ட நவீன அரிசி ஆலைகள் குறித்துக் கேட்கப்பட்ட எனது விண்ணப்பத்தினை கலெக்டரிடம் சமர்ப்பித்திருந்தீர்கள். கடந்த சில தினங்களுக்கு முன்பு எங்கள் பிரச்னை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டு, இம் மாவட்டத்திலுள்ள ஆறு ஆலைகளில் முதற்கட்டமாக முறையே 54 நிரந்தரமற்ற ஊழியர்களை நிர்வாகம்நிரந்தரமாக்கி அடிப்படைச்சம்பளம்வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலாடுதுறை, ஆர். கலைச்செல்வன்.

வட்டமேஜை

கங்காணி என்றால் என்ன அர்த்தம்?





(ஓர் அரசியல்வாதி மேடையில் பேசிக் கொண்டிருக்கிறார்.)

அ.வாதி: கோவிலில் திருடர்கள் புகுந்து நகைகளைத் திருடிக் கொண்டு போவதைத் தடுக்க, இனி ஒவ்வொரு கோவிலையும் சுற்றி அகழி வெட்டி அதில் பயங்கர முதலைகளை விட ஒரு புதிய திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புரட்சித் திட்டத்தினால் இனி கோவிலுக்குள் திருடர்கள் புகுவது தடுக்கப்படும். பக்தர்கள் கோவிலுக்குள் போக ஹெலிகாப்டர்கள் வாங்கவும் உத்தேசித்துள்ளோம்!

(கூட்டத்தில் கை தட்டல். ஒருவர் கைக் குழந்தையுடன் மேடைக்கு வந்து....)

அப்பா: ஐயா! தலைவரே! இந்தக் குழந்தைக்கு ஒரு நல்ல பேர் வைச்சுக் கொடுங்க!

(அரசியல்வாதி குழந்தையை வாங்கி முத்தம் கொடுத்துவிட்டுத் திருப்பித் தருகிறார்.)

அ.வாதி: இந்தக் குழந்தைக்கு 'கங்காணி' என்று பெயர் சூட்டுகிறேன்!

(கூட்டத்தில் பெரும் கூச்சல், குழப்பம்!)

அப்பா: யோவ்! மரியாதையா கங்காணிக்கு என்ன அர்த்தம்னு சொல்லிட்டுப் போ! இல்லேன்னா விடமாட்டேன்!

அ.வாதி: வந்து..... வந்து..... சத்தியமா எனக்கு அர்த்தம் தெரியாது. அடிக்கடி பேப்பர்ல கங்காணி, கங்காணின்னு படிச்சதுனால அதே பேர் வாயில் வந்துடுச்சு. மன்னிச்சுக்குங்க!

(தமது உதவியாளருடன் அரசியல்வாதி தலைதெறிக்க ஓடுகிறார். கூட்டம் துரத்துகிறது. எதிரில் வரும் ஒரு லாரியை நிறுத்தி அதில் அரசியல்வாதியும் உதவியாளரும் ஏறித் தப்பி விடுகிறார்கள். பொழுது விடிகிறது.)

லாரி டிரைவர்: ஏங்க, பொழுது விடிஞ்சுடுச்சு! இரண்டு பேரும் இறங்கிக்குங்க!

அ.வாதி: எங்க வந்திருக்கோம்?

டிரைவர்: நீங்க இறங்கி விசாரிச்சுட்டு மெதுவா வாங்க. எனக்குப் போகணும்.

(இருவரையும் இறக்கி விட்டுவிட்டு லாரி போய்விடுகிறது. ஒரு விவசாயி வருகிறார்.)

அ.வாதி: ஏங்க இது என்ன இடம்?

விவசாயி: கங்காணி புதூர்!

அ.வாதி: என்னது! என்னது!

(பயந்து மிரண்டு ஓட்டம் பிடிக்கிறார். எதிரே இன்னொரு லாரி வர அதை நிறுத்தி ஏறிக்கொண்டு போகிறார்கள்.)

லாரி டிரைவர்: ஏங்க எந்த ஊருக்குப் போகணும்?

அ.வாதி: எங்க வேணும்னாலும் போகலாம்! இங்கிருந்து புறப்பட்டாச் சரி! பேரைக் கேட்டாலே பயமா இருக்கு!

(லாரி டிரைவர் சிரித்துக் கொண்டே ஓட்டுகிறார். சற்று நேரத்துக்குப் பிறகு வேறு ஓர் ஊரில் இறங்கிக் கொள்கிறார்கள்.)

உதவியாளர்: நல்லவேளை, அந்தப் பெயர் பலகையைப் பாருங்க! இந்த ஊருக்குக் கரும்புப் பட்டின்னு பேராம், பயப்பட மாட்டீங்களே!

அ.வாதி: ஹே, எனக்கு என்ன பயம்?

(ஒரு டீக்கடையில் சிலர் டீ குடித்துக் கொண்டிருக்க இவர்களும் டீ வாங்குகிறார்கள்.)

அ.வாதி: இந்த ஊர் எம்.எல்.ஏ. யாரு?

ஒருவன்: அவனைப் பற்றிக் கேட்காதீங்க, கங்காணிப் பயல்!

(அரசியல்வாதி திடுக்கிட உதவியாளர் அவரை ஓடாமல்பிடித்துநிறுத்துகிறார்.)

உதவியாளர்: ஏன் அப்படிச் சொல்றீங்க? கங்காணின்னா என்ன அர்த்தம்?

ஒருவன்: இது தெரியாதா? தேர்தலுக்கு முன்னே ஊர்வலம்போக இந்தத்தொகுதியிலேருந்து ஐந்நூறு ஆளுங்களைப் பணம் கொடுத்து இழுத்துக்கிட்டுப் போனாரு. அவர் முகத்தைக் கூடப் பார்க்காம தலைவருக்காகச் சின்னத்திலே வோட்டுப் போட்டோம்! ஆனா ஜெயிச்சப்புறம்கூட இந்தப் பக்கமே வரலே! என்னிக்காச்சும் அந்த எம்.எல்.ஏ. என் கண்ணிலே பட்டா.... அவன் எலும்பை எண்ணி, நொறுக்கி.....

(நறநறவென்று பற்களைக் கடிக்கிறான். ஆனால் இருவரும் பயப்படவில்லை. வேறு சிந்தனையில் இருக்கிறார்கள்.)

அ.வா: (மகிழ்ச்சியாக) ஓ! கங்காணின்னா அதுதான் அர்த்தமா!

உதவி: (சந்தோஷமாக) அப்பாடா! அர்த்தம் புரிஞ்சுது, ஒரு வழியா. எவ்வளோ நிம்மதியா இருக்கு!

அ.வாதி: அது சரி, இந்தக் கரும்புப்பட்டி எந்தத் தொகுதியைச் சேர்ந்தது?

ஒருவன்: அரியாங்குப்பம்தான். ஏன் கேக்கறீங்க?

(பதில் கூற அரசியல்வாதி அங்கு இல்லை.. ஓடுகிறார். உதவியாளர் பின் தொடர்கிறார்.)

உதவி (ஓடியபடியே): என்னங்க இது, அதுதான் அர்த்தம் புரிஞ்சு போச்சே. இன்னும் எதுக்குப் பயந்து ஓடுறீங்க?


அ.வாதி: இந்த அரியாங்குப்பம்தான்யா என்னுடைய தொகுதி!

(இன்னொரு லாரி எதிர்ப்படாதா என்று ஏங்கியபடியே இருவரும் ஓடுகிறார்கள்.)

—'628'

அடுத்த இதழ்...

தருமபுரி மாவட்டத்தில் கல்கி — II



* ஆறு வயதுச் சிறுவனா நக்ஸலைட்?
— சிறப்புக் கட்டுரை

* எம். ஜி. ஆர். முதல் மோகன் வரை



* "உங்கள் சந்திப்புக்காகவே காத்திருந்தேன்!"
— தருமபுரி கலெக்டர் பேட்டி

அந்தக் குயில்



பின்னணியில் ஒரு பாழடைந்த கோட்டை. பின்னணியில் புராணக் கதை சொல்லும் கரகரப்பான குரல் என்று படம் டைட்டில்ஸ் போடு கிறது. அப்புறம் டைட்டிலில் வந்தவர்களெல்லாம் ஆளாளுக்குப் பிரிந்து போய், மனசுக்குத் தோன்றியதையெல்லாம் தனித் தனியே காமிராவில் பிடித்து, அப்படிப் பிடித்ததையெல்லாம் திரையில் செலுத்திவிட்டார் களோ என்று எண்ணம் வருகிறது.

கோட்டை, புதையல் படமெடுக்கும் நாகங்கள், அவ்வப்போது உடுக்கை தட்டும் கிழவன், ஃப்ரேமுக்குள் அழகாய்ப் பிரவேசித்து மறையும் நாயகி, சைக்கிளில் சர்ரென்று வந்து இறங்கி எக்ஸ்பிரஷன் காட்டாமல் நிற்கும் நாயகன் என்று சரியாய்க் கோர்க்கப்படாத ஏராளக் காட்சிகள். பத்திரிகையைப் புரட்டித் துணுக்குகள் மட்டும் படிப்பது போல் இருக்கிறது!

ஜனகராஜ் பையனைக் கடத்தி, அப்பனை பிளாக்மெயில் செய்ய பிளான் போட்டு, அந்த 'யாரோ பெற்ற பையன்' அவர் தலையிலேயே கட்டப்பட்ட கதையை அவர் விவரிக்கிறாரே அட்டகாசம்! இரண்டு பெண்டாட்டிகளை



யும் சமாதானப்படுத்த இன்ஸ்பெக்டரை அவர் கூப்பிடுவதும், அந்த இன்ஸ்பெக்டர் இவரை டபாய்த்துவிட்டு இரண்டு பெண்டாட்டிகளிட மும் லீலை செய்வதும், என்னய்யா அநியாயம் இது. காக்கி உடுப்புப் போட்டவர்களை இவ்வளவு கேவலமாக்கிக் காட்ட வேண்டுமா?

முதல் மரியாதையில் 'நிலாவைத்தான் கையில புடிக்கும்' ரஞ்சனிதான் இதில் ஹீரோயின். அவர் பங்குக்கு வெறித்து வெறித்து பார்ப்பதும், அழுவதும், சிரிப்பதும் — ஒழுங்காகவே செய்திருக்கிறார். ஆனால் கடலில் எறிந்த பெருங்காயம், பாவம்!

முகத்தில் கரியைப் பூசிக் கொண்டு (கறுப்பாம்!) தோளில் தையல் மெஷினோடு அலையும் லட்சுமி நொடிக்கொரு தரம் 'அம்மாடி, அம்மாடி' என்று வீட்டுக்கு வந்தவளை விளித்துப் பேசும்போது வெகு செயற்கை!

கிராமம், பாறைகள், கடலலைகள், வானம், மேகங்கள் என்று வண்ணங் களை வாரியிறைத்திருக்கும் காமிரா பிடித்த ஸ்ரீராம் பாராட்டுக்குரியவர். கிராமிய வாடை பிறழாமல் பாடல்களுக்கு இசையமைத்த இளைய ராஜா கைகுலுக்கப்பட வேண்டியவர். அத்தனையையும் குழப்பிக் கொடுத்த டைரக்டர் செல்வராஜை.....?

— ஜெயமன்மதன்

ஓர் இளம் பெண்ணின் கண்ணீர்க் கதை!



பிரபாவதிக்கு அழுகை அழுகையாக் வந்தது. பசியால் துடித்துக் கொண்டிருக்கும் கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டதும் ஓடிப் போய்த் தாய்ப் பசுவின் மடியில் முட்டி முட்டிப் பால் குடிப்பது போல், தாயின் தோள்களில் புதைந்து கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

இன்று மட்டும்தான் அப்படி என்பதில்லை. அவள் வீட்டை விட்டு வெளியே வரும் போதும் போகும்போதும், மற்றவர்களுடைய பார்வை தன் மீது படும்போதெல்லாம் அவள் மனம் சித்திரவதைப்படும். அவள் பிறந்ததிலிருந்து கடந்த இருபத்தாறு வருடங்களாகத் தொடர்ந்து வரும் சித்திரவதைதான் என்றாலும் இன்றுதான் அவள் ரொம்பவும் ஆடிப் போய்விட்டாள். பதின்மூன்று வருஷங்களுக்கு முன்பு — தனது பதின்மூன்றாவது வயதில் தன்னோடு ஓர் அண்ணன், ஓர் அக்காள், மூன்று தங்கைகள், தாய் என்று மொத்தம் ஏழு பேரையும் நிராதரவாக விட்டு விட்டுத் திடீரென்று தந்தை மறைந்து போன போதுகூட அவள் இப்படி மனமுடைந்து போனதில்லை. இன்றுதான் அப்படியோர் அதிர்ச்சி!

அப்போது பிரபாவதிக்கு ஐந்து வயது. பள்ளிக்கூடத்தில் சேருவதற்காகத் தன் பிஞ்சுக் கைகளால் அப்பாவின் சுண்டு விரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சென்றாள்.

பள்ளித் தலைமையாசிரியர் இவளைப் பார்த்ததும், "இந்தப் பெண்ணை எப்படி சார் மற்றவர்களுடன் உட்கார வைத்துப் பாடம் சொல்லித் தர முடியும்?" என்று இவளையே மேலும் கீழுமாகப் பார்த்தார்.

"நீங்கள் நினைப்பதுபோல் இல்லீங்க சார் இது. ஏதோ வைட்டமின் குறைவாலதான் இவளுடைய உடம்பு முழுவதும் இப்படி கறுப்புக் கறுப்பாக, வெடிப்பு வெடிப்பாக

* பிரபாவதி.



தாயும் மகளும்.

இருக்கிறதாம். தொற்று வியாதி அல்லவாம். இப்போது டாக்டர்கள் சொன்ன மாத்திரைகளையெல்லாம் வாங்கிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். குணமாயிடும்" என்றார் அப்பா.

ஆனாலும் அந்த ஹெட்மாஸ்டர் திருப்தியடையவில்லை. கடைசியில் 'இது தொற்று வியாதி அல்ல!' என்று டாக்டரிடம் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த பிறகுதான் இவளைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டார்.

இருந்தாலும் மற்ற குழந்தைகள் இவளைக் கொஞ்சம் ஒதுக்கியே வைத்தன. விளையாட்டுக்களின்போதுகூட இவள் தனியாகத்தான் விளையாட வேண்டும் என்கிறபோது ஏற்பட்ட அந்தத் தனிமை உணர்வு தந்த சித்திரவதை கொஞ்சநஞ்சமல்லதான் என்றாலும் அதுவும் இன்றைக்கு ஏற்பட்டதைப் போல் அத்தனை கொடூரமானதாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியொரு பாதிப்பு இன்றைக்கு!

அக்காளைப் பெண் பார்க்க வந்த அன்றுகூட அப்படித்தான் நடந்தது. மாப்பிள்ளை வீட்டார் தங்கள் நெருங்கிய சொந்தக்காரர்கள்தான் என்றாலும் அவர்களோடுகூட வந்தவர்கள் இவளை ஒருமாதிரியாகப் பார்த்ததும், 'இரண்டாவது பெண்ணுக்கு இருக்கும் இந்த நோய் முதல் பெண்ணுக்கு இல்லையென்றாலும், மூத்தவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு இருக்காது என்பது என்ன நிச்சயம்? உடம்பெல்லாம் கறுப்புக் கறுப்பாக— அசிங்கமாக வளைய வளைய வந்து கொண்டிருக்கும் இவள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தால் எப்படிச் சாப்பிட முடியும்? பழக முடியும்?' என்று தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கிசுகிசுத்துக் கொண்டதும் பிரபாவதியின் மனத்தை ரணமாக்கத்தான் செய்தது. ஆனாலும் அது இன்றைக்கு ஏற்பட்ட ரணத்தைப் போன்று அத்தனை ஆழமானதல்ல!

'நம் ஏழு பேரையும் அப்பா நிராதரவாக விட்டுவிட்டுச்சென்றுவிட்டார். என்னுடைய சம்பாத்தியத்தில் உங்கள் எல்லோரையும் படிக்க வைக்க முடியாது. அதனால் பிரபாவதி மட்டும் எப்படியாவது எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கட்டும். பிறகு டைப்பிங் படித்து முடிக்கட்டும். உடல் ஊனமுற்ற ஒரு சலுகையிலாவது அவளுக்கு ஏதாவது வேலை கிடைத்தால் நாமெல்லாம் கொஞ்சம் திருப்தியாகவாவது கஞ்சி குடிக்கலாம்' என்று அம்மா ஒருநாள் சொன்னபோது பிரபாவதிக்குச் சந்தோஷமாகவே இருந்தது. மற்றவர்கள் ஒதுக்கி வைத்தாலும் தன் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பையே அம்மா தனக்குத் தருகிறாளே என்று கொஞ்சம் பெருமிதமாகக் கூட இருந்தது. ஆனால் இன்று? அத்தனையும் நொறுங்கிப் போனதே!

முன்புபிரபாவதிகுடும்பத்தினர்சேலத்தில் குடியிருந்தபோது வீட்டு வாடகை கூடக் கொடுக்க முடியாமல் போனதால் வீட்டுக்காரர் இவர்களைக் காலி பண்ணச் சொன்னபோதும் இப்படித்தான் நொறுங்கிப் போனாள் பிரபாவதி. ஆனால் தர்மபுரியிலிருக்கும் தனது பெரியப்பா மகன் தன் குடும்பத்திற்குக் கொஞ்ச நாள் ஆதரவு தர முன்வந்தபோது, நம்பிக்கை ஏற்பட்டது. கிருஷ்ணகிரியிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தனது டைப்பிங் படிப்பைப் பதிவு செய்துவிட்டுக் காத்திருந்தாள். தனக்கொரு வேலை கிடைத்துவிட்டால் சமாளித்துக் கொண்டுவிடலாம் என்ற நம்பிக்கையின் துளிர்ப்பில் தனது கடந்த காலச் சோகங்களோடு, நிகழ் காலச் சோகங்களையும் மறந்துவிடவே முயற்சி செய்தாள்.

தன்னையொத்த வயசுப் பெண்களெல்லாம், தங்களுடைய இளமைக் கனவுகளை ஒருவருக்கொருவர் வெட்கத்தோடு பரிமாறிக் கொண்டபோதெல்லாம், இவள் தனது உடம்பிலுள்ள குறையை உணர்ந்து, அதுபோன்ற நினைவுகள் கூடத் தன்னை அண்ட விடாமல் இருப்பதற்குத் தன்னை எப்படியெப்படியெல்லாம் அடக்கிக் கொண்டிருக்கிறாள்! அப்போதுகூட பிரபாவதிக்கு இப்படியொரு துக்கம் ஏற்பட்டதில்லை. யதார்த்தத்திற்குப் பழகிப் போயிருந்தாள்.

பல்லாண்டு பல்லாண்டுகளாகச் சாப்பிட்ட மருந்துகளால் குணமடையாத இந்தக் குறை, இனிமேல் சாப்பிடும் மருந்துகளினாலா குணமடைந்துவிடப் போகிறது என்ற விரக்தியில், ஒருநாள் மிச்சம் மீதியிருந்த மருந்துகளையும் மாத்திரைகளையும் எடுத்து வீசியெறிந்தாளே அப்போதுகூட அவள் இந்த அளவுக்கு விரக்தியடைந்திருக்கவில்லை!

தன்னோடு டைப்பிங் படித்தவர்கள் மட்டுமல்லாது, தனக்குப் பின் படித்தவர்கள் கூடச் சிலர் லஞ்சம் கொடுத்து வேலை வாங்கிக் கொண்டுவிட்டார்கள் என்று கேள்விப்பட்டபோதுகூட அவள் இந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மேல் நம்பிக்கை இழந்துவிடவில்லை.

கடந்த 80ல் ப்ளஸ் டூ முடித்த பிரபாவதி 83ல் டைப்பிங் பாஸ் செய்துவிட்டு வேலை

கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடுதான் கிருஷ்ணகிரியிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்த ப்ளஸ் டூ தகுதியோடு டைப்பிங் தகுதியையும் பதிவு செய்து விட்டு வந்தாள்.

அதோடு மட்டும் அவள் சும்மா இருந்து விடவில்லை. அவ்வப்போது பல தனியார் கம்பெனிகளுக்கும் மனு மேல் மனுவாக அனுப்பி அனுப்பி அலுத்துப் போனுள். அப்போதும் அவள் தனது நம்பிக்கையைத் தளர விட்டுவிடவில்லை. ஊனமுற்றோருக்காக அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கும் சலுகைகள் தனக்கும் பொருந்தும் என்று நம்பினுள். பார்ப்பவர்களெல்லாம் நெருங்கி உட்காரவே தயங்கும் அளவுக்குத் தனது உடல் குறையுடையதாக இருக்கும்போது — எவரும் தன்னைத் திருமணம் செய்துகொள்ள முன்வரமாட்டார்கள் என்கிறபோது தானும் ஓர் ஊனமுற்றவள்தானே என்று திடமாக நம்பினுள். டாக்டரிடம் சென்று தனக்கு உடல் ஊனமுற்றிருப்பதற்கான சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டபோது அவர், 'சட்ட விதிகளின்படி நீ உடல் ஊனமுற்ற பெண் இல்லை. அதனுல் உனக்கு சர்ட்டிபிகேட் எதுவும் கொடுக்க முடியாது' என்று சொல்லிவிட்டார். அப்போதுகூட அவள் தன் கை, கால், வாய் என்று உறுப்புக்கள் எதையாவது இழந்திருக்கலாமே என்று நினைத்து வருத்தப்பட்டாளே தவிர நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாவட்ட கலெக்டர் மக்களின் குறை கேட்கும் நாளான மனு நீதி நாட்கள் வரும்போதெல்லாம் விடாமல் கலெக்டரைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டேதான் இருந்தாள்.

அப்படியொரு முறை — கடந்த 30.4.84 அன்று கலெக்டரிடம் முறையிட்டபோது தான் கலெக்டர் கொஞ்சம் இரக்கப்பட்டு, கிருஷ்ணகிரி வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு ஒரு கடிதம் கொடுத்தார். ஆயிரம் கனவுகளோடு அதை எடுத்துக் கொண்டு கிருஷ்ணகிரிக்குச் சென்முள் பிரபாவதி. வேலை வாய்ப்பு அதிகாரியிடம் தனது குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி அழுதுவிட்டு கடிதத்தைக் கொடுத்தாள். அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட அந்த அலுவலர், பிரபாவதி கொஞ்சம் இப்படித் திரும்பியவுடனேயே அதை அலட்சியமாக விட்டெறிந்தபோதுகூடத் தனது நம்பிக்கையை இழந்துவிடவில்லை அவள்!

தர்மபுரியில் இருக்கும் அவள், கிருஷ்ணகிரியிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று வருவதற்கான பஸ் கட்டணத்திற்கே படாதபாடு பட வேண்டியிருக்கும். சில சமயங்களில் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் அவள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கால்கடுக்க வரிசையில் நின்றுவிட்டு வீடு திரும்ப மாலை ஆகிவிடும். கையில் பஸ் கட்டணத்திற்குமேல் பைசாகூட அதிகம் இருக்காது என்பதால் இடையில் ஒருவாய் காப்பிகூடக் குடிக்க முடியாமல் பசியோடுதான் வீடு திரும்ப வேண்டும். இதுவும் வழக்கமான நடைமுறையாகிப் போனதால் அவளும் கவலைப்பட்டதில்லை. பஸ்ஸில் போகும் போதெல்லாம் பக்கத்திலிருக்கும் சகபயணிகள் இவளுடைய உடம்பிலுள்ள சிறுசிறு வெடிப்புக்களைக் கண்டு அருவருப்படைந்து முகத்தைச் சுளித்துக் கொள்வதுகூட இப்போது இவளுக்குப் பழக்கமாகிப் போன ஒன்றுதான். ஆனுல் இன்றுதான் தாயைக் கட்டிக் கொண்டு இப்படிக் குலுங்கிக் குலுங்கி அழுகிருள்.

தாயார் ஜெகதாம்பாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கடந்த இருபத்தாறு ஆண்டுகளில் பிரபாவதி அழாத நாட்கள் மிக மிகக் குறைவானதுதான் என்றாலும் இப்படியோர் அழுகையைத் தாயும் கண்டதில்லை.

"என்னடி மகளே! உனக்கு என்ன வந்தது? ஏன் இப்படி அழுகிருய்?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு குழந்தையைத் தோள் மீது போட்டுக் கொண்டு முதுகைத் தட்டித் தட்டிச் சமாதானப்படுத்துவது போல் அவளைச் சமாதானப்படுத்துகிருர் ஜெகதாம்பாள்.

"அம்மா.... அம்மா.... அம்மா....'' அதற்கு மேல்வார்த்தைகள் வரவில்லை பிரபாவதிக்கு.

''சொல்லும்மா என்ன நடந்தது என்று சொல்! யாரர்வது ஏதேனும் சொல்லிவிட்டார்களா?''

''ஆமாம்மா!'' அழுகையினூடே வெளி வந்தது இந்த வார்த்தை.

''என்னம்மா சொன்னுர்கள், இப்படி நீ அழும் அளவுக்கு?''

"எதற்காக இப்படி அடிக்கடி வந்து எங்கள் உயிரை எடுக்கிருய்? நீயெல்லாம்.... நீயெல்லாம்..... நீ.....''

''சொல்லும்மா....!''

''.... நீயெல்லாம் உயிரோடு இருந்து என்ன சாதிக்கப் போகிருய்? செத்துத் தொலைய வேண்டியதுதானே! என்று வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒருவர் சொன்னுரம்மா.''

''அப்படியா சொன்னுர்? அவர் சொன்னுல் சொல்லிவிட்டுப் போகட்டுமே! அதற்காகவா இப்படி அசடு மாதிரி அழுவது? ஒருநாள் இல்லாவிட்டாலும் ஒருநாள் நிச்சயமாக உனக்கு வேலை கிடைக்கும். கவலைப்படாதே!'' என்று ஆறுதலுக்காகத் தனது இரண்டு கரங்களாலும் மகளின் முகத்தைப் பிடித்து நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டாலும் ஜெகதாம்பாளின் கண்களும் கலங்கத் தான் செய்தன.

இப்படியோர் ஊனமாகப் பிறந்துவிட்டது அவளுடைய தப்பா? அல்லது இப்படியோர் கண்ணுக்குத் தெரிந்த ஊனத்தையும் ஊனமில்லை என்று வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருக்கிற நமது சட்டங்களின் குற்றமா? யாருடைய குற்றமோ இப்போது அவர்கள் இருவருமே ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டார்கள். அந்த அழுகை எப்போது நிற்கும்? அது யாருக்குத் தெரியும்!

— இளங்கோவன்.

அனுராதா ரமணன் **14**



நெருப்பாக நீ

தோப்பு பங்களா வாசலை மிதித்ததுமே சிட்டுக் குருவி போலப் பறக்கிறாள் இன்பா.

அவளது உற்சாகம், நந்துவின் நெஞ்சில் புதுப் புதுக் கற்பனைகளைத் தூண்டி விட, அவன் அவளுக்குப் பங்களாவைச் சுற்றிக் காண்பிக்கும் சாக்கில் பின் தொடருகிறான்...

அவனுடைய ஆதங்கமே வேறு... சென்னையிலிருந்து வந்தது முதல், இன்பாவிடம் சரியாகப் பேசவே முடியவில்லை... இத்தனைக்கும் இரவைத் தவிர — மற்ற நேரங்களிலெல்லாம் இருவரும் சேர்ந்தேதான் இருக்கிறார்கள்.

என்ன பிரயோசனம்?

அவள் எப்போதுமே ஏதோ கனவில் மிதப்பது போல இருக்கிறாள். மிச்ச நேரத்தில் ஒன்று மாதையனிடம் அரட்டை. அல்லது — ஏதோ புலிக்குட்டிக்கு டிரெயினிங் கொடுக்கும் ரிங் மாஸ்டர் போலக் கெஞ்சியும், கொஞ்சியும், அதட்டியும், முறைத்தும், அவினாஷோடு மல்லுக்கு நிற்பாள்...

இதற்காகவா இவளை இங்கு அழைத்து வந்தான் இவன்...

இந்த ஊர்க் கோவில் சிற்பங்கள் எல்லாம் அழகாக இருக்கும் என்று படித்துப் படித்துச் சொன்னானே...

எதற்காக?

அந்தச் சிற்பங்களின் பக்கத்தில், இவளை நிறுத்தி, 'உன்னை விடவா சிற்பம் அழகு?' என்று வசனம் பேசி மகிழ வேண்டுமென்றுதானே...

''என் வீடு பெரிசு. விசாலமான அறைங்க... ஒடிப் பிடிச்சு விளையாடலாம்...''

இப்படி அவன் சொன்னபோதே மனசுக்குள் ஒருவரையொருவர் துரத்திக் கொண்டு ஓடுகிற காட்சி வரவில்லையே! அவளை இரு கைகளுக்குள் வசமாய்ப் பிடிக்கிற காட்சி தானே படமாய் ஓடியது...

அவனைச் சொல்லிக் குற்றமில்லை. வாலிபத்தின் மிக முக்கியமான கட்டத்தில் நிற்கிறான்.

ஆபீஸ், வேலை என்றோ... தொழிற்சாலை, மிஷின் என்றோ அவனது உத்தியோகம் இருந்திருந்தாலும் காதலில் இத்தனை ஆவேசம் இருந்திருக்காது.

கலைஞன், அழகை ரசிப்பவன்... சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுபவன். எப்பொழுதும் சுகதுக்கங்களால் மிக ஆழமாகப் பாதிக்கப்படுபவன்...

அவனைப் பொறுத்த வரையில் காதல் என்பது அணைக்க முடியாத பெருந் தீ. அதை அணைக்க இன்பா என்கிற தீயணைப்புப் படையே வேண்டும்...

ஆனால் அவளோ...

மரத்தையும், கோவிலையும் ரசிக்கிறாள். மாதையனை உட்கார வைத்துப் படமாக வரைகிறாள். மங்களாம்பாளைப் பற்றித் துருவித் துருவி விசாரிக்கிறாள். அவினாஷைத் திருத்தப் பாடுபடுகிறாள்...

இவனைத் திரும்பிப் பார்த்து இணக்க மாய் ஒரு சிரிப்பை வீச மாட்டாளோ...?

நந்தகுமார் மனக்குழப்பத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவளுடன் மாடிக்கு நடக்க —

கீழே ஜமீன்தார், புவனாவை ஒரு சோபா வில் அமர்த்திவிட்டு, மாதையனை அழைக் கிறார்...

''யசமான்...''

''இந்தப் பாட்டை எதுக்காகப் பாடினே?''

எஜமானை நிமிர்ந்து பார்க்கத் தைரிய மில்லை மாதுவுக்கு. குனிந்த தலை நிமிராமல், தொண்டை கரகரக்கச் சொல்கிறான் அவன்:

''வேணுமின்னு பாடலீங்க... தோப்புப் பாதையில் வண்டி வர்றப்ப பழைய நினைப் பெல்லாம் வந்துச்சு. அந்த வேகத்துல... என்னமோ பாடப் போயி நாக்குல இந்தப் பாட்டு வந்து நின்னுடுச்சுங்க எசமான்...''

''இந்தப் பாட்டு எப்படி இன்பாவுக்குத் தெரியும்?''

''எங் குலதெய்வம் படவேட்டம்மன் சத்தியமா நான் சொல்லலீங்க. அதுவா எப்படி... அதுவும் அந்தக் கடைசி ரெண்டு வரிய பெரியம்மா, வேணுமின்னே மாத்திப் போட்டது மாதிரி... எனக்கே வேர்த்துப் போச்சுங்க!''

''மங்களாவோட ரூம்லே எதையாவது குடையறாளா...?''

லோகநாதனின் இந்தக் கேள்விக்கு மட்டும் உடனே பதில் சொல்லாமல், சற்று யோசித்து, ஒரு பொய்யைச் சொல்கிறான். அவன்:

''ஆங்... அதெல்லாம் பேசப்படாதுங்க. ரூம்புக்குள்ளார வந்தா, கட்டில்லே உட்கார்ந் துட்டுப் படம் வரையும்... இல்லாட்டி படுத் துட்டே புஸ்தவம் படிக்கும்... அதுவுமில் லாட்டி, என் கூடப் பேசிக்கிட்டே தூங்கிப் போயிடும்...''

அவன் வாய் தவறிச் சொன்ன ஒரு வார்த்தையைப் பிடித்துக் கொள்கிறார் லோக நாதன்.

''உன்கிட்டே பேச என்ன இருக்கு?''

மாதையன், சிக்குப் பிடித்த தலைமுடி யைச் சொறிந்தபடி, அசட்டுச் சிரிப்புடன் சொல்கிறான்.

''எதுனாச்சும் வாயைப் பிடுங்கி, வம்பை வளர்க்கும் சாமி... நான் தெய்வம் உண் டுன்னா, அது இல்லேங்கும். நான் இல்லேன்னு சொன்னா அது இருக்குன்னு ஒரே போடாப் போடும். நான், பொறந்து வளர்ந்த கதை யைக் கேட்கும். சின்னய்யா குழந்தையில எப்படியிருப்பாருன்னு கேட்கும்...''

''என்னைப் பத்திக் கேட்குமா?''

''ஐயா?''

அவன், காதில் விழாதவன் போல, மறு படியும் கேட்கிறான்.

''என்னைப் பத்திக் கேட்குமான்னு கேட் டேன்...''

'இது வரையில் உங்களைப் பற்றி, ஒன் றுமே அவள் கேட்டதில்லை' என்று சொன் னால் — நிச்சயம் ஜமீன்தார் நம்ப மாட்டார் என்பது மாதையனுக்குத் தெரியுமாதலால், உள்ளதை ஓரளவுக்குச் சொல்கிறான்.

''எப்பவாவது கேட்கும்ங்க. ஐயா கையில சாட்டையை எடுத்தா பயமா இருக்கு மாது. இது வரைக்கும் யாரையாவது அதால அடிச்சிருக்காரான்னு கேட்டி ருக்கு...''

''ஹூம்...''

மேலே தொடரச் சொல்லி, லோகநாத னிடமிருந்து ஓர் உறுமல் புறப்படுகிறது.

''அதுக்கு நான் சொன்னேன். ஐயா பார்க்கத்தான் இப்படி கடாபுடான்னு இருக் காரே தவிர ரொம்பத் தங்கமானவரு... இன்னி வரைக்கும், அவினாஷ் தம்பிய பய முறுத்தறதுக்காகத்தான் சவுக்கைத் தூக்கி யிருக்காரே தவிர... சவுக்கு நுனியில ஒரு கொசு உட்கார்ந்திருந்தாக் கூட அடிக்க மாட் டார்... அத்தனை இரக்க சிந்தனை உள்ளவ ருன்னு சொல்லியிருக்கேன் எசமான்...''

மாதையன், குனிந்த தலையை உயர்த்தா மல், விழிகளை மட்டும் சற்றே உயர்த்தி இதைச் சொல்ல...

லோகநாதன், அவனது முகத்தைப் பாராமல் சுவரில் மாட்டியிருந்த புலித் தலையையே பார்க்கிறார்.

தான் எந்த அளவுக்கு முன்கோபி



என்பது மாதையனுக்குத் தெரியுமென்பது அவருக்கும் தெரியும்.

இதற்குமேல் அவனை, தனக்குச் சரியாய் நிறுத்தி வைத்துப் பேசுவது, தனது கௌரவத் துக்குப் பங்கமாகும் என்பது போல, அவனைப் போகச் சொல்லி சைகை காண் பிக்கிறார் அவர்...

அவன் போனதும் புவனாவின் அருகில் உட்கார்ந்து கொள்கிறார்... அவளது கையை மெதுவாகப் பிடித்து அழுத்துகிறார்.

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இவ் வளவு கலங்கிப் போய் உட்கார்ந்துட்டே...? உம்? ஏதோ, எவ்வளவோ வருஷங்களுக்கு



அப்புறமா இப்படிச் சந்தோஷமா வந்திருக் கோம்... நிம்மதியா இரும்மா...''

அவள் கண்ணீர் ததும்ப, உட்கார்ந்திருக் கிறாள்.

''இதப் பாரு... உன்னோட சந்தோஷத்துக் காகத்தான் நான் இத்தனை முயற்சியும் எடுத் துக்கிட்டேன். நான் ஒண்ணு நினைக்க, கடவுள் சித்தம் வேறயாப் போச்சு... நான் சாகறதுக்குள்ளே — மங்களாம்பாளோட நகைங்களைத் தேடிக் கண்டுபிடிச்சு...''

இன்னும் அவர் ஏதோ சொல்லி முடிப்ப தற்குள், இன்பா நாலு கால் பாய்ச்சலில் அங்கே ஓடி வருகிறாள்.

''சாப்பாடெல்லாம் ஆறிப் போறதாம்... சாப்பிட்டுட்டுப் பேசலாமே...''

லோகநாதனின் உற்சாகமெல்லாம் வண்டி யோடு போய் விட்டதென்றாலும் அதை அவ ளிடம் காட்டிக் கொள்ளாமல், மேலுக்குச் சிரித்தபடி எழுந்திருக்கிறார்.

''நந்தூ... உங்க அம்மாவுக்கு வேண்டிய மருந்தெல்லாம் வந்திருக்கா?''

''ஆஸ்பத்திரியே வந்திருக்கு... டாக்டர் தான் வரல்லே...''

இன்பாவின் கேள்விக்கு, நந்து பதிலளிக் கும்போதுதான், லோகநாதனுக்கு டாக்ட ரின் நினைப்பே வருகிறது.

'ஐயோ... சொல்லாமே வந்துட்டோமே... நாளைக்கு இவளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா அந்த மனுஷனையில்லே கூப்பிடணும்...'

ஏற்கெனவே சரியில்லாத மனத்தில் இந்த நினைப்பு வேறு சேர்ந்து, முள்ளாய் உறுத்த...

தோப்பும், பங்களாவின் அழகும் ஆங் காங்கு சச்சதுரமாய் செதுக்கப்பட்ட நிலத் தில் பூத்துக் குலுங்கும் மலர்களும் இன் பாவை ஓரிடத்தில் நிற்க விடாமல் பரபரப் பாய் இயங்கச் செய்ய...

நந்துவிடம் அதிகமாய்ச் சிரித்துச் சிரித்து ஜோக் அடிக்கிறாள் அவள்.

'ஏய்... அந்த மரத்து ஊஞ்சல்லே நான் உட்கார்ந்துக்கறேன்... ஊஞ்சலை ஆட்டி விடறியா...?''

இப்படி அவள் அவனைக் கேட்ட போது — அவன் தலைகால் புரியாத மகிழ்ச்சியில் ஸ்தம்பித்துப் போகிறான்.

''நான் வேற எதுக்காகத்தான் பிறவி எடுத்திருக்கேன் இன்பா... உட்காரு...''

அவள், சற்று உயரமான அந்த ஊஞ்சலில் எம்பி உட்கார்ந்து, இரு கைக ளாலும் கயிற்றைப் பிடித்துக் கொள்ள, அவன், தனது பலம் கொண்ட மட்டும் ஊஞ்சலை வீசி ஆட்டுகிறான்...

வானத்தைத் தொட்டு விடுவது போலப் பறந்த ஊஞ்சலின் வீச்சில், கண்களை மூடி லயிக்கிறாள் அவள்...

யாரோ ஒரு பெண், அவளது மார்பில் இன்பாவை சின்னக் குழந்தை போல அணைத்தபடி ஊஞ்சலில் பறப்பது போன்ற பிரமை...

'ஹவ் டு யூ லைக் டு கோ அப் இன் தி ஏர்... அப் இன் தி ஏர் ஸோ புளூ...

எப்பொழுதோ பாடிய நர்ஸரிப் பாடல்...

இன்னும்... இன்னும் ஊஞ்சலின் வேகம் அதிகரிக்கக் கீழே விழுந்து விடுவோமோ என்கிற பயத்தில் கைகள், ஊஞ்சல் கயிற்றை இறுகப் பிடிக்கிறது.

'ஐயோ... அம்மா... எனக்கு பயம்மா இருக்கே...'

அவள் தவிக்க, தன்னை அணைத்திருந்த பெண் சொல்வது போல மென்மையான குரல்...


''பயப்படாதே கண்ணம்மா... நானிருக் கேன்...''

வார்த்தைகள் முழுசாய் உணரும் முன்பே — கை நழுவி, உயரத்திலிருந்து கீழே விழு கிறாள் இன்பா...

''இன்பா!!!''

நந்து அலறியபடி அவள் விழுந்த இடத் திற்கு ஓடுகிறான்.

(தொடரும்)



பாதை உண்டு; பஸ் இல்லை!

தர்மபுரி மாவட்டத்திலுள்ள டேங்கனிக் கோட்டையிலிருந்து பஞ்சப்பட்டி என்னும் ஊருக்குச் சுமார் இருபது கி.மீ. தூரம் இருக்கும். இந்த இடைப் பட்ட பகுதி காடுகளும் மலைகளும் நிறைந்த பகுதியாக இருந்தாலும் அருமையான பாதை வசதி செய்திருக் கிறார்கள். ஆனால் பஸ் வசதிதான் இல்லை. அதனால் இந்தப் பகுதி கிராமங்களிலுள்ள மக்கள் பஸ்ஸை கண்ணால் பார்க்க வேண்டுமானால்கூட பல கி.மீ. தூரம் நடந்து டேங்கனிக் கோட்டைக்குத்தான் செல்ல வேண்டும். இந்த நிலையில், கூட எடுத்துச் செல்லும் சிறு லக்கேஜுக்கு என்ன செய்கிறார்கள்? கையோடு கழுதைகளைக் கூட்டிச் சென்றுதான் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள்!



மின்னும்
மேனி மெருகுக்கு
ரெக்ஸோனா
REXONA
Rexona
AND GLOWING SKIN
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும்
உங்கள் பொன்னான கனவு...நிறைவேற
வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹுபுஷா
(தேவதாரம்) ஆகிய நாலு வகை
இயற்கைத் தைலங்களின் நற்கலவையான
ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு
இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறத
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்
LINTAS RX 89 2416 TM

நடராஜ் தான் பணத்தை எடுத்திருப்பான்!

தமிழினியன்

அந்த விற்பனைப் பெண், மாலைநேரக் கஸ்டமர்களுக்காக அப்போதுதான் 'பாண்ட்ஸ்' பூசிக் கொண்டாள் போலும்.

கமகமவென்று கொள்ளை வாசனை.

நுகர்ந்து கொண்டே சொன்னேன்: ''கால் கிலோ டஸ்ட்.

ஷோ கேசின் கண்ணாடி மேற்பரப்பில் அதை எடுத்து வைத்துவிட்டு, ''வேறென்ன சார், வேண்டும்?'' என்று புன்னகை செய்தாள், அவள்.

பவ்யமான அந்த விசாரணைக்கு இன்னும் ஏதாவது வாங்கலாம்தான். என்ன வாங்குவது. சட்டென்று ஏதும் தோன்றவில்லை.

''ஹி... ஹி... அவ்வளவுதான்'' வழிந்தேன்.

அங்கிருந்தவாறே அவள் தள்ளிவிட்ட தேயிலைப் பொட்டலம் வழுக்கி வந்து, பில் போடும் வளையல் கரங்களில் சிக்கியது.

ஒன்பது ரூபாய் பில்.

கையில் இருந்த கறுப்புத் தோல் பையைக் கம்பீரத்துடன் திறந்தேன். உள்ளே, இன்னொரு கிளைப்பை. அதில்தான் பணம் இருந்தது.

துழாவினேன்.

அதில் வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டைக் காணோம்.

எங்கே போயிருக்கும்? யார் எடுத்திருப்பார்கள்! சற்று முன்பு —

வேர்வைக் கசகசப்புடன் ஒட்டை நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த நூலகப் பியூன் ஞாபகத்துக்கு வந்தான்.

''ஹி... ஹி... வாங்க சார்... சௌக்கியமா? லைப்ரரியன் ஐயாவைப் பார்க்க வந்தீங்களா. உள்ளேதான் இருக்கிறார். பையைக் கொடுத்துட்டு டோக்கன் வாங்கிக் கொள்ளுங்கள், சார்'' என்று பல்லைக் காட்டியவன், அவன்தான்.

நான், ஒரு மடையன். உள்ளே ரூபாய் இருப்பதை மறந்து பையைக் கொடுத்துவிட்டு டோக்கனை வாங்கிக் கொண்டேன்.

நூலகர் சுந்தரமூர்த்தி எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். டவுனுக்கு வந்தால் அவரைப் பார்க்காமல் போக மாட்டேன்.

அரை மணி நேரம்தான் இருக்கும்.

பேசி முடித்துவிட்டுப் புறப்பட்டேன்.

டோக்கனை வாங்கிக் கொண்டு, பையை எடுத்துத் தரும்போது, ''போயிட்டு வர்றீங்களா, சார்'' என்று மரியாதையுடன் எழுந்து என்னமாய் மோழைக் கும்பிடு போட்டான், அந்த அயோக்கியன்...?

''சார்... கேஷ் கவுண்டரை இப்படி மறைத்துக் கொண்டால், மற்றவர்கள் எப்படி வர முடியும். சீக்கிரம் பில்லுக்குப் பணம் கொடுத்துட்டு, இடத்தைக் காலி பண்ணுங்கள் சார்...'' என்றாள், அந்தப் பெண்.

சப்த நாடியும் அடங்கியது போல், உடம்பே குறுகிப் போயிற்று எனக்கு.

''மன்னிக்கவும். பணத்தை எங்கோ தவற விட்டுவிட்டேன். தேயிலையை எடுத்து வையுங்கள். அப்புறம் வந்து வாங்கிக் கொள்கிறேன்.''

'சைனா சில்க் சட்டை, டபிள் நிட்டட் பாண்ட் அணிந்து கொண்டு இப்படி ஒரு கையாலாகாத பேச்சா...'

என்னை எல்லோரும் ஒருவிதமாகப் பார்க்க, ஊசி அம்புகள் உடம்பெங்கும் துளைத்த அவஸ்தையுடன் வெளியேறினேன்.

எதிரில் வந்த மனிதர்களை முட்டி மோதாத குறையாக விரைந்து, நூலகத்துக்குள் நுழைந்தேன்.

பொருட்களை வாங்கி வைக்கும் இடத்தில் அந்தப் ப்யூனைக் காணோம். வேறொரு உதவியாள் இருந்தார்.

"எங்கே அந்த ஆள்?" என்றேன் — படபடப்புடன்.

"டீ சாப்பிடப் போய்இருக்கிறார், சார்."

டீ மட்டுமா, சிக்கன் பிரியாணி கூட வெட்டலாமே!

சுந்தரமூர்த்தி என்னைக் கண்டதும், "பத்மநாபன்... இன்னும் நீங்கள் கடைக்குப் போகல்லையா?" என்று வியந்தார்.

"கடைக்குப் போய்மூக்குஉடைபட்டு வந்திருக்கிறேன், சுந்தரம்!" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டினேன்.

"என்ன விஷயம்?"

சொன்னேன்.

முகம், வற்றல் கத்தரிக்காயாய் உருமாற, "அப்படியா...?" என்று தாடையைத் தடவினார், சுந்தரமூர்த்தி.

"கடையில் அத்தனைபேருக்குமுன்னால் எனக்கு ரொம்ப அவமானமாகப் போச்சு."

"ச்சை... இந்த லைப்ரரி சரித்திரத்திலேயே இப்படி ஒரு சம்பவம் நடத்ததில்லை. வரட்டும் அவன். உடனே அவனை சஸ்பெண்ட் பண்ணிட்டுத்தான் மறுவேலை..." முகம், கோபாக்கினியைச் சிதறவிட மேஜை மீதிருந்த மணிக்குமிழை அழுத்தினார் அவர்.

"சார்..."

"நடராஜ் வந்ததும் உடனே இங்கே அனுப்பு."

"ஆகட்டும், சார்."



அரை மணி ஆயிற்று. நடராஜ் வரவில்லை.

''டீ குடிக்கப் போனால் ஐந்து நிமிஷத்திலே வந்துடுவானே...'' உண்டான சந்தேகம், ஊர்ஜிதமானதைப் போல் என்னைப் பார்த்தார் நண்பர். பதில் பேச முடியாமல் கைகளைப் பிசைந்தேன், நான்.

''சார், கூப்பிட்டீங்களாமே!''

நடராஜ்தான்.

குரலில் கொஞ்சம்கூடப் பிசிறில்லாமல் வந்து நின்றான்.

அவனைப் பார்க்கும் போதே எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

''ஆமாம். இவ்வளவு நேரம் எங்கே போனாய்?''

''டீ குடிக்கப் போனேன் சார். வீட்டிலிருந்து என் மகள் வந்தாள். ஸ்டோரில் கொஞ்சம் சாமான்கள் வாங்கிக் கொடுத்து அனுப்பிச்சுட்டு வர்றேன்.''

போச்சுது. என் பணம் கைமாறி விட்டது. இனி இவனைச் சோதனை பண்ணினாலும் பிரயோஜனப்படாது...

''கொஞ்ச நேரத்துக்கு முன்பு சாரோட பையை நீதானே வாங்கி வைத்தாய்.''

''ஆமாம், சார்... ஏன்... என்ன விஷயம்...? ஏதாவது காணோமா?'' சுருங்கிய புருவங்கள் மேலும் இடுங்கிற்று அவனுக்கு.

''காணோம் என்ற முடிவுக்கு நீயே வந்துட்டியா?''

''நீங்கள் கேட்கிற விதத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோணுது!''

''ஆமாம். அவர் பையிலிருந்த நூறு ரூபாய் நோட்டைக் காணோம். வீட்டிலிருந்து நேராகப் பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருக்கிறார். பஸ்ஸில் வரும்போது பை அவர் கையிலேதான் இருந்தது. பஸ்ஸை விட்டு இறங்கியதும் லைப்ரரிக்கு வந்து பையை உன்னிடம் கொடுத்து டோக்கன் வாங்கியிருக்கிறார்.'' -குற்றச்சாட்டைக் கச்சிதமாய்ச் சொல்லி முடித்தார், சுந்தரமூர்த்தி.

''அப்...படி...யா?'' காது மடலைச் சொறிந்தவனாக என்னை நோக்கினான், நடராஜ்.

''சார், நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள். பையை என்னைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கவில்லையா?''

எதிர்த் தரப்பு வக்கீலைப் போல் அவன் கேள்வி கேட்ட தோரணை என் ஆத்திரத்தைத் தூண்டியது.

''யோவ்... அதான் உங்கள் லைப்ரரியன் சொன்னாரில்ல. மறுபடியும் அதையே திருப்பிக் கேட்டால் என்ன அர்த்தம்?''

என் சீற்றம் அவனிடம் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

''கோபிக்காதீர்கள், சார். பையை வேறு எங்கேயும் வைக்கலை. யாரிடமும் கொடுக்கலை. அப்படித்தானே?'' என்று அமைதியாக, அதேகேள்வியைமீண்டும்கேட்டான், அவன்.

''ஆமாம்!''

''உங்கள் மனைவி கொடுத்த பணத்தை வாங்கியதும் உடனே பையில் வைத்தீர்களா... அல்லது...''

''ஏய், நடராஜ் என்ன விளையாடுகிறாய்..?'' பொறுமை இழந்தார், சுந்தரமூர்த்தி.

''விஷயம் இல்லாமல் கேட்க மாட்டேன்,

இவர்களே அவர்கள்...



தருமபுரி மாவட்டத்திலுள்ள ஆதி வாசிகள் இவர்கள்தான். படத்தில் காணப்படுவது போன்ற உடைகளை வயதான பெண்கள் மட்டும்தான் அணிகிறார்கள். இளம்பெண்கள் நாகரிக உடைகளை அணியவே துடிக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள்" நாகரிகமடைந்து கொண்டு வந்தாலும் இன்னமும் வறுமைக் கோட்டுக்கும் கீழேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

சார். ஐயாவை தயவு செய்து பதில் சொல்லச் சொல்லுங்கள்.''

''நன்றாய் ஞாபகம் இருக்கிறது. பணத்தை வாங்கியவுடன் பையில்தான் வைத்தேன்'' என்றேன் நான், எரிச்சலை அடக்கிக் கொண்டு.

''அப்புறம்... இது கடைசிக் கேள்வி. பையில் ஓட்டை ஏதும் இல்லையே?''

''நீயே பார்...'' என்று மேஜையின்மேல் விட்டெறிந்தேன், பையை.

''நான் வேறு பார்க்கணுமா, ஐயா சொன்னால் சரிதான்'' என்று புன்னகை செய்த நடராஜ், தீர்க்கதரிசி போல் சொன்னான்:

''பணம் எங்கேயும் போகலே. உங்கள் பையில்தான் இருக்கிறது. எடுத்துப் பாருங்கள்.''

''கிண்டலா?''

''தயவு செய்து பார்த்துட்டுச் சொல்லுங்கள், சார்.''

அவனது நிதானம் நெருப்பாய்ச் சுட்டது என்னை.

''நான் பார்க்கமாட்டேன். உங்கள் லைப்ரரியன் ஐயாவே பார்க்கட்டும்'' என்று முறைத்தேன்.

சுந்தரமூர்த்தி, மேஜை மீது கிடந்த என் பையை எடுத்துத் திறந்தார். கிளைப் பையை நன்றாகத் துழாவினார்.

அவர், கையை வெளியே எடுத்தபோது முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகை.

எனக்கோ நம்ப முடியாத ஆச்சரியம்.

''மூலை ஓரமாக ஒதுங்கி இருந்திருக்கிறது. அதனால்தான் உங்களுக்குத் தெரியவில்லை, பத்மநாபன்!'' என்று நான்கு மடியாய் இருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார், சுந்தரமூர்த்தி.

''வெரி, சாரி. பையை சரியாகப் பார்க்காதது என் தப்புத்தான்'' என்று வருத்தம் தெரிவித்தேன், நான்.

''இல்லை சார். அது உங்கள் தப்பு இல்லை. முழுக்க, முழுக்க அது என் தப்பு'' என்று முறுவலித்தான் நடராஜ்.

நான் திகைத்தேன். ''உன் தப்பா?''

''ஆமாம் சார். இதே பையை பெரிய உத்தியோகஸ்தர்களிடமோ அல்லது டிப்டாப்பா டிரஸ் பண்ணியவர்களிடமோ கொடுத்திருந்தால் உங்களுக்கு அவர்களிடம் நம்பிக்கை இருந்திருக்கும். அவர்கள் பணத்தை எடுத்திருக்க மாட்டார்கள் என்ற உறுதியுடன், பையை ஒன்றுக்கு இரண்டு தரம் நன்றாகத் தேடி இருப்பீர்கள். ஆனால்... நான்... ஒரு கடைநிலை ஊழியன். கிழிந்த சட்டை. காதறுந்த செருப்பு. அதனால்தான் நன்றாய்த் தேடக் கூட பொறுமை இல்லாமல் எடுத்த எடுப்பிலேயே சந்தேகம் வந்து இங்கு ஓடி வந்துவிட்டீர்கள். அப்படி ஓடி வரக் காரணம் என் சாதாரண உத்தியோகம் தானே...'' குரலில் இனம் புரியாத ஓர் ஆற்றாமை கலந்திருந்தது. எனினும் —

ஒரு மகானைப் போல் திரும்பி நடந்தான், நடராஜ்.

நாற்காலியில் அமர்ந்திருந்த நான் ஒரு மண்புழு போல் நெளிந்தேன்.





இசைத் தூவை சொல்லும்



ஒவ்வொரு தூணிலும் ஒவ்வோர் இசை

தருமபுரியிலிருந்து நாற்பத்திரண்டு கி.மீ. தொலைவில் உள்ளது தென்கரைக் கோட்டை என்னும் ஊர். அங்கு நிஜமாகவே நாற்பது ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு கோட்டை இருக்கிறது. அந்தக் கோட்டை அங்கு ஓடும் (இப்போது அல்ல!) ஜலகண்டேஸ்வர நதியின் தெற்குப் பக்கத்தில் அமைந்திருப்பதால், 'தென்கரைக் கோட்டை' என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கிறது.

கோட்டைக்குள் மொத்தம் ஐந்து கோயில்கள் இருந்தாலும் கல்யாண கோலத்தில் எழுந்தருளியிருக்கும் கல்யாண ராமர் திருக்கோயிலின் கட்டட வேலைப்பாடுதான் விசேஷமானது. கோயில் மண்டபத்தில் மொத்தம் இருபத்தெட்டுக் கல் தூண்கள் உள்ளன. அந்தத் தூண்களில் எதைத் தட்டினாலும் ஒவ்வோர் ஓசை எழுந்து கேட்கும் நம்மை பிரமிக்க வைக்கின்றது. இப்படிப்பட்ட தோர் கலை நுணுக்கம் வாய்ந்த கோயிலையும் கோட்டையையும் நிர்மாணித்தது யார்? ஊர்ப் பெரியவர்களைக் கேட்ட போது ஒரு கதை சொன்னார்கள்.....

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு சேலம் பகுதியில் ஆண்டு கொண்டிருந்த குறுநில மன்னர்களும் அண்ணன், தம்பிகளுமான சென்னப்ப நாய்க்கரும், சில நாய்க்கரும் இந்தப் பகுதிக்கு வேட்டை

தூண்களும் ஒரு கதையும்...

யாட வந்தார்கள். வந்த இடத்தில் இரவு தங்க வேண்டியதாயிற்று. அங்கேயே தூங்கினார்கள்.

அப்போது சென்னப்ப நாய்க்கரின் கனவில் சாட்சாத் அந்த ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியே எழுந்தருளி, 'நீங்கள் படுத்துத் தூங்கும் இந்த இடத்தில் ஒரு புதையல் இருக்கிறது. அதை எடுத்து எனக்கொரு கோயிலை நிர்மாணி' என்று சொன்னாராம்.

உடனே சென்னப்ப நாய்க்கர் தம்பியை எழுப்பி விஷயத்தைச் சொல்லிக் கோயில் கட்டும் பொறுப்பைத் தம்பியிடமே விட்டு விட்டுச் சென்றாராம். போதும் போதாதற்குத் தாமும் தமது அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து பொருளனுப்பி வைத்தாராம்.

தம்பி சில நாய்க்கரும் மடமடவென்று வேலைகளைத் துவங்கி கோயிலையும் இசைத் தூண்களையும் நிர்மாணித்து ஒரு கோட்டைச் சுவரையும் எழுப்பி முடித்தாராம். எல்லா வேலைகளும் முடிந்துவிட்ட சந்தோஷத்தில்—குறிப்பாகத் தான் அமைத்திருக்கும் இசைத் தூண்களில் இசையெழுப்பிக் காட்டி அண்ணனை பிரமிக்கச் செய்ய வேண்டும் என்று அண்ணனை எதிர்பார்த்துக் காத்திருந்தாராம்.

இதற்குள் அங்கிருந்த முஸ்லீம்கள் சில நாய்க்கரின் மேல் பொறாமை கொண்டு சேலத்திலிருந்த சென்னப்ப நாய்க்கருக்கு ரகசியமாக ஒரு தகவல் அனுப்பினார்களாம். அதில் தம்பி சில நாய்க்கர் புதையல் பொருள்களையெல்லாம் எடுத்து வீண் செலவு செய்து சுகித்திருந்ததோடு அண்ணன் அனுப்பிய பொருள்களையும் வீணடித்துக் கொண்டிருக்கிறார் என்று எழுதியிருந்ததாம்!

அந்த ரகசிய ஓலையைப் படித்த அண்ணன் சென்னப்ப நாய்க்கர் 'அப்படியா சேதி?' என்று வெகுண்டெழுந்து, கண்களில் கோபாக்னி கொப்புளிக்கத் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு வந்தாராம்.

இந்த விஷயங்களையெல்லாம் அறியாத தம்பி, அண்ணன் வருவதை மட்டும் கேள்விப்பட்டு அண்ணனை எதிர் கொண்டழைத்து மரியாதை செய்வதற்காகத் தனது தர்மபத்தினி வெங்கட்டம்மாளுடன் புறப்பட்டுச் சென்றாராம்!

இருவரும் ஊர் எல்லையில் சந்தித்துக் கொண்டபோது, 'பொன் பொருளையெல்லாம் வீணடித்துச் சுகித்திருந்த தம்பி, எந்த முகத்தைக் கொண்டு தன்னை எதிர் கொண்டழைக்க வந்தான்?' என்று மேலும் கோபாக்னியோடு 'என்ன? ஏது?' என்று விசாரணை செய்யாமலேயே தனது பட்டாக் கத்தியை உருவித் தம்பியை வெட்டித் தள்ளினாராம்.

இதைக் கண்ணுற்ற தம்பியின் மனைவி வெங்கட்டம்மா, பர்த்தா இறந்த பிறகு தனக்கு மட்டும் என்ன பூலோக வாழ்வு வேண்டிக் கிடக்கிறது என்று தானும் வாளையெடுத்துத் தற்கொலை செய்து கொண்டாளாம்! கடைசியில் உண்மையை அறிந்த அண்ணனும் தம்பியை அநியாயமாக வெட்டிக் கொன்றுவிட்டோமே என்று துடித்துத் தம்மையே தமது வாளால் வெட்டிக் கொண்டு செத்துப் போனாராம்!

இந்தக் கதையைச் சொன்ன ஊர்ப் பெரியவர்கள், ஊர் எல்லையிலிருக்கும் காட்டு வலவு என்ற இடத்திற்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த ஒரு பாறையில் செதுக்கப்பட்டிருந்த சிற்பத்தையும் காட்டி, "அண்ணனும் தம்பியும், தம்பி மனைவியும் செத்துப் போனது இந்த இடத்தில்தான்! அதன் நினைவாகத்தான் அண்ணன் சென்னப்ப நாய்க்கர் குதிரையில் அமர்ந்தபடி கோபத்தோடு வாளை ஓங்கியிருக்கும் இந்தச் சிற்பம் செதுக்கப் பட்டிருக்கிறது!" என்றார்கள்.

இந்தக் கதையெல்லாம் உண்மைதானா? தருமபுரியிலிருக்கும் தொல்பொருள் அலுவலர் கிருஷ்ணமூர்த்தியிடம் விசாரித்த போது 'உண்மைதான்' என்றார்.

எது எப்படியோ இத்தனை ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாமல் கிடந்த கோட்டையையும், பாதுகாப்பில்லாமல் சிதிலமடைந்து கொண்டு வந்த இசைத் தூண்களையும் இப்போது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர், மாவட்டக் கலெக்டர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்து தகுந்த பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய வைத்த தென்கரைக் கோட்டை ஊராட்சித் தலைவர் ஓரகாஸ் பாபு பாராட்டுக்குரியவர் என்பதில் சந்தேகமே இல்லை!

— பிரின்ஸ்



1



2



3

புத்தன் மீண்டும் பிறப்பானா?

இடம்: தர்மபுரி மாவட்டம் அரூரை ஒட்டி ஓடும் வாணியாற்றங் கரையிலுள்ள இளங்காட்டு மாரியம்மன் கோயில்.

நாள்: 11.6.86 மதியம்

1. பெண்கள் பொங்கலிடுகிறார்கள்.

2. பக்தியோடு சாராயமும் கலக்க... ஆண்கள் மேளச் சப்தத்திற்குத் தகுந்தபடி ஆட்டம் போடுகிறார்கள்.

3. இத்தனை ஆட்டபாட்டங்களும் தங்களைப் பலியிடுவதற்குத்தான் என்பது தெரியாமல் அப்பாவியாய் நிற்கும் ஆட்டுக் குட்டிகளும் சேவலும்.

4. பொங்கல் தயாரானதும் ஆட்டுக் குட்டிகள் கோயில் வாசலுக்குக் கொண்டு வரப்படுகின்றன. பூசாரி அந்த ஆட்டுக் குட்டிகளின் மேல் தண்ணீரைத் தெளிக்கிறார். தண்ணீர் பட்டதும் அவை உடம்பைச் சிலிர்த்துத் துள்ளுகின்றன. அந்தத் துள்ளல் அவைகளை வெட்டுவதற்காக அந்தக் கடவுளே கொடுத்த சமிக்ஞை என்று எடுத்துக் கொள்கின்றனர்.....


5. .....உடனே ஆட்டுக் குட்டி பலாத்காரமாகப் பிடித்துக் கிடத்தி பலியிடப்படுகிறது.

6. தலை துண்டிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியின் உடலைக் கடவுளின் சன்னிதானத்தில் கிடத்திச் செய்யும் வழிபாடு.

7. கடைசியாக, எல்லாம் முடிந்தவுடன் பொங்கலையும், பலியிடப்பட்ட ஆட்டுக் குட்டிகளையும் சுமந்து கொண்டு வீடு திரும்பும் அவர்களிடம் 'இது கொடூரமில்லையா?' என்று கேட்டபோது, 'நாங்கள் மட்டும்தானா பலியிடுகிறோம்? தீர்த்த மலையிலுள்ள சிவன் கோயில் தேர்க் காலிலேயே ஆட்டுக் குட்டிகளை வைத்து நசுக்கிப் பலியிடுகிறார்களே! அங்கு போய்க் கேளுங்கள் பார்ப்போம்!' என்றார்கள். இந்தக் கொடூரங்களைத் தடுக்க இனி புத்தன்தான் மீண்டும் பிறந்து வர வேண்டும். வேறு என்ன சொல்ல?



4



5



6







7



சம்பள தினத்தன்று...

இறைவா, உனக்கு நன்றி!

என் சம்பள நாளில் என் மனைவி தலை வாரிக் காத்திருப்பாள்.. வேறொன்றும் இல்லை! நான் வாங்கி வரும் ஒரு முழம் மல்லிகைப் பூவுக்காகத்தான். நானும் பல வருடங்களாக முயன்று பார்த்துவிட்டேன். சம்பள தினத்தன்று அவளுக்குப் பன்னிரண்டு முழத்தில் புடைவை ஒன்று வாங்கித் தந்து சந்தோஷப்படுத்த வேண்டும் என்று... முடியவில்லையே! ஆனால் அந்த ஒரு முழம் பூவுக்காகவே அவள் என்னை மனதார அர்ச்சிக்கிறாளே! அதற்காக இறைவா, உனக்கு நன்றி.

— கோ. நாராயணன், சென்னை — 1.

அது அல்லவோ பாசம்!

என் தோழி மஞ்சுளா ஒவ்வொரு சம்பள தினத்தன்றும் சுமார் ஐம்பது ரூபாய் பெறுமானமுள்ள இனிப்புகள் மற்றும் தின்பண்டங்களை வாங்கிக் கொண்டு போய் ஏதேனும் ஓர் அனாதை ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு அதை விநியோகிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறாள். ஓர் இரவு, நல்ல மழை பெய்து கொண்டிருந்தபோது அவள் வீட்டுக் கதவைத் தட்டி உதவி கேட்டனர் இரண்டு அனாதைக் குழந்தைகள். அவர்களுள் மூத்தவள் ஏழு வயதுப் பெண். தனக்கு இல்லாவிட்டாலும் தன் இரண்டு வயது தம்பிக்குச் சிறிது உணவு தரும்படி மன்றாடினாளாம். இந்தக் காட்சி என் தோழியின் நெஞ்சை உலுக்கிவிட்டது. அந்த நாளின் நினைவாகத்தான் இப்போது ஒவ்வொரு சம்பள தினத்திலும் ஓர் அனாதை ஆசிரமத்தை நாடிச் செல்கிறாள்.

— நீரஜா மூர்த்தி, பெங்களூர் — 19.

ஏன்தான் வருகிறதோ?

சம்பள தினத்தன்று ஆபீஸ் போவதில் சுறுசுறுப்பு. சம்பளக் கவர் கையில் கிடைத்த தும்கிளுகிளுப்பு.வீட்டுக்குவருவதற்குள் ஒரே பரபரப்பு. வீட்டுக்கு வந்து பால், மளிகை, பாக்கிகள் பட்டுவாடாவில் விறுவிறுப்பு. அதன்பின் வெறுப்பு! புதிய செலவுகள் நேர்ந்தால் ஒரே வெட வெடப்பு! (டி. ராஜேந்தர் மன்னிக்க!)

— என். ஆர். ஆர். லிங்கம், பெங்களூர்—10

பயனுள்ள செலவு!

சம்பள தினத்தன்று எல்லோரையும்போல மல்லிகைப் பூ, ஸ்வீட்ஸ் சகிதம் பிள்ளையார் கோவிலுக்கு விஜயம் செய்துவிட்டு எங்கள் ஊரில் உள்ள தொழுநோயால் பீடிக்கப்பட்ட சிறுவனுக்கு மருந்தும் வைட்டமின் மாத்திரையும் வாங்கப் பத்து ரூபாய் பணம் கொடுத்துவிடுவேன்.

— ஜி. குருமூர்த்தி, காரைக்கால்.

கனவு கலையும் நேரம்...

சம்பளம் வாங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்னரே பட்ஜெட் போட உட்கார்ந்துவிடுவேன். இந்த மாதம் எப்படியும் பணம் மிச்சம் பிடித்து ஒரு புடைவை வாங்கிவிட



வாசகர் பங்கு








வது என்று திட்டமிடுவேன். சம்பளப் பணத்தை மகிழ்ச்சியுடன் எண்ணிக் கொண்டிருக்கையில் மாமியாரிடமிருந்து ஒரு கடிதம் வரும்: "உடனே ரூ. 500 அனுப்பவும்." ஏன்? எதற்கு? மூச்! அவ்வளவுதான்! முதல் நாள் கனவில் வந்த வண்ணமயமான புடைவை கரைந்து மறைந்து போகும்.

— திருமதி குருமாணிக்கம், பொள்ளாச்சி.



கவலைக்கு மருந்து!

சென்ற மாதச் செலவுகளின் பட்டியலும் வரும் மாதச் செலவுகளின் பட்டியலும் காத்திருந்து கவலையளித்தாலும், முதல் தேதியன்று, என்னுடன் படித்த, இன்னும் வேலை கிடைக்காத நண்பர்களைச் சந்தித்து அவர்களுடன் டிபன் சாப்பிட்டுவிட்டு அவர்களுக்குக் கைமாற்றுகச் சிறியதொகைகொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தால்தான் மனத்துக்குச் சந்தோஷமாக இருக்கும்.

— பி. நாகராஜன், சென்னை — 18.



அன்று பட்டபாடு...

விடுப்பில் வெளியூர் சென்ற நண்பர், தன் சம்பளத்தை வாங்கி அவர் வீட்டில், கொடுத்துவிடும்படி பணித்ததால் என் சம்பளத்துடன் அவர் சம்பளத்தையும் வாங்கிக் கொண்டேன். நேரம் ஆகிவிட்டதால் மறு நாள் அவர் சம்பளத்தை அவர் வீட்டில் சேர்த்துவிடலாம் என்று தீர்மானித்து அதனை வீட்டுக்குக் கொண்டு போய் பீரோவில் வைத்தேன். வீட்டிற்கு வந்திருந்த விருந்தினருடன் வெளியே சென்றுவிட்டுத் திரும்பிய போது, மனைவி 'பிலு பிலு'வென்று பிடித்துக் கொண்டாள். இத்தனை நாட்களாக நான் முழுச் சம்பளத்தை வீட்டிற்குக் கொண்டு வரவில்லை என்றும் இன்று வசமாக அகப்பட்டுக் கொண்டேன் என்றும் பேச ஆரம்பித்தாள். அவளுக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லி அவளைச் சமாதானப்

படுத்துவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது.

— கி. வேணுகோபால், சென்னை — 8.

கல்விக்கு உதவி

மாதந்தோறும் சம்பளம் வாங்கிய உடனே இஷ்ட தெய்வத்திற்கு நன்றி தெரிவித்துவிட்டு இரண்டு ஏழை மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செலவிற்காகத் தலா ரூபாய் பத்து கொடுத்து வருகிறேன். என் நெருங்கிய நண்பர்களையும் இப்பழக்கத்தைக் கடைப்பிடிக்கும்படி கோரியுள்ளேன்.

— ஸ்ரீதர் சீனிவாசன், சென்னை—8.

அந்த நாள் — தம்பியோடு!

என் தம்பி மூளை வளர்ச்சி குன்றியவன். அவனை வெளியே அழைத்துப் போகும் ஒரே நபர் நான்தான். சம்பளம் வாங்கிய அன்று தவறாமல் அவனை அழைத்துப் போய் ஹோட்டலில் ஸ்வீட், காரம் சாப்பிட்டு விட்டு வருவேன்.

— ஆர். சம்பத், திருச்சி — 14.

பிடிக்காததைச் செய்கிறேன்!

கொள்ளு கிடைக்கிறதே என்று குதிரை வாங்கியது போல், அன்பளிப்பாக மனை கிடைத்ததால் அதில் வீடு கட்டுகிறேன் பேர்வழி என்று ஊரெல்லாம் கடன் வாங்கி, அமர்க்களமாய்க் கட்டிவிட்டேன். இப்போது தேதி 28 ஆனாலே மாய்ந்து, மருகி, உருகி, சம்பளம் வந்ததும் வட்டிக்காகச் சில நூறுகளைத் தருகிறேன். கரையாத கடனிலிருந்து என்னை மீட்பதற்காக கல்கிக்குப் பிடிக்காத பரிசுச் சீட்டுகளை முப்பது ரூபாய்க்கு வாங்குகிறேன்.

— சத்யகிரிராஜன், திருப்பராய்த்துறை.

மாதம் ஒரு புத்தகம்!

நான் முதல் முதலாகச் சம்பளம் வாங்கியதும் என் பாட்டிக்கு ராமாயணப் புத்தகம் வாங்கிப் பரிசளித்தேன். பாட்டியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அன்று என் மனத்தில் உறுதி பூண்டேன். இன்றளவும் சம்பள தினத்தன்று ஏதோ ஒரு புத்தகம் வாங்கிச் சேகரித்து வருகிறேன். இப்போது நான் ஒரு மினி லைப்ரரிக்குச் சொந்தக்காரி.

— சி. சாந்தி, தஞ்சாவூர்.

மெள்ள மெள்ள வந்த சந்தோஷம்!

முன்பெல்லாம் முதல் தேதி என்றாலே எனக்கு ஒரே திகில்—வாங்குகிற சம்பளத்தையெல்லாம் சாராயக்கடையில் கொட்டிவிட்டு அடி உதைகளை மட்டும் எனக்கென்று கொண்டு வந்து தரும் கணவனை நினைத்துத்தான். அவர் ஆபீசுக்குப் போய் நானே சம்பளத்தை வாங்கி வரும் வழக்கத்தை மேற்கொண்டேன். விளைவு — அதிகப்படியான அடி உதைதான். ஆனால் மெள்ள மெள்ள குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டார் என் கணவர். இப்போது அவரே சம்பளத்தை வாங்கிக் கொண்டு நேராக வீடு வந்து சேர்கிறார். என்னிடம் முழுச் சம்பளத்தையும் கொடுத்துவிட்டுத் தன் செலவுக்கென்று கேட்டு வாங்கிக் கொள்கிறார். நிச்சயமாக அது குடிப்பதற்கு இல்லை என்று எனக்குத் தெரியும்.

— அமுதா இளங்கோவன், ஊரக்கரை.

வாழ்க்கையை ஓட்டுகிறேன்!

எல்லோரும் சம்பள தினத்தன்று என்ன செய்யலாம் என்று யோசிப்பது போல் யோசிக்கும் வேலையே எனக்கு இல்லை. கொடுக்க வேண்டிய கடன்களையெல்லாம் கொடுத்துவிட்டு வீடு திரும்பும்போது கையில் ஐந்தோ, பத்தோதான் பாக்கி இருக்கும். அந்தப் பணத்தைக் குழந்தைகளிடம் கொடுத்துவிட்டு அடுத்தபடியாக யார் கடன் கொடுப்பார்கள் என்று தேடிச் செல்வேன். இந்த லட்சணத்தில் 'இன்று சம்பளம்' என்று வீட்டில் உள்ளவர்கள் ஜம்பமாக அக்கம் பக்கத்துக் காரர்களிடம் பேசுவார்கள்! இந்தப் பிரச்னை எப்படி, எப்போது தீரும் என்ற கவலையுடனேயே நானும் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்.

— ஒய். பி. கணேசன், போளூர்.



ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

கி. வேணுகோபால்,
266 F. ரயில்வே குவார்ட்டர்ஸ்,
காந்தி இர்வின் ரோடு,
சென்னை — 600 008.

பக்கம் பார்த்துப் பேசுகிறேன்

விழித்துப் பார்த்தவன் வியந்து போனேன்.

சூரியனை ஒரு கேள்வி சுற்றிக் கொண்டிருந்தது.

ஜன்னலுக்கு வெளியே உற்றுப் பார்த்த போது பச்சைப் பசேலென்று வயல்வெளிகளில் பயிர்களுக்குப் பதிலாக — கேள்விகளே படுத்துக் கிடந்தன.

திரும்பிப் பார்த்தால் — தெருவில் திண்ணையில் சுருண்டும் புரண்டும் ஆயிரக்கணக்கான கேள்விகள் அசைந்து கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் கேள்விகளின் கூட்டம்.

சில கேள்விகள் நேற்றுப் பிறந்தவை. சில கேள்விகளின் வயது ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும். சில கேள்விகளுக்குக் குழந்தை முகம். சில கேள்விகளின் முகத்தில் நூற்றாண்டுகளின் சுருக்கம்.

பல கேள்விகள் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தன. சில கேள்விகள் குறட்டை விட்டுக் கொண்டிருந்தன. சில கேள்விகள் மற்ற கேள்விகளின் கழுத்திலேயே தூக்கு மாட்டித் தொங்கிக் கொண்டிருந்தன.

* * * * *

ஒரு பகுதியிலிருந்து ஒப்பாரிச் சத்தம் கேட்டது. அழுது கொண்டிருந்த கேள்விகளின் அருகில் போனேன். காரணம் கேட்டேன்.

''போன இடத்திலெல்லாம் அடி உதை விழுகிறது. வெளியே தலைகாட்டவே வெட்கமாய் உள்ளது. எத்தனை காலத்திற்கு நாங்கள் இப்படிப் பிறந்த மேனியாக அலைவது? பதில் என்ற ஆடை கிடைத்தால் அல்லவா பத்துப் பேருக்கு மத்தியில் தலை நிமிர முடியும்?'' என்று அவை கூறின.

''ஏன் இப்படி பரிதாபப்படுகிறீர்கள்? சர்வாதிகார நாடுகளிலாவது நீங்கள் கவலைப் படுவதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் இந்த பூமியில் பெரும்பான்மையான தேசங்களில் ஜனநாயகம்தானே நடைபெறுகிறது? அங்கெல்லாம் பாராளுமன்றங்களிலும் சட்டசபைகளிலும் பதில் சொல்வதற்கென்றே நேரம் ஒதுக்குகிறார்களே கேள்வி நேரம்தானே அங்கே கீர்த்தி மிக்கதாக இருக்கிறது?''

கேள்விகள் கேலி செய்தன:

''பதில்களா அவை? வெறும் சமாதானங்கள்... அங்கே கூறப்பட்ட பதில்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமா? பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். அதோ... அந்தக் குப்பைக் கூடைகளைக் கொட்டிப் பாருங்கள். உள்ளேயிருந்து உளுத்துப்போன ஏக்கங்களும் உடைந்து போன ஏமாற்றங்களும் உதிர்ந்து விழும்.''

* * * * *

தொலைக் காட்சியைத் திருப்பினேன். செய்தி வாசித்துக் கொண்டிருந்தார்கள்...

''வயல்களில் பயிர் செய்யப்பட்ட கேள்விகளும், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கேள்விகளும் கோடி கோடியாய்க் கூடி பூமியை அடைத்துக் கொண்டதால் உலகமெங்கும் வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டது...''

* * * * *

ஜனகனுடைய முரட்டு வில் முறிபடுவதுபோலச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் — கேள்விகளெல்லாம் சோம்பல் முறித்துக் கொண்டிருந்தன.

வண்ணச் சீருடை அணிந்த ஐந்தாறு வாலிபக் கேள்விகள் அங்கங்கே நின்றபடி உரத்த குரலில் ஏதோ உரையாற்றிக் கொண்டிருந்தன. ஆண் கேள்விகளோடு பெண் கேள்விகளும் சேர்ந்து அணிவகுத்தன.

கேள்விகளின் முழக்கம் காதுகளைக் கிழித்தது!

ஆச்சரியமாகத்தான் இருந்தது! இதுவரை வளைந்து கிடந்த கேள்விகளெல்லாம் இப்போது நிமிர்ந்து ஆச்சரியக் குறிகளாகி ஆயுதம் தாங்கி அணிவகுத்துப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டபோது!

* * * * *

நான் நிம்மதியாக ஒரு குட்டித் தூக்கம் போடத்தொடங்கினேன். கவலைப்பட வேண்டியதும், கண்ணீர் விட வேண்டியதும் சிம்மாசனங்களும், மகுடங்களும்தானே? எனக்கென்ன?

அதிர்ச்சியடைய வேண்டியதும், ஆட்டம் காண வேண்டியதும், ஆட்சிகளும் அதிகாரங்களும்தானே, எனக்கென்ன?

ஆமாம், இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தேனே, என் பெயர் என்ன...?

— சரித்திரம்!

— மூ. மேத்தா

மாண்புமிகு முதலமைச்சர்

நக்கம் — 14

திருவோலக்கம்

மாண்புமிகு சோழப் பேரரசின் முதலமைச்சர் தமது மாளிகையில் அமர்ந்து, பவானியின் வருகைக்காக எதிர்பார்க்கிறார்.

நேர்மை நெஞ்சுள்ள நேரிழையாளல்லவா?

அவர் அமர்ந்திருக்கும் இடத்துக்குப் பெயர் * ஜோதி முன்றில்.

அவ்வளவு பெரிய மாளிகையில் அவர் மட்டுமே தனிவாசம். அன்னையார் எவ்வளவு அழைத்தும் குன்றத்தூரைவிட்டுப் பெயர மறுத்துவிட்டார். வீடு, வாசல், நிலபுலன்களிருக்கின்றன என்பது ஒருபுறமானாலும் சிலருக்கு வாழ்ந்த மண்ணை வாழ்த்துவதில் ஒரு தனி இன்பம் உண்டு. தம்பி பாலறாவாயன் பதவி ஏற்றாலும் தனிவாசம் தான். அரண்மனைப் பணியில் அண்ணன் தம்பியாவது? இது கொண்ட கொள்கைக்குக் கொள்ளியாகி முடியும். அரசியலாயிற்றே!

பவானியை அழைத்து வந்தார்கள். உடன், சேக்கிழாரின் நண்பன் யாதவராயனும் வருகை தந்தான்.

பவானி கொஞ்சம் இளைத்து இருந்தாள். ஏற்ற பணியின் இளைப்பு போலும்!

வணங்குகிறாள்; அவளது கரிய பெரிய விழிகளில் கருவண்டு சிறகடித்தது.

''என்ன பவானி! ஏற்ற பணியைச் செம்மையாகச் செய்து முடித்து இருக்கிறாய் என்று எண்ணுகிறேன்!''

''நமச்சிவாயத்தின் தாள் பணிந்து தொடங்கினேன்; நலமுடன் நிறைவு பெற்றது, அமைச்சர் பெருமானே!''

''நமச்சிவாயம்!''

யாதவராயன் நாவசைத்தான்:

''அமைச்சர் பிரானே! மூன்று தினங்களுக்கு முன்பு பவானி நெருப்பில் கருகி மாண்டிருப்பாள். கபாலீச்சுரன் வந்தாரோ, காப்பாற்றப்பட்டாளோ?''

''என்ன நெருப்பிலா?''

''ஆமாம்; எவர் சதி என்று சொல்ல முடியாது. பொதியாய் நின்ற நெற்களஞ்சியத்துக்கு ஒரு கயவன் தீவைக்க முனைந்தான். தீயை அணைக்கத் தீயினுள்ளே பவானி நுழைந்து விட்டாள். உடம்பில் கொஞ்சம் தீப்புண்களும் ஏற்பட்டு விட்டன. உடனே கபாலீச்சுரன் வந்து குரல் கொடுத்து ஊரைக் கூட்டி வீரசாகசம் செய்து, பிறகுதான் தீயையும் அணைக்க நேர்ந்தது; இவர்களையும் காக்க முடிந்தது.''

''கபாலீச்சுரன் அங்குதான் இருக்கிறானா?''

''பத்து தினங்களுக்கு ஒருமுறை வந்து தலைகாட்டாமல் நின்றதில்லை.''

''அப்படியா! அதுசரி; நெற்களஞ்சியத்துக்குத் தீவைத்தவன்?''

''தப்பிவிட்டான்.''

பவானி மெல்ல விசும்பத் தொடங்கினாள்.

''நான் எடுத்துக் கொண்ட முயற்சியனைத்தும் என்னை விழுங்கி இருக்கும். இறைவன் கபாலீச்சுரன் உருவில் வந்து காத்தான்!''

''பரிசுத்தமான கடமையில் ஆண்டவன் வாழ்கிறான். பவானி! வாங்கிய கடனை...''

''வட்டியுடன் திருப்பித்தர வந்திருக்கிறேன் அமைச்சர் திலகமே!''

''வட்டியுடனா?''

''அதுதான் முறைமை. மக்கள் சலுகை மக்கள் சலுகை என்று அரசுப் பொருளை வாரி வழங்கினால், அரசுக்கும் ஆபத்து; நாட்டின் நலங்களும் தடைப்பட்டுப் போகும். இது வரை மக்கள் சோம்பேறிகளாய் இருந்தார்கள். மானுட பலம் விரயமானது. பழையாறை ஓர் எடுத்துக்காட்டாக இருக்கட்டும். மக்களிடம் எந்தக் காலத்திலும் நல்ல பெயர் வாங்க முடியாது. இவ்வளவு பாடுபட்ட என்னை 'எவ்வளவு சுருட்டினாளோ' என்கிறார்கள். இதிலிருந்து சுருட்டுபவர்களிருக்கிறார்கள் என்பது புரிகிறது. இன்றைக்கு ஒருவேளை சோறு போட்டால் நாளை இரு வேளை போடமாட்டானா என்று எதிர்பார்ப்பர். அதுவும் வடை பாயசத்துடன்! ஒரு பொற்காசைத் தானமாகக் கொடுத்தால் இரு பொற்காசுகளுக்கு அரண்மனை வாசலில் வந்து நிற்பர். மனித மனம் இவ்வாறு சோம்பலாவதை விட, மனித பலம் நாட்டைச் சொர்க்கமாக்க வேண்டும். உண்ண உணவும், உடுக்க உடையும் எவன் தனக்குத்தானே தேடிக் கொள்கிறானோ, அவனே உழைக்கும் மனிதன். அந்த மனித உழைப்புத்தான் நாட்டை மகோன்னதப்படுத்தும். நாட்டைச் சோம்

---

* 'சோதி மணி மறை முன்றில்...' பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராண வரி. 'ஒளி' என்கிற தமிழ்ச் சொல்லிருக்கப் பல இடங்களில் 'சோதி' என்ற சொல்லைப் பெய்து இருக்கிறார், சேக்கிழார். ஒளி என்ற சொல்லை அவர் பயன்படுத்திய இடங்களும் உண்டு.

பெரியாக்க வரிப்பணத்தின் மூலம் சூறை யாடக் கூடாது.''

பிதுங்கிப் போனார் பீடுதமிழின் பெம்மா னான சேக்கிழார்.

யாதவராயன் இதனையுணர்ந்து, ''ஒரு நாட்டை நிர்வகிக்கத்தக்க அறிவு படைத்த வர் பவானி. நான் பல முறை பேச்சில் அறிந்து இருக்கிறேன்!'' என்றான்.

நிமிர்ந்த பேச்சு; நேர்கொண்ட பார்வை; நிஜமான பெண்! இதோ பொற்காசுகளை வட்டியுடன் கொட்டுகிறானே!

''நல்லது பவானி! நீ தலைநகரில் இருக் கிறாய். உன் குடும்பத்தில் யார் யார்?''

''ஒரே தங்கை; பெயர் கற்பகம். அவ் வளவே!''

''நீ விவசாயத்தில் வெற்றி பெற்றதால் உன்னை விவசாய அமைச்சராக்க முடிவு செய்து இருக்கிறேன். நீ சொன்ன மனித பலத்தை விவசாயத்தில் இறக்கு! மண்ணைப் பொன்னாக்கு! மண்ணை மதியாது காயப் போடும் எந்த அரசும் காய்ந்து போகும்; முடி வில் தீய்ந்து போகும்! தட்டாமல் ஏற்றுக் கொள்! நீ பழையாறை சென்று ஒரு வாரத் துக்குள் தலைநகர் திரும்புகிறாய். புறப்பட லாம்!''

சேக்கிழார் தாள் பணிந்து விடைபெறு கிறாள் செல்விழியாள் பவானி.

''யாதவராயா! உன்னிடம் தனித்துச் சில பொறுப்புக்களை ஒப்படைக்கிறேன். நேற்றே சக்கரவர்த்தியிடம் இது குறித்து நான் பேசி விட்டாலும், சில ரகசியங்கள் எனக்கு மட் டுமே தெரிய வேண்டும். இங்கு யாரை நம்பு வது? யாரை நம்பாமல் விடுவது என்பது புரியவில்லை. எனவே ஒற்றர்களுக்கென்று இதுவரை எவரும் அமைச்சரை நேமித்த தில்லை. இதுபோல பெண்களையும் நேமித்த தில்லை. முதன் முறையாக நான் நேமிக்கி றேன். எனவே உனக்கும் பவானிக்கும் கொலு மண்டபத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கையில் உனக்கு ரகசியவாஞ் சனை தருவேன். குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தியை அவ்வளவு எளிதாக எண்ணிவிடாதே! அவருக்கு உடல் முழு வதும் கண்கள். அந்தக் கண்களுக்கும் மீறிய ரகசியங்களைக் காதும் காதும் வைத்தது போல என்னிடம் ஓதவல்ல ஒற்றர்களை நேமித்துக் கொள். உன்னை நம்புகிறேன். காரணம் நீ எனது நண்பன். நீ புறப்பட லாம்.''

குலோத்துங்க சோழ யாதவராயன் முதலமைச்சரைப் பணிந்து விடைபெறு கிறான். திருக்காளத்திப் பகுதியைச் சார்ந்த யதுகுலச் சிற்றரசனானாலும், மாமன்னன் குலோத்துங்கனுடனேயே இருந்துவிட்டவன். எனவேதான் குலோத்துங்க சோழன் என்



அருள்வாக்கு



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு.

என்று திருக்குறளில் சொல்லியிருக்கிறது.

எந்த விஷயமாகட்டும், அதை யார் தான் எடுத்துச் சொல்லட்டும், அதன் ஸரியான தாத்பர்யம் என்னவென்று பார்த்து ஏற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று அர்த்தம். இப்படிச் சொன்னதால் முதலிலேயே எந்த ஒரு வித்யையும் தப்பு என்று ஒதுக்கி வைத்துவிடாமல் அதிலும் ஏதாவது உசந்த கருத்து இருக்குமா என்று ஆலோசிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதே போல, 'போயும் போயும் இவர்களிடமா கற்றுக் கொள்வது? இவர்கள் சொல்லியா கேட்டுக் கொள்வது?' என்றெல்லாம் நினைக்காமல், 'சொல்வது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்; சொல்வதில் தாத்பர்யம் இருந்தால் எடுத்துக் கொள்வோம்' என்று நினைக்க வேண்டுமென்றும் ஏற்படுகிறது. இந்த இரண்டு பண்புகளையும் தர்ம சாஸ்திரங்களில் வெகுவாக ஆதரித்து வற்புறுத்தியிருக்கிறது.

'விஷயமிருக்கிறதா என்று பார்க்கிறேன்' என்று பொய் ஸமாதானம் சொல்லிக் கொண்டு, கன்னாபின்னா ஸமாசாரங்களைக் கூட ஒருத்தன் படிக்கலாம். அதாவது, 'எப்பொருளை'யும் படிக்கலாம். ஆனால் உசத்தி தாழ்த்தி பார்க்காமல் 'யாரார் வாய் கேட்பது' லேசில் முடியாது. அதனால் இந்த அம்சத்தை சாஸ்திரம் நன்றாக அழுத்தம் கொடுத்து எடுத்துச் சொல்லியிருக்கிறது.

கோபத்திலே கொக்கை எரித்த கொங்கண ரிஷி ஒரு ஸ்த்ரீயிடமிருந்து அநேக தர்மங்களைத் தெரிந்து கொண்டு, அப்புறம் அவள் வார்த்தைப்படி, பாக்கியிருந்த தர்மங்களை ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் கேட்டறிந்ததாக மஹாபாரதத்தில் இருக்கிறது. அந்தக் கதையைவிட நம் பூர்விகர்கள் அறிவுக்காக 'யாரார் வாய் கேட்க'வும் தயாராயிருந்ததற்குப் பெரிய சான்று வேண்டாம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கிற விருது இவனுக்குக் கிடைத்தது. அத்துணைக்கு ராஜவிசுவாசி.

கட்டதேவன் என்கிற இயற்பெயர் கொண்ட யாதவராயனுக்கு இப்போது அறத்துன்பமான நிலை. ஒருபுறம் ராஜவிசுவாசம்; மறுபுறம் நட்பு விசுவாசம். ஒரு சமயம் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றை அறிய திருக்காளத்திக்குச் சேக்கிழார் சென்றபோது, வீட்டில் வைத்துப் பராமரித்தவன். தமிழ்பால் பற்றுக் கொண்டு இராமதேவரின் தாள் பணிந்தவன். இப்போது அவன் சுருளைக்கிடைப்பட்ட கரும்புக் கதையாகி விட்டான். ஆயினும் இனிப்புக்கு அவன் துரோகம் செய்யமாட்டானே!

ஆத்தானி மண்டபமாம் கொலு மண்டபத்தில் பவானி பற்றியும், கட்டதேவனை யதுகுலயாதவராயன் பற்றியுமான பிரச்னையைப் புலவர் தண்டி கிளப்பினார்.

தண்டி தமது நோக்கில் இதனைக் கிளப்பினாலும் கிளப்பிவிட்டவர் ஒட்டக் கூத்தர் என்றுதானே நினைப்பர்? தண்டி அவருடைய தகைமைசால் மாணவரல்லவா?

என்ன பிரச்னை...?

இளம் வயதுடைய இவர்கள் அமைச்சராகலாமா?

பளீரென்று மின்னல் போல மறுமொழி பகர்ந்தார் சேக்கிழார்: "அப்படிப் பார்த்தால் முப்பது வயதுடைய நானே இந்த முதலமைச்சர் பதவிக்கு ஏற்புடைத்தவனல்ல. எனவே விலகிக் கொள்ளுகிறேன்."

இம்முறை ஒட்டக்கூத்தர் பதறித் துடித்து எழவில்லை. ஆரம்பத்தில் அவரைக் கொண்டுவர அரும்பாடுபட்டவரல்லவா? அது மாமன்னர் ஆடிய நாடகம்.

ஆனால் இப்போது?

தொண்டர் புராணம் பாட வந்த பெரும் தமிழ்ப் புலவராகிவிட்டாரே சேக்கிழார். ஒட்டக்கூத்தர் இப்போது தொல் தமிழ்ப் புலவர்தானே?

மாமன்னன் குலோத்துங்க சோழன் பதறிப் போனான். "அமைச்சர்களைப் பொறுத்த மட்டில் அப்படியொன்றும் அரசியல் சட்டமில்லை. அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் இருக்கின்றன. புலவர் தண்டி அவர்கள் எழுப்பியது வீண் பிரச்னை.

இப்போது சேக்கிழார் கம்பீரமாகவே எழுந்தார்: "அவையோர்களே! சான்றோர்களே! ஒருவேளை அப்படிச் சட்டமிருந்தாலும் அதனை மாற்றியமைக்கவே எனது சர்வசக்தியைப் பயன்படுத்த இருந்தேன். ஆனால் மாமன்னரே எடுத்துச் சொல்லிவிட்டார். அமைச்சர்கள் இயல்பான நுண்ணறிவும் செயற்கையான நூலறிவும் பெற்றுத் திகழ வேண்டும் என்று வள்ளுவர் பெருமானார் சொல்லியிருந்தாலும் அதே நேரத்தில் விடாமுயற்சியும் செயல்திறனும் தேவை என்கிறார். சோழப் பேரரசில் இளைஞர்கள் அமைச்சர்களாக வேண்டும் என்று விரும்புகிறவன் நான். வயதானதால் குறுக்கு வழியில் பொருள் சேர்த்து வாழ்வை வளப்



"அடிக்கடி பவர் கட் ஆவதற்குப பாராட்டுத் தெரிவித்து கடிதம் வந்திருக்கு சார்!"

"பாராட்டா? யார் எழுதினது?"

"கேடி சந்தன், முகமூடி கண்ணன், பிளேடு பக்கிரி, ரௌடி ராக்கப்பன்..."

படுத்திக் கொள்ளும் திருடர்களைவிட, நமது மொழி, நமது நாடு, நமது மக்கள் என்று சிந்திக்கிற இளைஞர்கள் தேவை! நமது மண்; நமது மக்கள் என்பதற்கு இங்கே ஒரு பெண் — பவானி சான்றாக விளங்குகிறாள்! எனவே தான் மண்ணையும் அதனை உழும் மக்களையும் அவர்களிடம் ஒப்படைத்தேன்! எனது அமைச்சுப் பதவிக்காலம் சிறிதே ஆனாலும் தமிழகத்தைத் தங்கத்தால் அலங்கரித்து விடைபெறுவேன்; தமிழால் அலங்கரித்து விடைபெறுவேன்; தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தி விடைபெறுவேன்!"

சேக்கிழார் இவ்வளவு உணர்ச்சி வயப் பட்டுப் பேசி இதுவரை யாரும் கண்டதில்லை. இது பேச்சல்ல; தமிழின் மூச்சு! இவரல்லவோ மாண்புமிகு முதலமைச்சர்!

அவையில் கரவொலிகள் எழுவதற்கு மாறாக நீண்ட அமைதி நிலவியது. கரவொலிகள் என்பன முகத்துடைப்பு; இது பொட்டிட்டுப் பூரிப்பது.

அன்றைய திருவோலக்கம் பலரை அசைத்துப் பார்த்து நிறைவெய்தியது.

தில்லையில் நடைபெறவிருக்கும் பேரம்பலம் பொன்வேய்கிற திருப்பணி நோக்கி அடுத்த வாரம் புறப்பட்டாக வேண்டும்.

அந்தப் பொன் வேய்ந்த விழா எட்டுத் திசையும் பூரிக்குமளவுக்கு நடைபெற வேண்டும் என்பது சோழ மாமன்னருடைய கட்டளை. இந்தப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவன் * பாலறுவாயன்.

இரவு நிலவைத் தாலாட்டிக் கொண்டிருந்தது.

அரண்மனையில் சோழ மாமன்னனைக் காணப் புறப்பட்டார் மாண்புமிகு முதலமைச்சர் சேக்கிழார். அது ஒரு தனித்த சந்திப்பு! அரண்மனைத் தோட்டத்திலேயே அவர்கள் தனித்துச் சந்தித்தனர்.

"சேக்கிழாரே! தில்லையே திமிலோகப் படுகிற மாதிரி இந்தத் திருவிழா நடைபெற வேண்டும்!" என்றான் குலோத்துங்க சோழ மாமன்னன்.

"அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கப் பாலறுவாயனும், யாதவராயனும் இருதினங்களுக்கு முன்பாகவே புறப்பட்டு விட்டனர் அநபாய சோழ மாமன்னா!"

"ஏதேனும் விசேஷமான ஏற்பாடுகள்?"

"விசேஷமென்றால்? நீங்கள்தாம் சொல்ல வேண்டும்."

"உங்கள் பால் பக்தி பூண்டிருக்கிறாளே ஜோதி; அந்த நாட்டிய மாதுவின் நடனத்தை ஏற்பாடு செய்தால்?"

சேக்கிழார் சற்றே தயங்கினார்.

இவருக்கும் ஜோதிக்கும் காதல் உண்டு என்று ஒட்டக்கூத்தர் சொன்னாரே, இவர் இப்படிக் கேட்பது...

"சோழ பூபதி! ஜோதி உங்களுக்கும் அறிமுகமானவள்தானே?"

"எனக்கா? ஜோதியா! அன்றொரு நாள் மாங்கனி தந்தாள். அதற்குப் பிறகு அந்தத் தீங்கனியை நான் எங்கு சந்தித்தேன்?"

"அவள் ஒப்புக் கொள்ள வேண்டுமே!"

"நீங்கள் சொன்னால் மறுக்கவா போகிறாள்? பொருள் கேட்பதையே விடுத்து அருளின் ஆணை என்றல்லவா ஒப்புக் கொள்வாள்? பொருள் வேண்டுமென்றாலும் போதுமானதைத் தரலாமே!"

"நான் அவளுக்குத் தெய்வமாக இருக்கலாம். அவளுக்கென்று ஒரு காதலன் இருக்கிறான். அவன் சம்மதிக்க வேண்டுமல்லவா?"

"அவளுக்கு ஒரு காதலனா?"

"ஆமாம்; அந்தக் கபாலீச்சுரன்!"

"அந்த மண்டையோடா?"

"மண்டையோடானாலும் அவள் மதிக்கிறாளே! எதற்கும் மன்னர் என்கிற முறையில் நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். பிறகு நான் மகாமந்திரி என்கிற முறையில் கேட்டுப் பார்க்கிறேன்."

"எனக்கு அவள் மசிவாளா?"

"முறைமைக்கு! மன்னர் கேட்கவில்லையே என்கிற மனவருத்தமிருக்கக் கூடாது அல்லவா?"

தொடர்கிறது செங்கோல் சிந்தனை.

அப்போது, தோட்டத்து வேலியோரமாகப் பெருத்த சலசலப்புக் கேட்க, மாமன்னன் குலோத்துங்கன் வாளையுருவிக் கொண்டு பாய்ந்து செல்லுமுன், கொலையே நிகழ்ந்துவிட்டதுபோல 'ஓ' என்கிற இரைச்சலிட்டு ஓடினான் ஒருவன். அவனைப் பின் தொடர்ந்து இருவர் ஓடுகிற சத்தம்.

அமைதியான சோழப் பெருநாட்டில், 'உட்பூசலால் ஒற்றறியும் பகை நோக்கு இது' என்பதனையுணர்ந்த சேக்கிழார், உணர்ச்சி வயப்பட்டு எழுந்து கவனித்தார்.

(தொடரும்)

* 'தொண்டைமான்' என்ற சிறப்பு விருதுடன் சேக்கிழாருக்குப் பின் முதலமைச்சனாக அமர்ந்தவன் பாலறுவாயன் என்கிறது வரலாறு. அண்ணனிடம் பெற்ற பயிற்சி! இதனை வலியுறுத்தவே முன்கூட்டியே இவரைக் கொண்டு வந்தேன்.

கதவு திறக்கவில்லை.

நவநீதன் ஐந்து நிமிஷமாகத் தட்டிக் கொண்டிருந்தான். ஓழிவின்றியல்ல; விட்டுவிட்டு. பக்கத்தில்தான் ரயில்வே ஸ்டேஷன். ஒரு மின்சார ரயில் அவன் தட்டத் தொடங்கியதிலிருந்து இதற்குள் வந்து நின்று, போய்விட்டது.

நவநீதன் கதவைத் தட்டிக் கொண்டு நிற்பதை ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஓரிருவர் திரும்பிக் கவனித்தனர். பிளாட்பாரக் கோடிக்கும் பத்தடி தாழ்விலிருந்த அந்த வீதிக்கும் மத்தியில் இரும்புக் கம்பி வேலி நின்றது. அந்தப் பக்கம் பிளாட்பார விளக்கு, இந்தப் பக்கம் தெரு விளக்கு.

அவன் அந்த வீட்டுக் கதவைத் தட்டுவதைத் தெருவிலும் திண்ணையிலும் நின்ற நிலையில் நாலைந்து பேர் வேடிக்கை பார்த்தனர். வேடிக்கைதானே, பார்த்துக் கொள்ளட்டும் என்று தளராமல் தட்டினான் நவநீதன்.

சைக்கிளில் போன எவனோ ஒருவன் கிண்டலாக மணியடித்துவிட்டுப் போனான். கொஞ்ச தூரம் தள்ளி அவன் விசிலடித்ததாகக் கூடத் தோன்றியது.

சரக் சரக்கென்று செருப்பைத் தேய்த்துக் கொண்டு நடந்து வந்த ஒரு பெரியவர் நின்றார்.

''ரொம்ப நேரமாத் தட்றீங்க போலே!! தூங்கிட்டு இருப்பாங்க'' என்று சொல்லிவிட்டு மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

அது தூங்கும் நேரம்தான். இரவு மணி பத்தை நெருங்கிற்று. ஆனால் நிச்சயம் பிரேமா தூங்கியிருக்க மாட்டாள்.

நவநீதன் சொல்லிக் கொள்ள வருவான் என்று அவளுக்குத் தெரியும். நவநீதனுக்கும் அது தெரியும் என்பதும் அவளுக்குத் தெரியும். பிரேமா பிடிவாதமாக மௌனம் சாதிக்கிறாள், கதவைத் திறக்க விரும்பவில்லை என்று காட்டுவதற்காக.

திறக்க விரும்பாத கதவைத் தட்டிக் கொண்டு அவனைச் சுற்றிய ஒரு வேடிக்கை பார்க்கும் வட்டத்தில் நிற்பதில் ஒரு செல்லாக்காசான சுயமதிப்பு வீழ்ச்சி நவநீதனுக்குள் லேசாக எழுந்தது.

திரும்பிவிடலாமா என்று நினைத்தான்.

ஆனால் —

தண்டையார்ப்பேட்டையில் ஒரு பஸ். அப்புறம் பீச் ஸ்டேஷனிலிருந்து எலெக்ட்

அப்போது கூட இந்தக் கதவு மூடியிருக்கலாம்...

விவேக்



ரிக்ட்ரெயின் என்று ஊரெல்லாம் அலைந்து விட்டு ஒரு மனிதப் பார்சல் போல் உள்ளே வந்து விழும்போது முறுக்கியிருக்கும் வெறுப்பை, சுமந்து வருகின்ற கசப்பை விரக்தியை அந்தக் கதவு ஏற்று அவனை மீண்டும் மனிதனாக்கி வெளியே அனுப்பியிருக்கிறது. இப்போது திரும்பி விடுவது நியாயமல்ல.

"பிரேமா" என்று நவநீதன் அழைத்தான்.

உள்ளே தூரத்தில் எங்கோ 'லொக்' கென்று ஓர் ஒற்றை இருமல்; புரைக்கு ஏறி விட்டாற் போல!

அவள் வரக்கூடும் என்று எதிர்பார்த்தான் நவநீதன்.

அந்தக் கதவின் இருபுறத்திலும் வாசற்படியிலிருந்து அரையடி அரையடி அகலத்தில் சிறு திண்ணை. சௌகர்யமாக உட்கார முடியாது. கால்வலித்தால் இடுப்பை அமர்த்தலாம். அப்படி அமர்த்திக் கொண்டு உட்கார்ந்தான் நவநீதன், காத்திருந்தான்.

அவள் வரவில்லை.

இன்னும் ஒரு தடவை முயற்சி செய்யலாம், அதுவும் இப்போதல்ல, சற்று கழித்து என்ற முடிவுடன் காத்திருந்தான்.

அவனுக்கு மார்பு வலிப்பது போன்ற உணர்வு.

நான் ஒரு குற்றமும் பண்ணலியே என்று நினைத்தான்.

கலியாணத்திற்காக வீட்டில் பெண் பார்க்கிறார்களே என்று மட்டும் தான் முதலில் சொன்னான்.

"பார்த்தாச்சா.... பார்த்துக்கிட்டிருக்காங்களா?"

"பார்த்தாச்சுன்னுதான் லெட்டர் போட்டிருக்காங்க!"

"பொண்ணு அசலா? சொந்தமா?"

"சொந்தம்... ஒண்ணுவிட்ட மாமா பொண்ணு."

"அழகா இருப்பாளா?"

"சுமாரா இருப்பா."

"ரொம்பப் படிச்சவளோ?"

"இல்லே.... பத்தாவது படிச்சவ."

"வசதியான வீடோ?"

"அப்படி வசதி ஒண்ணும் இல்லே. ஒரே ஒரு சின்னக் கூரை வீடு. அதான் சொத்து. மாமா காலமாகி ஆறு வருஷமாச்சு."

"கூடப் பிறந்தவங்க?"

"ரெண்டு தம்பி. ஒரு தங்கை."

பிரேமாவின் பெருமூச்சுக் காற்று அவன் மேல் தாக்கிற்று.

"நீ போகணுமோ!"

"வரச் சொல்லித்தான் அப்பா எழுதியிருக்கார்.... நான் போகப் போறதில்லே. வர முடியாதுன்னு எழுதிட்டேன்."

"ஏன்?"

"ஏன்னு?" அவன் கேள்வியிலேயே ஒரு பதில் சொன்னான். கதவு அப்போது மூடியிருக்கலாம்.

ஹைகோர்ட்டுக்கு எதிரில் சாஸரில் வாங்கிய சமோசாவை, ஒரு சாயங்காலத்தில் கடித்துக் கொண்டிருக்கும்போது கருங்கல் சுவரில் சாய்ந்து பிரேமா கேட்டாள்.

"நீ ஏன் என்னையே சுத்திக்கிட்டிருக்கே நவூ?"

"உங்கூட இருந்தா எனக்குப் பாதுகாப்பா இருக்கு."

"இல்லேன்னா?"

"நானே எனக்குக் காணும் போயிடறேன்!"

"புத்திசாலித்தனமாப் பேசறே! எப்படா கேப்பாள்னு யோசிச்சு வச்சாப்லே இருக்கு."

"ஆமா..... நீ பெரிய இவ! எப்ப கேப்பேன்னு யோசிச்சு யோசிச்சுப் பதில் தயாரிச்சு வச்சிருப்பேன்!"

"பெரிய எவ?"

"சொல்ல மாட்டேன் போ!"

"நான் ஒரு டைப்பிஸ்ட். ஜஸ்ட் டைப்பிஸ்ட். விதவை. அப்படி ஆனப்பறம்..."

"ஆனப்பறம்?"

"ஒனக்கே தெரியும்!"

"எது?"

"எல்லாம்!"

"ம்ஹ்ம்."

"நீதான் மொதல் இல்லே."

"ஸ்டாப் இட்! அதெல்லாம் எதுக்கு இப்ப?"

"பெரிய இவன்னியே."

"கோச்சுக்கிட்டே போலேருக்கு."

"நீ கூஸ். ஒன் மேலே கோவம் வந்தா நான் ஒரு கூஸ்! நான் கோச்சுக்கலே. நெனைச்சுப் பார்க்கிறேன். என்னை ஒனக்குப் பெரிய இவளாக்க என்ன காரணம்! இந்தக் கலரா... இந்த உடம்பா?"

"பிரேமா.... சமயத்திலே ஒனக்கு ஒரு சர்ஜரி புத்தி வந்துடறது. இது சைனா பஜார்லே சமோசா சாப்பிட்டுக்கிட்டுப் பேசற பேச்சே இல்லே."

"நவூ.... ஒத்தையா ஒரு பொண்ணு, சம்பாதிக்கிற விதவையா, இந்த வண்டி, அந்த வண்டின்னு ஏறி ஏறி ஜாக்கிரதையா சௌகர்யமா வசதியாப் போக நெனைச்சவங்களால இறக்கித்தள்ளப்பட்ட ஒருசுமையா..."

"இன்னிக்கு என்ன ஒரே தன்னிரக்கம்?"

"சில சமயம் அப்படித்தான்."

"நான் இருக்கேனே!"

"நீ இல்லேன்னு சொல்லலியே நானும்!"

"அடுத்த மாசம் பாக்டரிலே போனஸ் வரும்!"

"என்ன செய்யலாம்.... ஒரு டூர் போவோமா?"

"போவோம்! திருநீர்மலையா, திருப்பதியான்னு தீர்மானி."

"எதுக்கு?"

"நம்ம கல்யாணத்துக்கு!"

"திருப்பிச் சொல்லு."

"நம்ம கல்யாணத்துக்கு!"

"ஓஹ்! பெரிய தியாகி. விதவைக்கு வாழ்வளிக்கும் வள்ளல். அரசாங்கத்திலே தங்கப் பதக்கம் கெடைக்கும். முட்டாள்."

"பிரேமா!"

"சாஸர் பத்திரம். மூணு ரூபா வாங்கிடு

சுளுக்கு இவனது துடிப்பான நாளைப் பாழாக்க விடலாமா?



உங்கள் கைகளிலேயே குணப்படுத்தும் சக்தி

பாசமிக்க மென்மையான உங்கள் கைகளின் ஸ்பரிசம், கூடவே குணப் படுத்தும் சக்திமிக்க அயொடெக்ஸ்— இவனுக்குத் தேவை. எனவே கைவசம் இருக்கட்டும் அயொடெக்ஸ். ஏனெனில் பாதிக்கப்பட்ட திசுக்களைக் குணப்படுத்தும் அயொடின் மற்றும் வலி தணிக்கும் மீத்தைல் ஸலிஸிலேட் கொண்ட பாம் அயொடெக்ஸ்.

அயொடெக்ஸ் இருமுறை தினம் தடவ இரு மடங்கு குணம்

வலி தணியும்வரை, தினம் இருமுறை அயொடெக்ஸ் தடவ டாக்டர்கள் பரிந்துரைக்கின்றனர்... பின்னரும் இரு தினங்கள்...ஏனெனில், வலி ஒரு அடையாளம் மட்டுமே. நிஜமான பிரச்சினை திசுக்களின் உள்ளார்ந்த பாதிப்பு.

எனவே உமது அன்பிற்குரியவருள் யாரேனும் சுளுக்கு, தசைப்பிடிப்பு, மூட்டுநோவு, உடல் வலி இவற்றால் துன்புற்றால் அயொடெக்ஸ் தடவித் தேயுங்கள். தினம் இருமுறை. இரு மடங்கு வேகமாக அவர்கள் தத்தம் வேலைகளை கவனிக்கத் தொடங்குவர், உங்களை அன்போடு நினைப்பார்கள்.

அயொடெக்ஸ்®– குணப்படுத்தும் சக்திகொண்ட பாம்

SKOF —ஓர் எஸ்கேஎ∴ப் தயாரிப்பு.

ELL-1509

வான். போவோமா.... டீ சாப்பிடணுமா?''

''இன்னிக்கு நீ சகிக்க முடியாத மாதிரி குந்தறே! நான் சொன்னது நிச்சயம்.''

''என்னிக்காவது என்னேக் கல்யாணம் பண்ணிக்கோன்னு நான் ஒன்னேக் கேட்டிருக்கேனு?''

''..........''

''இது எங்கேயோ முடியும்னு உனக்கு ஒரு பயம் வந்துட்டாப்பல இருக்கு! சட்டுப்புட்டுனு ஒருத்தரை ஒருத்தர் கைது பண்ணிக்கிட்டாத் தேவலாம்கிற கிலி. அப்புறமா.... கல்யாணம் பண்ணிட்ட பிறகு மாட்டிக்கிட்டோமேன்னு எரிச்சல் வரப்ப....''

''பிரேமா?''

''அந்தச் சமூகச் சடங்கு இல்லேன்னு நம் மேல நம்பிக்கையா நாம இருக்கமுடியாதோ?''

''ரொம்ப ஸாரி பிரேமா.... ஒம் மனசுலே இருக்கற காயங்களுக்கு எல்லாம் நான் பொறுப்பு இல்லே. ஆனு நான் சொன்னிட்டேன். கல்யாணம் வேணும்னு வேணும். விட்டுடுவோம்! வாஸ்தவமாச் சொன்னு எனக்கு ஒன்னேப் புரிஞ்சுக்கவே முடியலே... நான் ரொம்ப சராசரி. ஆஃப்டர் ஆல்...: ஒரு பாக்டரி தொழிலாளி. டூல் அண்ட் டை மேக்கர்.''

''டீ சாப்பிடுவோம்.''

கதவு அப்போதுகூட மூடியிருக்கலாம்.

அடையாறுக்கு ஒரு நாள் பிரேமா அவனே அழைத்துப் போனுள், தியோஸாபிகல் சொஸைடி ஆலமரத்துக்கு.

''மெட்ராஸ்லே எத்தனே வருஷமா இருக்கே?''

''எட்டு வருஷமாச்சு வந்து!''

''அடையாறு ஆலமரம் பாத்திருக்கியா?''

''இல்லே.''

''என்ன மனுஷன் நீ? தண்டையார் பேட்டை... சைதாப்பேட்டை. இப்படியே எட்டு வருஷமா?''

''இல்லே நடுவிலே சிந்தாதிரிப் பேட்டை, கொருக்குப்பேட்டையும் உண்டு!''

''சமத்து! இன்னிக்கு வா போகலாம்.''

பிரேமா போல் ஒரு தேவ கன்னிகை உலவ வேண்டிய கந்தர்வ லோகமாக நவநீதனுக்கு அது தோன்றியது. அன்று அப்படி ஓர் உச்சத்தில் அவன் இருந்தான்.

சில்லிட்டிருந்த ஒரு மொஸைக் பெஞ்சில், தூரத்தில் ஆள் நடமாடும் தனிமையில் பிரேமா ஒரு ககன சஞ்சாரம் செய்யும் உல்லாசத்தோடு அமர்ந்து பாடினுள்.

காப மகரீ ஸாஸா நிரி ஸநிதா நித
தா தநிஸ ஸாரிநி ஸா ஸநிதா
ஸரிகாப மகரீ ஸாஸா நிரிஸநிதா நித
தா தநிஸ நிஸ ரீகக மகமா

அந்தக் குரல் ஒரு விமானமாகி அவனே ஏற்றிக் கொண்டு விண்வெளி யாத்திரை செய்தது. நவநீதன் என்ற டூல் அண்ட் டை மேக்கரை மொஸைக் பெஞ்சிலேயே உட்கார்த்தி வைத்துவிட்டு மனசை அன்னப் பட்சி மாதிரி ஏந்தி ஆகாய வலம் வந்தது.

''இது என்ன பிரேமா?''

கிருஷ்ணகிரியைச் சுற்றி...




** ''உன்னேக் கிருஷ்ணகிரி பஸ் ஸ்டாண்டில் சந்திக்கிறேன்'' என்று நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதிவிட்டீர்களானுல், அவர் தலையைப் பிய்த்துக் கொள்ளுவார்; எந்த பஸ் ஸ்டாண்ட் என்று. பழைய பேட்டை, புதுப்பேட்டை என்று இரண்டு பஸ் ஸ்டாண்டுகள். பழைய பேட்டைதான் அஃபிஷியல் பஸ் ஸ்டாண்டு. ஆனுல் பெங்களூர் ரோடு, சென்னே ரோடு, திருவண்ணுமலே ரோடு, சேலம் ரோடு ஆகியவை சந்திக்கின்ற இடத்தில்தான் பஸ்கள் நிற்கின்றன. (அங்குதான் டிரைவர், கண்டக்டர் சாப்பிட நல்ல ஹோட்டல் இருக்கிறது!) பழைய பேட்டை வாசிகளின் கம்ப்ளெய்ண்ட் பஸ்களே பழைய பேட்டை பஸ் ஸ்டாண்ட் வரை விட வேண்டும் என்பது. (ஆனுல் பழைய பேட்டை பஸ் ஸ்டாண்டும் மிகக் கேவலமான நிலேயில் இருக்கிறது என்பது வேறு விஷயம்.)




** ஊரின் நடுவில் பெரிய மலே. மலேயின் ஒரு புறத்தில் சையத் பாஷா என்ற முஸ்லிம் பெரியவரின் சமாதி. அவர் வாழ்ந்த காலத்தில் பல அற்புதங்கள் நிகழ்த்தியவராம். அவர் சமாதியை வணங்க, பம்பாய், பெங்களூர் போன்ற இடங்களில் இருந்தெல்லாம் நூற்றுக்கணக்கானவர்கள் வருவதுண்டாம். சமீப காலத்தில் இந்த மலேயில் ஒரு சலசலப்பு. கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்திலிருந்தே அந்த மலே ஹிந்துக்கள் மலேதான் என்றும், முஸ்லிம் தர்க்காவெல்லாம் கூடாது என்றும், இந்து முன்னணி, ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புக்கள் கூற, முஸ்லிம்களும், எங்களுக்குத்தான் இந்த மலே சொந்தம் என்று எதிர் விவாதம் ஆரம்பிக்கப் பிரச்னே புகைய ஆரம்பித்தது. இரண்டு ஒருநாள் மலேயின் மறுபுறத்தில் ஆர். எஸ். எஸ். கொடி பறந்து கொண்டிருந்தது. இதனுல் முஸ்லிம்கள் மத்தியில் கசமுசா! எப்ப

டியோ இருதரப்பிலும் இந்த விவகாரத்தைச் சுமுக மாக முடித்து வைத்திருக்கிறார்கள். இனியும் அது தொடராமல் சுமுகமாக இருக்க வேண்டும் என் பதுதான் நமது பிரார்த்தனையும்!



•• ஆஸ்பத்திரியில் 'அவசர சிகிச்சைப் பிரிவு' — மிக அவசரமாக ஆரம்பித்துத் தேர்தல் பிரசாரச் சுவ ரொட்டிகளைத் தாங்கிக் கொண்டு அப்படியே நிற்கிறது. 25.1.84 இல் அமைச்சர் ஹண்டே திறந்து வைத்த இந்த அவசரப் பிரிவு இயங்க ஆரம்பிக்காதது ஏன்? ஒருவேளை அவசர கேஸ் களே கிருஷ்ணகிரியில் கிடையாதோ!



•• கிருஷ்ணகிரியில் இருந்து பத்து கி. மீ. தூரத்தில் இருக்கிறது கிருஷ்ணகிரி அணை. அணையை ஒட்டி இருக்கும் பூங்காவை இன்னும் நன்றாகப் பரா மரிக்கலாம். தினசரி நிறைய டூரிஸ்டுகள் வந்து போகிறார்கள். எந்த ஆற்றின் நடுவிலும் கட்டா மல், மலைகளிலிருந்து வரும் மழைத் தண்ணீரை மட்டுமே நம்பிக் கட்டப்பட்டுள்ள இந்த அணை காமராஜ் காலத்தில் திறந்து வைக்கப்பட்டது. பூங்காவில் ஒரு கூண்டில் நிறையப் புள்ளிமான்கள் இருக்கின்றன. இங்கும் தங்குவதற்கான காட் டேஜ்கள் உண்டு. 'சுற்று வட்டாரங்களில் இருந்து வரும் ஜோடிகளுக்கு ரசீது கொடுக்காமல் வாடகை வாங்கும் வாட்ச்மேன்களும் உண்டு!' என்று எங்கள் டாக்ஸி டிரைவர் சொன்னபோது நாங்கள் ஆச்சரியப்படவில்லை. இது எங்கும் நடப் பதுதானே!

•• புதுப்பேட்டை வாழைப்பழ மண்டி அருகில் இருக் கும் தாய் — சேய் நல விடுதி கட்டப்பட்டு நான் கைந்து ஆண்டுகளாகிவிட்டன. இன்னும் திறக்கப் படவில்லை. பார்த்தார்கள் முனிசிபாலிடிகாரர்கள். சாலையில் துப்புரவு பணியாளர்களுக்கான அட் டெண்டென்ஸ் எடுக்கிற வேலையை இங்கே நடத்த ஆரம்பித்துவிட்டார்கள்! அட்டெண்டென்ஸ் எடுக் கும் அரைமணி நேரத்துக்காக இப்படி ஒரு கட்டடத் தைக் கட்டிக் கொடுத்த அரசுக்கு ஒரு 'கங்ராட்ஸ்!'

''தோடி ராகம், ஆதி தாளம், தமார எட்டேந்திரர் க்ருதியிலே பல்லவி.''

''எனக்கு என்னமோ போலிருக்கு.''

''எப்படி?''

''நான் ரொம்பச் சாமான்யனு.... எதுவோ பூச்சி, ஜந்து மிருகம் மாதிரி உன் முன்னாலே நிக்கறாப்பிலே.''

அவள் சிரித்துவிட்டாள். பிறகு சொன் னாள்.

''பரவால்லே!''

''எப்படி?''

''எல்லாமே ஜீவராசியாச் சொன்னே பாரு.... கல்லு மண்ணு மரக்கட்டைன்னு ஜடமாச் சொல்லாமே!''

''நான் ஜடமா?''

''கோவம் வந்துட்டுது இல்லே. நீ எப்படி ஜடமாவே!''

''இன்னும் கொஞ்சம் பாடேன். பல்லவி மாதிரியே இன்னொண்ணு சொல்வாங்களே..''

''அனுபல்லவியா?''

''ஆமாம்.''

''நீ தா தபமா பாமா மாதப பம
கம பதநித நித தநீ ரிஸநித நித''

அவன் வாயையே பார்த்துக் கொண் டிருந்தான்.

''தா பதநிஸாதபமா பாமா மாதப பம
கம பதநித நித. தநீ ரிஸநிதநித''

''எப்படி? எப்படி? கடைசியிலே பாடி னியே அது எப்படி?''

''ரிஸநிதநித.''

அவன் வாயும் கூடவே முனகியது.

''ரிஸநிதநித.''

''பிரேமா.''

''வெளியே வந்தாக் கையைப் பிடிக் காதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக் கேன்!''

''ஸாரி!''

''ம்ம்ம். என்ன விஷயம்? சொல்லு!''

''நெஜம்மா ஒன்னைப் பார்த்தா எனக்கு இப்போ பயம்மா இருக்கு.''

''ஏன்?''

''ஒன்னை என்னால அளந்துட முடியாது. உன்னுடைய இத்தனையையும் அள்ளி வாரி எனக்குள்ளார அடைச்சுக்க முடியாது. எனக்கு தா தத்தனாண்டு மூளை. தா தித்தனாண்டு மனசு....''

''நலு....''

''என்ன?''

''ஒன்னை எனக்கு ரொம்ப புடிக்குது.''

''ம்ஹாஹ்ஹாம். நீ ஏதோ கன்செஷனு ரிபேட்டோ கொடுத்துட்டுச் சொல்றே.''


''இந்த எடத்திலே, ஒன்னைத் திட்ட வேண் டாம்னு பார்க்கறேன்.''

''இனிமே எந்த எடத்தில வேணும்னாலும் நீ திட்டிக்கோ. எனக்குக் கவலையில்லே.''

''ஈஸ்வரா....'' என்று மார்பு தூக்கிப் போடும்படியாக அவள் பெருமூச்சு விட்டாள். படி தாழ்ந்துவிட்டது மாதிரி.

கதவு அப்போது கூடச் சாத்தப்பட்டிருக்க லாம்.

நீங்கள் எப்படி சார்?



நீங்கள் ஆஸ்துமாக்காரரா? ஈஸினோபீலியா இருக்கிறதா?

ஐயா! உங்களுக்கு ஒரு அட்வைஸ் பண்ண அனுமதியுங்கள். தயவு செய்து தர்மபுரி மாவட்டத்துக்குப் போகாதீர்கள். பார்த்தீனியம் என்ற எதிரி உங்களுக்காக அங்கு எந்த உரமும் இல்லாமல் காடாக வளர்ந்து கொண்டிருக்கிறான். வாசனை பிடித்தாலே உங்கள் நோயின் தீவிரம் அதிகரிக்கக் கூடும்! இதை நாங்கள் சொல்லவில்லை. மருத்துவ நிபுணர்களே சொல்லிவிட்டார்கள்.

"அது சரி, அப்போ தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் எங்கள் 'கேஸ்'காரர்கள் என்ன செய்கிறார்கள்?" என்றுதானே கேட்கிறீர்கள். சுருக்கமாகச் சொன்னால் அவஸ்தைப்படுகிறார்கள். மருந்துகளைக் கையில் தயாராக வைத்திருப்பார்கள். வெட்ட வெட்ட ராவணன் தலை போல மீண்டும் வளரும் பார்த்தீனியத்தை ஒழிக்க முடியாமல் நகராட்சிகளும், பஞ்சாயத்துக்களும் திண்டாடுகின்றன.

ஆகவே, ஐயா மீண்டும் சொல்கிறோம், நீங்கள் ஆஸ்துமா......

நேற்றிரவு ஹோவென்று தலைமுடி பறக்கும் கடற்கரைக் காற்றில் பிரேமா லைட் ஹவுஸ் அருகே கடல் உறுமுவதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னாள்:

"அதைக் கேட்டா ரொம்பப் பர்வமா இல்லே?"

"எதை?"

"கடல் ஓசையை."

"எனக்கு ஒண்ணும் புரியாது."

"கவனி."

கவனித்தான் நவநீதன்.

"கேளு."

"கர்ப்பேந்திரம் பொறுமற மாதிரி இல்லே..."

"கர்ப்பேந்திரம்னா....?"

"டினோஸார்... பிரம்மாண்டமான ஆதி கால மிருகம்."

சினிமா டினோஸார்கள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

"ஆமா."

நவநீதன் கையை அவள் இருட்டில் துழாவிப் பிடித்தாள்.

"துக்கம்பா நவு அது! ஆதி துக்கம். அநாதி துக்கம்.... நீ, நான் தோ தூரத்திலே கிஸ் பண்றாங்களே அவங்க.... பூமி, இந்தப் பிரபஞ்சம் முழுக்கச் சொமக்கிற துக்கம்."

அவன் அந்தக் கையை இறுகப் பிடித்தான். அவளுக்கு வலித்திருக்கும். ஆனால் சொல்லவில்லை.

"நாளைக்கு நான் ஊருக்குப் போறேன் பிரேமா."

"போயி?"

"திங்கக்கெழம ஆட்டிக்கு வந்துடுவேன். மாமா பொண்ணு வேண்டாம்னு சொல்லிட்டு வந்தாகணும். அப்பா ரொம்ப சூடா எழுதியிருக்கார்."

கடற்காற்று அவளது கனலும் மூச்சில் சிறிது வெப்பம் ஏந்திச் சென்றது.

"முட்டாள்!"

"என்ன பிரேமா?"

"மாமா பொண்ணை மறுக்காதே!"

"நீ?"

"சுத்தமா ஸ்க்ரீனை இழுத்து மூடிடு. அவ்வளவுதான். ஹேரால் ட்ராமா ஓவர்."

"பிரேமா."

"நவு.... அதான் பாதுகாப்பு."

அப்போது கூட இந்தக் கதவு மூடியிருக்கலாம்.

ஐந்து நிமிஷத்துக்கு மேலாகிவிட்டது. திண்ணையை விட்டு நவநீதன் எழுந்தான். கடைசியாக ஒருமுறை தட்டினான். பதில் இல்லை.


இனிமேல் அவன் தாமதிக்க நேரமில்லை. மின்சார ரயில்கள் திடீரென்று ரத்தாகிவிடலாம். அவன் தாம்பரத்தில் இறங்கி பஸ் பிடிக்க வேண்டும்.

நவநீதன் கதவை ஒருமுறை பார்த்தான், விடை பெற்றுக் கொள்வது போல.

பின்பு இறங்கி மெதுவாக ஸ்டேஷனை நோக்கி நடந்தான். படிக்கட்டில் ஏறி பிளாட்பாரத்தில் நுழைந்து அவள் வீடு தெரிகிற பிளாட்பாரக் கோடிக்கு வந்து விளக்கடியில் நின்றான்.

இரவின் அமைதியில் தடக்கென்று பத்தடி கீழேயிருந்து அந்த வீட்டுக் கதவு திறக்கும் தாழ்ப்பாள் ஓசை கேட்டது. அவன் சிலுக்கென்று ஆவல் ஒரு நாகம் போல் படம் விரிக்கக் கதவைப் பார்த்தான். பிரேமா வெளியே வந்து நின்று இருபுறமும் தெருவைப் பார்த்தாள்.

அங்கிருந்தவாறே, "பிரேமா" என்று கத்த வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அவன் மௌனமாகக் கவனித்தான். யதேச்சையாக நிமிர்ந்த அவள் நவநீதனைப் பார்த்துவிட்டாள். கையை உயர்த்தி 'டாடா' காட்டினாள். அவனும் கையை உயர்த்தினான். ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அதற்குள் மின்சார ரயில் வந்துவிட்டது.



நேரம் உங்களை ஆக்கவோ அழிக்கவோ செய்யும்



நியூபென் குவார்ட்ஸ் டிக்-டிக் என ஓசைப்படுத்தியோ, மணி அடித்தோ உங்களை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்க்காது

அதன் கணகண பின் மணி அலாராம் கணீரென தெளிவாக ஒலிக்கும் நீங்கள் விரும்பும்போது--நீங்கள் எழுந்திருக்கும் வரை அது ஓயாது.


இன்றே ஒரு நியூபென்னை வாங்கி எடுத்துச் செல்லுங்கள், அது உங்களை உசுப்பிவிடுமுன்னர் நீங்கள் நேரத்தைப் பிடியுங்கள்!

NEWBEN

குவார்ட்ஸ் அலாரம் கடிகாரம்

Shems/NFL/1

11



(லஞ்ச் ரூம், டெபாஸிட் இழந்த வேட்பாளர் வீடுபோல் ஆரவாரம் இன்றி 'அம்போ' என்றிருக்கிறது. அதற்கு முக்கியக் காரணம் சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஹீரோ ரகுவீர் இரண்டு நாட்களாக அங்கு இல்லாததுதான். இன்று ஹீரோயின் சுசீலாவும் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டதால் அந்த ரூம் களையிழந்து டிஸ்மிஸ் செய்யப்பட்ட அமைச்சர் இல்லம்போல் அழுது வடிந்து கொண்டிருக்கிறது.)

சாம்பு: சே! எம். டி. இப்படியொரு திடீர் முடிவு எடுப்பார்ன்னு யாருமே எதிர்பார்க்கலே. எவனோ கிளப்பிவிட்ட வெடிகுண்டுப் புரளிக்கு ரகுவீர் பலி கடா ஆயிட்டது தாங்க முடியாத வேதனை. அதற்கு நாம் ஓர் அனுதாபத்தீர்மானமாவது நிறைவேற்றாவிட்டால் ஆம்பளைகளா?

ஆனந்த்: அட, நீ சும்மாயிருப்பா! எம். டி. எந்த மூட்லே இருக்கார்னே தெரியலேயே. நாம அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினால் அதைத் தனக்கு எதிரான போர்க்கொடின்னு நினைச்சு கூண்டோட கைலாசம் மாதிரி எல்லாரையும் கூண்டோட சஸ்பெண்ட் செஞ்சுட்டார்னா என்ன செய்யறது?

பாண்டி: ரகுவீர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதுக்கு ராகவாச்சாரிதான் காரணம்ன்னு நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

ஆனந்த்: நம்பத் தகுந்த வட்டாரம் ஹெவி வெய்ட் மைதிலிதானே?

பாண்டி: நோ! புதிதாக நியமிக்கப்பட்ட நமது இன்வெஸ்டிகேட்டிங் நிருபர் முத்துவின் கண்டுபிடிப்பு.

சிவ: ஜி. எம். வரட்டும். நேரிலேயே கேட்டுடுவோம்... சரியான பதில் கிடைக்கலேன்னா யூனியன் வரைக்கும் இந்த சப்ஜெக்டை எடுத்துக்கிட்டுப் போய் ஒரு கை பார்த்துடுவோம்.

(ராகவாச்சாரி வருகிறார்.)

ராகவா: என்ன, ஒருத்தரும் இன்னும் டிபன் பாக்ஸைத் திறக்கலே...?

ஆனந்த்: ஜி. எம். சார், ரகுவீர் விவகாரம் பற்றி நீங்கள் இன்னிக்கும் வாயைத் திறக்கலேன்னா நாங்கள் டிபன் பாக்ஸைத் திறக்கப் போறதில்லே... எங்கள் தாய்களின் மேல் ஆணை!

ராகவா: நீங்கள்லாம் அரசியல்வாதிகளா இருக்கத்தான் லாயக்கு!

சாம்பு: என்ன சொல்றீங்க?

ராகவா: எச்சரிக்கை, சவால், சபதம், சூளுரை, சூரத்தனம் இல்லாம பேச மாட்



டேங்கறீங்களே. கேட்கிறதைச் சாதாரணமாக் கேளுங்க.

சிவ: வெடிகுண்டுப் புரளிக்கும் ரகுவீருக்கும் என்ன சம்பந்தம்?

ராகவா: ஒரு சம்பந்தமுமில்லே... சம்பந்தமிருக்குன்னு யாரு சொன்னது? அரசியல்வாதி போல பிரச்னையைப் புரிஞ்சுக்காம ஆதாரமில்லாம மெரீனு வெடிகுண்டு போலப் பேசறதை மொதல்லே விடுங்க. ரகுவீரோட சஸ்பென்ஷன் ஆர்டர்லே என்ன காரணம் போட்டிருக்கு தெரியுமா?

சாம்ப: தெரியாது. அவன் காட்டலே!

ராகவா: ஆபீசில் ஒழுங்கீனமா நடந்து கொள்வதைப் பற்றி விசாரணை நடத்தி முடிவு எடுக்கும் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறதாத்தான் அதுலே போட்டிருக்கு.

பாண்டி: என்ன ஒழுங்கீனம்? காதலிப்பது ஒழுங்கீனமா? ரகுவீர் — சுசீலா காதல் ஒண்ணும் ரகசியமில்லே! வீரப்பன் ஜெயலலிதா மோதல் மாதிரி வெட்ட வெளிச்சமானதுதானே? ஊர் அறிஞ்ச உண்மைதானே? ரகுவீர் ஒழுங்கீனத்துக்கு எம். டியும் உடந்தைதானே? அவர் வெளிப்படையாவே இவங்க காதலே என்கரேஜ் பண்ணியிருக்காரே. விசாரணை வரும் போது நாங்கள் எல்லோரும் சாட்சி சொல்லுவோம்... நீங்களும் சொல்லணும்.

ராகவா: இந்த விஷயத்திலே எம். டி.யும் குற்றம் பண்ணியிருக்காருங்கிறதை நான் டினை பண்ணலே. எல்லா விசாரணைகளையும் போல இதுவும் ஒரு கண் துடைப்புத்தான். குற்றம் பண்ணினவங்க தாங்கள் தப்பிக்க உடனே விசாரணை போட்டுடுவாங்க. சில விசாரணைகள் பாதியிலேயே நின்னுடும். சில விசாரணைகளோட முடிவுகள் வெளியே தெரியவே தெரியாது. அப்படி முடிவுகள் வெளியிடப்பட்டாலும் அப்புறம் யாரும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாங்க... அடுத்த விசாரணை வந்துட்டா, முதல் விசாரணை மறந்தே போயிடும்... கடைசியிலே எல்லா விசாரணைகளும் புஸ்வாணம் தான்...

ஆனந்த்: இந்த விசாரணையும் அப்படித்தான்னு சொல்றீங்களா? ரகுவீர் மறுபடியும் ட்யூட்டிலே ஜாயின் ஆயிடுவானா?

ராகவா: இது ஒரு நாடகம்தான் — கதை, வசனம், டைரக்ஷன், மேக்கப், சீன்செட், மைக்லேட், ஆர்க்கெஸ்ட்ரா எல்லாமே எம். டி. தான்.

சிவ: உங்களுக்கு இதுலே சம்பந்தமே இல்லேங்கறீங்களா?

ராகவா: என் அன்னையின் அன்னை — அதாவது அபிராமி பாட்டியின் மீது ஆணை... போறுமா?

பாண்டி: சரி, இப்ப இப்படியொரு நாடகத்தை எம். டி. எதற்கு எழுதி இயக்கி மேடையேற்றணும்?

ராகவா: ஆபீஸ் காண்டக்ட் ரூல்ஸுக்கு விரோதம்னாலும் அந்த ரகசியத்தைச் சொல்லிடறேன்... இந்த நாடகம் எழுத மூன்று காரணங்கள். நம்பர் 1: ரகுவீரோட அப்பா இந்த ஆபீஸ்லே இருக்கிற ஊழலும் ஒழுங்கீனமும்தான் தன் பிள்ளையைக் கெடுத்திருக்குன்னு டைரக்டர்ஸுக்கு ஸ்ட்ராங்கா லெட்டர் எழுதிப் போட்டது. நம்பர் 2: கரிவரதன், ரகுவீர் சுசீலாவுக்குப் பகிரங்கமாக வெண்ணெய் ஊட்டிய அசிங்கமான காட்சியைத் தன் கண்ணாலேயே பாத்துட்டு எம். டி. க்கு 'டிஸ்மிஸ் தட் ராஸ்கல் அட் வொன்ஸ்' னு டெலிபோன் பண்ணினது. நம்பர் 3: டீ. வி.யில் அந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்த சுசீலாவின் அப்பா, எம். டி. க்கு எழுதின லெட்டர்ல, "நீங்க ஆபீஸ் நடத்தறீங்களா, சினிமா ஸ்டுடியோ நடத்தறீங்க

ளான்னு தெரியலே. இதைப் போல எப். டிக்கள் இருக்கிற வரைக்கும் கௌரவமான பெண்கள் வேலைக்குப் போறது ஆபத்துன்னு சொல்லி, உடனே சுசிலாவை ரிசைன் பண்ணச் சொன்னது…

சாம்ப: அடடே! அதான் சுசிலா இன்னிக்கு ஆபீஸுக்கு வரலையா?

ராகவா: நம்ம ஆபீஸ் இப்படி ஆயிடுத்தேன்னு எனக்கு ரெண்டு மூணு நாளா மனசே சரியில்லே!

ஆனந்த்: ஓஹோ! அதான் நேத்து சினிமாவுக்குப் போனீங்களா?

ராகவா: நீ வந்திருந்தியா?

ஆனந்த்: இல்லே. இன்வெஸ்டிகேட்டிங் நிருபர் சொன்னாரு…

ராகவா: யாரது?

ஆனந்த்: அவரைக் காட்டிக் கொடுக்க நான் தயாராயில்லே. படம் எப்படி இருந்தது?

சிவ: என்னப்பா சஸ்பென்ஸ் இது… என்ன படம்?

ஆனந்த்: சொல்லிடட்டுமா?

ராகவா: டிபனைச் சாப்பிடுப்பா… ஈ மொய்க்கறது…

ஆனந்த்: பிரச்னையைத் திசை திருப்பாதீங்க. சொல்லிடுவேன்!

பாண்டி: அட, சொல்லுப்பா…

ஆனந்த்: ஜி. எம். சார் நேத்து, 'மைதிலி என்னைக் காதலி' படம் பார்த்து ரசிச்சாரு…

சிவ: நெஜமாகவா? இந்த வயசுலே உங்களுக்கு இந்த மாதிரிப் படமெல்லாம் கேக்குதா?

(ராகவாச்சாரி அசடு வழிகிறார்.)

முத்து: சார், சாதாரணமா சினிமாவுக்கெல்லாம் போற வழக்கமில்லே… டைட்டிலைப் பார்த்துட்டுத் தியேட்டருக்குப் பறந்து போயிருப்பார்.

''மன்னா… எதிரி நம்மை நன்றாக ஏமாற்றி விட்டான்!''

''என்ன சொல்கிறீர்… தளபதியாரே?''

''நம்முடைய குதிரைப் படையில் உள்ள அனைத்தும் ஆண் குதிரைகள் என்பதைச் சரியாகத் தெரிந்து கொண்டு தன் படையில் பெண் குதிரைகளாகவே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான்!''

— ரம்யா.



பாண்டி: 'மைதிலி என்னைக் காதலி'ன்னு சொல்லத்தான் முடியலே; பார்த்தாவது பெருமூச்சு விட்டுவிட்டு வரலாமேன்னு போயிருப்பார்!

ராகவா: சீச்சீ… வாயைக் கழுவுங்கடா… தத்தாரிப் பசங்களா… கல்யாணம் ஆன பொண்ணைப் பத்தி இப்படி நாக்குலே நரம்பு இல்லாம பேசறீங்களே… நீங்க உருப்படுவீங்களா?

ஆனந்த்: கல்யாணத்துக்கு அப்புறம்தான் காதலே ஆரம்பமாவுதுன்னு எந்த புஸ்தகத்திலேயோ படிச்சேன்.

ராகவா: கூவம் நதிக்கரையிலே இருக்கிற குப்பைத் தொட்டிலே கிடைச்ச புஸ்தகத்திலே படிச்சிருப்பே… மகா புத்திசாலி மாதிரிப் பேசறான்..

(மைதிலி பத்திரிகையைப் படித்துக் கொண்டே வருகிறாள்.)

மைதிலி: இந்த வேடிக்கையைக் கேட்டீங்களா? இனிமே கல்யாணம் ஆகாத பெண்களுக்கும் 'பிரசவ லீவு' உண்டாம்! மெடர்னிடி லீவு ரூல்லே வெறும் ஃபீமேல்ன்னுதான் போட்டிருக்காம். கல்யாணம் ஆன ஃபீமேல்ன்னு போடலையாம்…

பாண்டி: கல்யாணம் ஆகி பிரெக்னெண்ட் ஆகாம இருக்கிற பொண்களும் 'மெட்டர்னிடி லீவு' போட்டுட்டு போகலாம்னு சொல்லுங்க…

(ஒரக்கண்ணால் மைதிலியைப் பார்க்கிறான். அவள் பரங்கி முகம் எலுமிச்சையாகச் சுருங்குகிறது.)

ராகவா: நீங்கல்லாம் மேனர்லெஸ், ஹார்ட்லெஸ் பசங்கடா. குழந்தை இல்லாதவங்களை இப்படியா கேலியும் கிண்டலும் பண்றது? பாவம், மைதிலி மனசு எத்தனை வேதனைப்படும்னு எனக்குன்னா தெரியும்!

பாண்டி: ஐயாம் ஸாரி சார்! சும்மா ஒரு ஜோக்குக்குச் சொன்னேன். உங்களுக்கும் குழந்தை இல்லேங்கிறதையும் மறந்து பேசிட்டேன், ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ் மீ…

ராகவா: என்னையும் மைதிலியையும் கனெக்ட் பண்ணி நீங்க கோட்டா பண்றதை நான் குட் ஹ்யூமர்லே இக்னோர் பண்ணிண்டிருந்தேன். இன்னிக்கு ஓபனா சொல்லிடறேன். இஷ்யூ இல்லாததுதான் எனக்கும் மைதிலிக்கும் உள்ள ஒரே காமன்ஃபேக்டர். வி அண்டர்ஸ்டாண்ட் அண்ட் ஸிம்பதைஸ் வித் ஈச் அதர்…

சிவ: வீ ஆல் ஃபீல் ஸாரி. இதை மறந்துடுங்க. ஃபீமேலுக்குத்தான் மெடர்னிடி லீவுங்கிற ரூலையே இன்னும் கொஞ்சம் வருஷங்களிலே மாத்தியாகணும். ஆண்கள் கூட 'புள்ளைத்தாச்சன்' ஆக முடியும்னு சமீபத்திலே கண்டுபிடிச்சிருக்காங்களாம்.

முத்து: அது எப்பவோ வரப் போவுது…! இப்ப முக்கியமா ஒரு ரூல் கொண்டு வரணும்… கல்யாணமாகாத பொண்களுக்கு மெட்டர்னிடி லீவு உண்டுன்னா பிரம்மசாரி



தர்மபுரி கவனிப்பே

இதுதான் தருமபுரியிலுள்ள அரசு பொது மருத்துவமனை. காம்பவுண்டுச் சுவர் இல்லாத தால் பசுமாடுகள், எருமை மாடுகளோடு மற்ற ஜீவராசிகளும் தங்களிஷ்டத்திற்கு ஆஸ்பத்திரிக் குள் சுற்றித் திரிகின்றன. சில சமயங்களில், பசுமாடுகள் வார்டுகளுக்குள் புகுந்து அங்கே படுத்திருக்கும் நோயாளிகளை தங்கள் நாக்கால் நக்கிக் கொடுப்பது கூட உண்டாம்.

அவற்றை விரட்டுவதற்கு அங்கே ஆளில் லையாம்! எப்படி, தருமபுரி ஆஸ்பத்திரியின் மருத் துவக் கவனிப்பு!

தனிதான்!

களுக்கு 'ஹனிமூன்' லீவு கொடுத்தாக ணும்னு ஒரு போராட்டம் ஆரம்பிச்சா என்ன?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

ராகவா: ஆமா, பேச்சு சுவாரஸ்யத்திலே இன்னும் நிர்மலா வரலேங்கிறதை ஒத்தருமே கவனிக்கலே.

ஆனந்த்: அவ வர்றதுக்குள்ளே லஞ்ச் டைமே ஓவர் ஆயிடும் போலேருக்கு... ஏம்பா மாடசாமி, ஏன் உன் ஆளு லேட்டு?

மாட: அதாங்க எனக்கும் தெரியலே. தெருவுலே எட்டி எட்டிப் பார்த்து என் கழுத்து நீளமாயிடுச்சு. அடடே, மறந்துட் டேனே! ஜி. எம். ஸார், உங்களை எம். டி. உடனே ரூமுக்கு வந்துட்டுப் போகச் சொன் னாரு.

(ஜி. எம். அவசர அவசரமாகத் தயிர் வடையை விழுங்கிவிட்டு விரைகிறார். நிர்மலா வருகிறாள்.)

மாட: என்னம்மா லேட்டு...? அல்லாரும் என்னே இந்நேரம் புடிபுடின்னு புடிச்சுட் டாங்க. நீ இன்னும் கொஞ்சம் டிலே பண்ணி யிருந்தே, இங்கே ரெண்டு மூணு பேர் பசிலே மயக்கம் போட்டு விழுந்திருப்பாங்க... அப் புறம் அவங்களுக்காக நான் வாங்கியாற சோடாவுக்கான துட்டை உங்கிட்டேதான் கலெக்ட் பண்ணியிருப்பேன்... ஆமா நாளைக் கும் லேட்டா வராதே...

நிர்மலா: நாளேலேர்ந்து நான் வரவே மாட்டேன்யா...

எல்லோரும்: ஐயய்யோ!

மாட: வயத்திலே புளியைக் கரைக்கிறியே, தாயே! நீ வரலேன்னு நான் மட்டுமில்லே, இந்த ஆபீஸே டல்லடிச்சுப் போயிடும்... ஆமா, ஏன் இந்தத் திடீர் முடிவு?

நிர்மலா: நான் சினிமாவிலே நடிக்கப் போறேன்.

மாட: என்னு உதார் வுடறே! வெயில்லே சுத்தி மூளை கீளை ரிப்பேர் ஆயுடுச்சா?

நிர்மலா: நான் சொல்றது நெசம் தான்யா... இன்னைக்குக் காலேலே கூடை யோட பஸ் ஸ்டாண்டுலே நின்னுக்கிட்டிருந் தேனு... அப்ப ஒத்தரு கார்லே வந்து இறங்கி, எங்கிட்டே வந்து, ஏம்மா நீ சினிமாவிலே நடிக்கிறியா?' ன்னு கேட்டாரு... எனக்குக் கோவம் பொத்திக்கிச்சு... 'நீ யாருய்யா' ன்னு கொஞ்சம் சூடாவே கேட்டேன். அதுக்குள்ளாற அங்கே பெரிய கும்பலு கூடிப் போயிடுச்சு... அதுலே ஒருத்தன் 'என்னம்மா இவரைப் பார்த்து இப்படிக் கேட் டுட்டே! இவருதான் சாரதி ராஜா! 'விண் வாசனை' இறுதி மரியாதை யெல்லாம் பார்த் தியே அதுங்க டைரக்டரு... மரியாதையா பேசு' ன்னான். எனக்குக் கைகால்லாம் நடுங்க ஆரம்பிச்சுடுச்சு. 'வூட்டுக்கு வந்து அண்ணாத்தையைக் கேளுங்க' ன்னு சொன் னேன். கூட்டத்திலே எங்க வூட்டாண்டே இருக்கிற புள்ளாண்டான் ஒருத்தன் இருந் தான்... அவனையும் என்னையும் காரிலே ஏத்திக்கிட்டு வூட்டுக்கு வந்தாரு சாரதிராஜா. அவரைப் பார்த்ததும் அண்ணாத்தே தடால்னு அவர் கால்லே விழுந்துச்சி... அவரோட விசிறியாம்... நான் சினிமாலே ஆக்ட் பண்ண உடனே ஒப்புக்கிட்டாரு. நாளைக் காலேலே மேக்கப் போட்டுப் பார்த்து போட்டோ பிடிக்கப் போறாங்களாம்... 'நீ இனிமே சாப்பாட்டுக் கூடை சொமக்க வாணா' ன்னு அண்ணாத்தை ஸ்டிக்டா சொல்லிடுச்சி...

(மாடசாமி பேச்சு மூச்சில்லாமல் அசை வற்று பஸ் கம்பம் போல் நிற்க, மற்றவர் களெல்லாரும் ஆச்சரியத்தில் மூழ்கி தத்த ளித்துக் கொண்டிருக்கிறார்கள். ராகவாச் சாரி ஸீரியஸ் முகத்துடன் வரு கிறார்.)

ராகவா: ஒரு ஷாக்கிங் நியூஸ். நேத்து சினிமாவுக்குப் போன சுசிலா வீட்டுக்கே திரும்பி வரலேயாம். சுசிலாவோட அப்பா போலீஸ் கம்ப்ளேயிண்ட் கொடுத்துட்டு எம். டி.க்கு ஃபோன் பண்ணியிருக்கார். நம்ம கம்பெனியோட பேர் நாளைக்குப் பேப்பர்லே சந்தி சிரிக்கப் போறதேங்கிறதை நினைச்சு எம். டி. ஒரேயடியா அப்செட் ஆகியிருக் கார்.

(இதைக் கேட்டு அத்தனை பேரும் கரண்ட் இல்லாத பம்ப் செட் மாதிரி மௌன மாகிறார்கள்.)

(திரை) (அடுத்த இதழில் முடியும்)

மனிதர்கள் அங்கே

"ஸார்.... ஸார்...." என கதவு தட்டப்பட்டபோது இரவு ஒன்றரை.

குமரேசன் குரல்தான் அது. குழந்தைக்கு இன்னும் சரியாகவில்லையா?

வாசு 'படக்'கென்று கதவைத் திறந்து விளக்கைப் போட்டான். "என்ன சார்...?"

"குழந்தைக்கு அதிகமாயிருச்சுங்க.... வாமிட் பண்ரு. பயமா இருக்கு. அம்மாவைக் கொஞ்சம் வரச் சொல்ல முடியுமா?"

எதிர் வீட்டு ஜன்னலில் அவனது மனைவி கல்யாணியின் முகம் தெரிந்தது. தோளில் நீண்ட தண்டாகக் குழந்தை. பிஞ்சுக் குரலில் வீர் வீரென்ற கத்தல்.

"ஜோ.... ஜோ.... தூங்கு கண்ணு. என்னம்மா பண்ணுது உனக்கு?"

அழுகையாய் கவலையாய், 'நான் என்ன பண்ணுவேன் தெய்வமே' என்கிறதாய் ஒலித்த அவனது குரல்.....

"இருங்க சார். எழுப்பி, வரச் சொல்றேன்."

வாசு உள்ளே திரும்பினான்.

அம்மா சலிப்புடனேயே எழுந்தாள். "என்னடா இது ரோதனை. தூங்க விடாம..."

"உதவின்னு வந்து நிக்கறாரு.... போம்மா...."

மனசுக்குள் என்ன நினைத்தாலும் வெளியே இயல்பாகவே பேசினாள் அம்மா. குழந்தையின் அழுகையைக் கேட்டுவிட்டு, "நான் அப்பவே சொல்லலே? மாந்தம் பிடிச்சிருக்கு. கைப்பிள்ளைக்காரி மாம்பழம் சாப்பிடலாமா?"

"தெரியாம போச்சுங்க. கொஞ்சம் வந்தீங்கன்னாத் தேவலே."

உதவி கேட்கத் தயங்கிய, அவசியத்தின் காரணமாகக் கேட்க நேர்ந்த தேய்ந்த வார்த்தைகள்.

"வாசு, வீட்ல இரு வந்துட்டேன்...."

அம்மா விடுவிடுவென்று நடந்து போனாள்.

எதிர்வீட்டில் 'பட்பட்'டென்று ஒவ்வொரு விளக்காக எரிந்தது. ஜன்னலைத் தாண்டித் திட்டுத் திட்டாய் வெளிச்சப் போர்வை.

நிசப்தத்தை ஊடுருவிய பேச்சுக் குரல்.

"அப்ப இருந்து இன்னும் குறையலேயா?"

"இல்லீங்க. விட்டு விட்டு அழுதுக்கிட்டே இருக்கு" — கல்யாணி.

"வயித்து வலிதான் இது. நீ இன்னும் ரெண்டு மாம்பழம் வாங்கித் தின்னு."

"............"

"கடுக்காய் வச்சிருக்கியா?"

"இருக்குங்க....."

ஜாதிப் பத்திரி, பூலாங் கிழங்கு, சித்தகத்தி வேரு..... இன்னும் ஏதேதோ சங்கதிகள் சொல்லி எடுத்து வரச் சொன்னாள். போனவாரம்தான் அவளது யோசனைப்படி எல்லாம் வாங்கப்பட்டிருந்தன.

"இந்தா... இதெல்லாம் தாய்ப்பால் விட்டு அரைச்சுக்கிட்டு வா.... அதுக்கு ஏன் உள்ளே போறே? இங்கியே திரும்பி நின்னு எடு. வேறே யாரு இருக்கா இங்கே?"

சங்கடத்தைத் தவிர்க்க குமரேசன் வெளியே வந்தான்.

"குழந்தைக்கு ஒண்ணுன்னா பெரிய அவஸ்தை ஆயிடுது சார்....."

"சரியாயிடும். பயப்படாதீங்க" என்றான் வாசு.

"ஒன்பது மணியிலிருந்து ஒரே கத்தல். இந்நேரத்துல எந்த டாக்டர்கிட்ட எடுத்துட்டுப் போறது? அதான் அம்மாகிட்டயாச்சும் கேக்கலாம்னு. உங்க தூக்கத்தை கெடுக்கும்படி ஆயிடுச்சு...."

"பரவாயில்லே. ஒருத்தருக்கு ஒருத்தர் இது கூடச் செய்யலேன்னா எப்படி.... கொஞ்ச நேரம் பார்த்துட்டு சரியாகலேன்னா டாக்டர் கிட்டயே போகலாம். நானும் வர்றேன். டோண்ட் ஒர்ரி."

குமரேசன் நன்றியுடன் அவனைப் பார்த்தான்.

இந்தத் தெருவுக்கு அவர்கள் குடிவந்து மூன்று மாதங்கள்தான் ஆயிற்று.

வருவதற்கு முன்பே அவர்களைப் பற்றிய விஷயம் பரவிவிட்டது. பங்கஜம் மாமி எங்கிருந்தோ விசாரித்து வந்து சொன்னாள். "ஏண்டி..... அதுக ரெண்டும் ஓடி வந்த கேசாம்லே?"

"நிஜமா.....? யாரு சொன்னா மாமி?"

"அதப் பத்தி என்.....? நடுத் தெருவுல இப்படி ஒரு சனியனை யாரும் குடி வைப்பாளோடி.....?"

"நாம என்ன பண்றது.... ஆபீஸ் சிநேகிதன்னு வீட்டுக்காரன் வைக்கிறதுக்கு?"

"நல்லா வச்சான் போ.... நெஞ்சுல ஈரமில்லாம!"

சின்னது பெரியது பேதம் இல்லாமல் பேசித் தீர்க்க சுவாரஸ்யமான ஒரு விஷயம் அகப்பட்டுவிட்டது.

மதியச் சோற்றுக்குப் பிறகு மாமியின் தலைமையில் தெருவில் எல்லோரும் இதைப் பற்றியே பேசினார்கள். எட்டுக் காதும்

மும்தாஜ் யாசீன்

இரண்டு தலையும் கொண்ட மிருகமாகக் கருதி அருவையைப் பட்டார்கள். காலம் முற்றிவிட்டதாக வருத்தமடைந்தார்கள். வயதுக்கு வந்த தங்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளை நினைத்துப் பெருமூச்சுவிட்டார்கள்.

எல்லாம் ஒரு வாரத்திற்குத்தான்.

ஒரு நல்ல நாளில் அவர்கள் பால் காய்ச்சிக் குடியேறியதும் 'கப்'பென்று அடங்கிப் போனார்கள்.

கல்யாணி அவர்கள் நினைத்தமாதிரிமட்டக் குதிரை இல்லை. நல்ல சிவப்பு. எடுத்து நிறுத்திய தேகம். வயிற்றிலிருந்த ஏழு மாதச் சுமை தனிக் கவர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது. எளிய முகம். ''வாங்களேன் வீட்டுக்கு'' என்று கூப்பிடுகிற சுபாவம். வந்தவர்களைச் சாப்பிடச் சொல்கிற பண்பு. வாசல் வரை நின்று வழி அனுப்புகிற நேர்த்தி.

வாசகூடஇரண்டொருதரம்ஜாடையாகப் பார்த்திருக்கிறான். ''என்னண்ணே.... ஆபிஸுக்குப் புறப்பட்டாச்சா?'' என வலிந்து பேசினான். ''சாயங்காலம் வாங்களேன், அவரும் வந்துருவாரு.... பேசிட்டு இருக்கலாம்.'' எனக் கூப்பிட்டாள்.

மனத்திலிருந்த அழுக்குப் போய்விட்டது.

மீண்டும் காணுகிறபோது கண்ணைக் கூசியது. விகற்பமில்லாமல் ''சௌக்கியமா?'' என விசாரிக்க முடிந்தது.

இவளா ஓடி வந்தவள்? மற்றவர்களிடம் இவ்வளவு அன்பைக் காட்டுகிறவள் பெற்றவர்களை எப்படி விட்டு வந்தாள்?

குமரேசனையும் குறை சொல்ல முடியாது. கண்டுவிட்டால் உயிரைக் கொடுக்கிற ஆள்.

இல்லை!



எவ்விதம் இருவரும் ஒன்று சேர்ந்தார்கள்? எது இணைத்தது?

இயற்கையின் சூட்சுமத்தை அறிந்து கொள்ள முயல்கிற மாதிரிதான் காதலும். கேட்கக் கேட்க விரிந்து கொண்டே போகிற பதில்.....

மங்களம் மாமிதான் முதலில் சிணுங்கிதமானாள்.

"ரெண்டு கரண்டி காப்பிப் பொடி கடன் கேட்டேன். பாக்கெட்டையே கொடுத்துட்டா.... தாராளக் கைபிடி அவளுக்கு..." என பரவசமாகச் சொல்லிக் கொண்டு.

பின் ஒரு தரம் சர்க்கரை கடனாக வாங்கப் போனவள், சரித்திரம் பூராவும் விசாரித்துக் கொண்டு வந்து சொன்னாள்.

எல்லாக்காதல்கதைகளையும்போலத்தான் இருந்தது அது.

அவளுக்கு நடுத்தரக் குடும்பம் — அப்பாவுக்கு ஹோட்டல் கடை — குமரேசன் பக்கத்து வீடு — காதல் — உயர்ந்த — தாழ்ந்த ஜாதிப் பிரச்னை — இரண்டு குடும்பத்திலும் எதிர்ப்பு — வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்கள். காலேஜ் போனவளைக் காணுமே என்று தேடியவர்கள் எப்படியோ குமரேசனுடன் இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். விஷயம் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிருக்கிறது. எல்லோர் முன்னிலையிலும் இனி இவரோடுதான் வாழ்வேன்னு சொல்லிட்டாளாம்.

அப்பா அங்கேயே தலையில் அடித்துக் கொண்டாராம். இனி இந்த நாய்க்கும் எனக்கும் ஒரு ஒட்டுதலும் இல்லை. செத்துட்டதா தலை முழுகிடறேன்னு.

அவன் வீட்லயும் ஏத்துக்கலை. கட்டிய புடைவையோட தனிக் குடித்தனம் நடந்திருக்கு. எல்லாரையும் பகைச்சுக்கிட்டு உள்ளூர்ல ஏன் இருக்கணும்னு இங்க மாத்திக்கிட்டு வந்திருக்காக.....

"உண்டாயிருந்தாளே.... அது அவுங்களுக்குத் தெரியுமா?"

"ம்.... அப்பவாச்சும் மனசு மாறும்னு நெனைச்சு இவளே எழுதிப் போட்டிருக்கா. தெரிஞ்சவங்ககிட்டச் சொல்லி அனுப்பியும் இருக்கா...."

"ம்....?"

"உண்டானு என்ன.... அப்படியே செத்துத் தொலைஞ்சா என்னன்னு பதில் வந்திச்சாம்...."

"அந்தாளு வீட்ல?"

"அதவிட மோசமாம். வெட்டறேன். குத்தறேன்னு வந்தாங்களாம்."

"அடப் பாவமே....."


"மானஸ்தனுங்க போல....." என்றாள் யசோதா அக்காள்.

"என்ன கண்ணறாவியோ போ...."

மாமி செய்த நல்ல காரியம் என்று சொல்ல வேண்டும். தெருவில் இரண்டு கட்சி உண்டாகிவிட்டது.

வீட்டில் கல்யாண வயதில் பையனோ — பிள்ளையோ உள்ளவர்கள் ஏற்காதவர்களாகவும், எல்லாம் முடித்தவர்கள் அல்லது

''மக்கள் குறையைக் கண்டறிய மாறு வேடத்தில் சென்றீரே, ஜனங்கள் என்ன பேசிக் கொண்டார்கள்?''
''எத்தனை நாள் இப்படி வேஷம் போட்டு ஏமாற்றப் போகிறார்களோ என்று பேசிக் கொள்கிறார்கள் மன்னா!''
— மதுரை. செ. மதுக்குமார்.



அதற்கு இன்னும் வெகு காலம் இருக்கிறவர்கள் பாவம் என நினைக்கிறவர்களாகவும்...
அம்மா முதல் கட்சி.

உள்ளூர விருப்பம் இல்லாவிட்டாலும் அவளும் பழகும்படியாகத்தான் இருந்தது. அம்மாவின் மசக்கை வைத்தியம், குழந்தை வைத்தியம் தெருவில் கொஞ்சம் பிரசித்தம். அவளை தேடி வந்துவிடுவாள்.

— ஏங்க மாமி குழந்தைக்கு பேதியாகுது. என்ன செய்யலாம்?

— எனக்குத் தலை சுத்துதுங்க....

— இன்னிக்குத் தலைக்கு ஊத்தலாமா?

— சனிப் பிடிச்சுக்கிச்சு. கெஸ்ஸு கெஸ்ஸுன்னு மூச்சு விடுதுங்க....

பச்சை உடம்புக்காரியைப் பார்த்துக் கொள்ள யார் சொல்லித் தருவது?

தன்னிடம் யோசனை கேட்டு வருகிறவளிடம், தகுந்ததைச் சொல்லி அனுப்பினாலும் போன பிறகு அம்மா பொருமுவாள்.

''கொழுத்துப் போயி இதுக கல்யாணம் பண்ணிக்கிட்டு நம்ம உயிரை எடுக்குதுங்க...''

அவளைத் திருத்த முடியாது.

''உஷ்ஷ்.... அப்பாடி'' என அம்மா உள்ளே நுழைந்தாள்.

''என்னம்மா.... குழந்தைக்குச் சரியா விடுச்சா?'' வாசு ஆவலோடு கேட்டான்.

''தெரியலே. தூங்கிருச்சு. கடுக்கா ஊத்தினா தூக்கம் வந்துடும்'' என்றாள்.

''இதுக்குத்தான் அவ்வளோ அவசரமாகக் கூப்பிட்டாங்களா?''

''இந் நேரத்தில வேறே என்ன பண்றது? எல்லாம் காலையில பாக்கலாம்.''

அவளிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை. விடிந்ததும் டாக்டரிடம் எடுத்துப் போவது தான் நல்லது.

''விளக்கை அணைடா.... தூக்கம் வருது.''

அம்மா கொட்டாவிவிட்டாள்.

''இதுக்குத்தான் நாலு மனுஷான் வேணுங்கிறது. தானாகக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு அலையுதுகளே.... இதைப் பார்த்துத் தெரிஞ்சுக்கணும்.''

''இப்ப என்ன கெட்டுப் போச்சு அவுங்களுக்கு? குழந்தைகள்னா நோய் வராதா?''

''வரும். வர்றதை பார்க்கிறதுக்குத் தன் இனம் ஜனம்னு வேணுமா? ஓடி வந்து இப்ப என்னத்தைக் கண்டுட்டா.... பாவம்.... அந்த மனுஷங்களுக்கு தலைகுனிவை உண்டு பண்ணிட்டு?''

''என்ன சனங்களோ... செத்தாளோ பொழைச்சாளோன்னுகூட வந்து பார்க்காம? என்ன சாதிக்கப் போறாங்க?''

வாசு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தான்.

''வைராக்கியம்டா.... மதிப்பைக் குலைச்ச பிறகு என்ன கெடக்கு? இப்படித்தான் இருக்கணும்.... அவுங்கதான் மனுஷங்க...''

''நீதான் மெச்சிக்கணும். ஊருக்குப் பயந்துக்கிட்டு பெத்தது வளர்த்தது எல்லாம் மறந்துடணுமா?''

''உனக்குப் புரியாது. பேசாம தூங்கு.''

வாசுவுக்குத் தூக்கம் வரவில்லை.

வைராக்கியமா? மனத்தைக் கட்டிப் போட்டு விடுகிற வஸ்துவா அது? எப்படி முடிகிறது? ஐந்து நிமிடம் காணா விட்டாலும் அலறுமே.... நம்பிப் போனவன் வாழ வைத்தானா, சீரழிக்கிறானா என்றுகூட அறிய விடாமல் அதென்ன வைராக்கியம்? என்ன மனிதர்கள் இவர்கள்?

விடிந்ததும் மனது குறுகுறுத்தது. போய்ப் பார்த்துவிட்டு வரலாமா? அம்மாவை நினைத்தால் பயமாகவும் இருந்தது.

செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே வந்து நின்றான் குமரேசன்.

எதிர்ப்பட்டால் பேச்சுக் கொடுத்து, ''என்ன சார் பண்ணுது?'' என்ற சாக்கில் போய் வரலாம்.

அவன் நின்ற நேரம் — குமரேசன் இல்லை.

ஏதோ கடைக்குப் போகிறவன் போல — திரும்பி வருகிறவன் போல — இரண்டு தரம் அவர்கள் வீட்டைத் தாண்டி நடந்தான். எதிர்பார்த்தது வீணாகவில்லை.

கல்யாணி அவனைப் பார்த்துவிட்டாள்.

''வாங்கண்ணா.... பார்த்துக்கிட்டே போறீக?''

''குழந்தைக்கு இப்ப எப்படி இருக்கு?'' உள்ளே நுழைந்தான்.

''தேவலைங்க... அம்மா மருந்து குடுத்ததும் சரியாவிடுச்சு.....''

மடக்கு நாற்காலியை தூசு தட்டி விரித்தான்.

ஆள் பாதியாக இருந்தாள். கன்னம் வற்றிக் குழி விழுந்திருந்தது. எளிய நூல் சேலை. இரத்தம் வெளிறிய நிறம். நூறு பிள்ளைகளைப் பெற்றவள் மாதிரி களைப்பு...

''உக்காருங்க.....''

எதிரே தொட்டிலில் குழந்தை. அசல் கல்யாணியின் அச்சு. நிறம் மட்டும் சுமார் — குமரேசன் மாதிரி.

''ஏங்க.... இங்க வாங்களேன்....''

பின் வாசல் பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தாள்.

''சார் குளிக்கிறாரா?''

''இல்ல...., துவைக்கிறாரு. குழந்தை துணிய அவருதான் துவைக்கிறது....''

''அப்படியா?''

கல்யாணி காப்பி போட அவசரமாக நகர்ந்தாள்.

''எனக்கு ஒண்ணும் வேணாம். பேசாம வாங்க....

''ம்.... அதென்ன வீட்டுக்கு வந்துட்டு வேணாம்ங்கிறது. சீக்கிரம் போடு கல்யாணி'' எதிரே சிரித்த முகத்துடன் குமரேசன்.

தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

''நீங்கள்லாம் இருக்கிறது ஒரு பலம். இல்லேன்னா ரொம்பச் சிரமமாயிடும் வாசு சார்....

ஒரு சின்ன உதவிக்கு இருவரும் மாறி மாறிச் சொல்லும் நன்றி வார்த்தைகள்....

காப்பி வந்தது.

குழந்தை சிணுங்கியது.

குமரேசன் துள்ளி எழுந்து தொட்டிலை ஆட்டினான். அவசரமாகப் பால் பாட்டிலை நிரப்பினான். கட்டைக் குரலில், ''ஜோ.... ஜோ....'' சொல்லி ஆட்டிவிட்டான்.

''கல்யாணி.... சீக்கிரம் கல்லுரல்ல அரிசியைப் போடு. இது முழிச்சுக்கிட்டா அவ்ளோதான். மாவாட்டின பிறகுதான் நான் குளிக்கப் போகணும்.''

இடையில் யாரோ பானையை எடுத்துக் கொண்டு போவது ஜன்னலில் தெரிய, ''போச்சுடா.... தண்ணி வேறே வந்திருச்சி போலிருக்கே....'' என்றான்.

''பேசாம இருங்க. நான் தண்ணி எடுத்துக்கறேன்.''

''அறஞ்சு பல்லைக் கழட்டிப்புடுவேன். பார்த்தீங்களா சார்.... பச்சை உடம்புக்காரி தண்ணிக்குப் போறாளாம்....''

''வேலைக்காரப் பொண்ணு வரலையா?''

''அது அக்காவுக்குக் கல்யாணமாம். பத்து நாள் ஆகும்னுட்டா....''

''அதுக்கு எல்லாத்தையும் நீங்களே இழுத்துப் போட்டுக்கணுமாக்கும்? ஆபீசு வீடுன்னு வேலை செஞ்சா உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

இன்னும் கொஞ்ச நாளைக்கு..... அப்புறம் நீயே சொன்னாலும் நான் செய்யப் போறேனா?''

''நெசந்தானா இது?''

''பின்னே பொய்யா?''

''பார்க்கலாம்....''


''பாரு......''

வாசு கல்யாணியைப் பார்த்தான்.

முகத்தில், ''இவன் என் ஆம்பிளையாக்கும்'' என்ற பெருமை பொங்கியது. தவம் செய்த சாந்தம் இருந்தது. ''எனக்கென்ன ராசாத்திக்கு?'' என்ற பலம் தெரிந்தது.

'என்னத்தைக் கண்டுட்டா' என அம்மா கேட்டது ஞாபகத்திற்கு வந்தது.

இதைவிட வேறு எதைக் காண வேண்டும்?



அப்படியே கிடக்கும் ஓர் அஸ்திவாரம்!

தருமபுரியிலிருந்து பெண்ணாகரம் செல்லும் பஸ்ஸில் ஏறிப் பதினாறாவது மைலில் இறங்கிப் பின் தெற்குப் பக்கமாக இரண்டு கி.மீ. தூரம் நடந்து சென்றால் வருவது மாங்கரை என்னும் கிராமம். மற்ற இந்தியக் கிராமங்களிலுள்ள அத்தனை கஷ்டங்களும் இந்தக் கிராமத்தில் இருக்கின்றன என்றாலும், அங்குள்ள மக்களின் குடிநீர் வசதிக்காக வேண்டி, ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்காகச் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட அஸ்திவாரம் இன்னமும் அப்படியே கிடப்பதுதான் ரொம்ப ரொம்ப அநியாயம்!

குழந்தைகள் நலனில் நமக்கு அக்கறை இருக்கிறதா?

"ஒலியும் ஒளியும், சினிமா, நாடகம் போன்ற எதுவும் இரவு ஒன்பது மணி வரை டி.வி.யில் இடம் பெறக் கூடாது. குழந்தைகள் படுத்துறங்கும் நேரம் வரை அவர்கள் பார்த்து மகிழத்தக்க, பயன்பெறக் கூடிய நிகழ்ச்சிகள் மட்டுமே ஒளிபரப்பப்பட வேண்டும்!'' என்று ஒரு போடு போட்டார் வி. சுப்பிரமணியம்.

''நம் குழந்தைகளின் எதிர்கால நலனிலும் நமது நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திலும் நமக்கு அக்கறை இருக்குமானால், டி.வி. போன்ற நவீன உபகரணங்களைக் குழந்தைகளின் அறிவாற்றலும், குணநலன்களும் செம்மைப்படப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் நிஜமாகவே நமக்கு இருக்குமானால் பெரியவர்களுக்கான நிகழ்ச்சிகள் எதுவுமே இரவு ஒன்பது மணி வரை டி.வி.யில் இடம் பெறக் கூடாது. இப்போது டி.வி.யில் கண்ட கண்ட நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் குழந்தைகளின் நேரமும் உள்ளமும் வீணடிக்கப்படுகிறது.''

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் சமீபத்திய கவிதைத் தொகுப்பு நூலான ''சிரிக்கும் பூக்கள்'' வெளியீட்டு விழாவில் இப்படிப் பல அரிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அது ஒரு நூல் வெளியீட்டு விழாவாக மட்டுமின்றிக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிற, குழந்தைகளின் உள்ளப்பாங்குகளை அலசுகிற விழாவாகவும் இருந்தது.

கல்வித் தரம் இன்று மிகவும் குறைந்து போய்விட்டதைச் சுட்டிக் காட்டினார் நீதிபதி மோகன். முன்பெல்லாம் ஒரு வழக்கு ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று கோருவதானால் கூட வழக்கறிஞர் அதனை ஓர் இலக்கிய நயத்தோடு ஆங்கிலத்தில் கேட்பார் என்பதை விளக்கி, ''இன்றோ, 'டே ஆஃப்டர் டுமாரோ?' என்று தொனியில் ஒரு கேள்வியை இணைத்துக் கொண்டு கேட்க மட்டுமே தெரிகிறது!'' என்று வருத்தத்தோடு சொன்னார்.

வி. சுப்பிரமணியம் பேசும்போது, ''ஆங்கிலத்தை ஒரு மொழி என்ற அளவில் நன்றாகக் கற்றுத்தர வேண்டியதுதான்; ஆனால் பள்ளிக்கூடங்களில் போதனா மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும். தாய்மொழி தவிர வேறு மொழி போதனா மொழியாக இருக்கக் கூடாது என்று சட்டமே வர வேண்டும்'' என்றார். தொடர்ந்து, பல குழந்தைகள் படிப்பில் முன்னேறாமல் பின்தங்கி விடுவதற்குக் காரணங்களை அலசினார் வி. எஸ்.

''கல்வியை இலவசமாக்கிய பிறகும் பல குழந்தைகளுக்குப் படிப்பதைவிட வயிற்றுப்பாட்டைக் கவனிப்பது முக்கியமாகி விட்டதால் பள்ளிக்கே வரவில்லை. எனவேதான் மதிய உணவுத் திட்டம் காமராஜர் காலத்திலேயே அமுல்படுத்தப்பட்டது. ஆனால் சாப்பாடு கிடைத்த போதிலும் பல குழந்தைகளுக்குப் படிப்பில் ஆர்வமில்லாதிருக்கிறது. ஆசிரியர்கள் கூறுவதைப் புரிந்து கொள்கிற சக்தி இக்குழந்தைகளுக்குக் குறைவாக இருக்கிறது என்பது உணரப்பட்டது. இதற்குக் காரணம் கைக்குழந்தையாக இருக்கும்போது மட்டுமல்ல, தாயின் வயிற்றில் வளரும்போதே கூட குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்ல ஊட்டச் சத்து தேவை. அது கிடைக்காததால் பல குழந்தைகள் உடலிலும் அறிவிலும் நோஞ்சானாக வளர்ந்து விடுகின்றன. எனவே, அடிப்படை மேல் சாதி, கீழ் சாதி என்பதெல்லாம் இல்லை; வறுமைதான் வில்லன்!''

• ''ஒரு சக்தி: ஓர் இயக்கம்: ஒரு முன்னோடி!''



• சீக்கிரமே இரண்டாம் பதிப்பு!



அவ்வை நடராஜன், நமது வாழ்க்கையுடன் ஆங்கிலம் எப்படி இரண்டறக் கலந்து போய் விட்டிருக்கிறது என்பதற்குச் சிரிக்க வைத்த ஒரு உதாரணத்தைக் கூறினார். சொந்த கிராமத்துக்குப் போயிருந்த போது ஒரு வயதான அம்மாள் வாசல் தெளித்துக் கொண்டிருந்த தன் மருமகளைப் பார்த்து, ''சாணியைத் 'திக்'காக் கரைக்கிறது தானே?'' என்று அதட்டினாளாம்! 'அடடா கிராமப்புறத்தில் கூட ஆங்கில அறிவு இப்படி ஊடுருவி இருக்கிறதே!' என்று வியந்து சென்னை திரும்பிய பிறகு, ஒரு பட்டதாரிப் பெண்மணியை நேர்முகத் தேர்வில் சந்திக்க நேர்ந்ததாம். அப்போது, 'நர்ஸரி ரைம் பற்றி, ஓர் ஆராய்ச்சி நடக்கிறதே தெரியுமா?' என்று இவர் கேட்க, அவள், 'எனக்கு நர்ஸிங் படிப்பில் நாட்டமில்லை ஸார்!' என்றாளாம்!

அவ்வை இப்படிக் கூறி வருகையில் தமிழைப் போதனை மொழியாக்கிக் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும் நாம் வெற்றி பெறவில்லை; அதே சமயத்தில் இருக்கிற ஆங்கிலச் செல்வத்தையும் வெகு விரைவாக இழந்து கொண்டிருக்கிறோம் என்று புரிந்து கொண்டு வருந்த வேண்டியிருந்தது. நிகர லாபம் என்னவென்று பார்த்தால் ஐ. ஏ. எஸ். தேர்வு முடிவுகளில் பாதிக்கு மேல் படித்த பிறகு தான் தமிழின் பெயரையே காண முடிகிறது!

வண்ண வண்ணமான, அழகழகான, ஏராளமான படங்களோடு வெளியாகியுள்ள அழ. வள்ளியப்பாவின் கவிதைத் தொகுப்பு நூலுக்குச் சிலம்பொலி செல்லப்பன் எழுதியுள்ள அணிந்துரை குழந்தை இலக்கியம் பற்றிய அரியதொரு ஆய்வு நூலாகவே தனிச் சிறப்புடன் விளங்குகிறது என்று எடுத்துக் காட்டினார் அவ்வை. அத்துடன், இவ்வளவு அழகான புத்தகத்தைக் குழந்தைகள் கிழித்து விடுவார்களோ என்று பயந்து பள்ளி நூலகங்களில் குழந்தைகளுக்குப் படிக்கக் கொடுக்காமலே இருந்து விடுவார்களோ என்ற அச்சத்தையும் வெளியிட்டார்!

வள்ளியப்பா ஒரு கவிஞர் மட்டுமல்ல, ''அவர் ஒரு சக்தி, ஓர் இயக்கம், ஒரு முன்னோடி'' என்றெல்லாம் தமது ஆங்கில முன்னுரையில் பாராட்டியுள்ள கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், 'மலரும் உள்ளம்' என்ற வள்ளியப்பாவின் முதல் நூலின் தலைப்பை 'Flowering Sensibility' என்று மொழி பெயர்த்துள்ள அழகினை வியந்து போற்றினார் அவ்வை.

குழந்தைகளின் உள்ளங்களைப் புரிந்து கொள்வது என்பது சிரமம். ஆனால் புரிந்து கொள்ள விரும்பி முயன்றால் அது எவ்வளவு அழகானது என்று உணர்ந்து ஆனந்தமடைவோம் என்பதை ஆனந்தி அனுபவபூர்வமாகச் சொன்னார். ஒரு தாயார் தினம் தினம் அதே கதைகளை மகனுக்குத் திரும்பத் திரும்பக் கூறுவதில் அலுத்துப் போய்க் கதைகளை டேப் செய்து வைத்து விட்டாளாம். இரண்டு நாள் குழந்தை பொறுமையாக டேப் கேட்டது. மூன்றாவது நாள், ''அம்மா! டேப் வேணாம்; நீயே சொல்லு!'' என்றது. ''ஏன் ராஜா?'' என்றாள் தாய். ''டேப் பிடிக்கலையா?''

''அது சரியாத்தான் கதை சொல்றது; உன் குரல்தான் கேட்கிறது; ஆனால் டேப் ரிகார்டரின் மடியில் உட்கார்ந்து கதை கேட்க முடியாதே'' என்று கூறித் தாயாரைக் கட்டிக் கொண்டது குழந்தை.

இதைச் சொன்ன ஆனந்தி, ''வள்ளியப்பாவின் புத்தகத்தைப் பெற்றோர் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்தால் போதாது; படித்துக் காட்ட வேண்டும்; பாடிக் காட்ட வேண்டும்; முடியுமானால் அபிநயித்து ஆடிக் காட்டவும் வேண்டும்! அப்போது குழந்தைகள் அடையும் பரவசத்துக்கு ஈடு இணையே இல்லை'' என்றார்.

வள்ளியப்பாவின் நன்றி உரையிலும் இன்றைய கல்விக் கூடங்கள் பற்றிய கவலை நிறையவே தொனித்தது. ஒரு கிராமப் பள்ளியில் கரும்பலகை கூட இல்லை என்று ஆசிரியர் குறைபட்டுக் கொண்டாராம். அதைக் கேட்ட அதிகாரி, ''இதற்கெல்லாம் புகார் பண்ணிக் கொண்டிருக்கலாமா? சுவரில் கறுப்பு வர்ணம் அடித்துவிட்டு எழுத வேண்டியதுதானே'' என்றாராம். அதற்கு ஆசிரியர், ''செய்யலாம்; ஆனால் சுவரே இல்லையே'' என்றாராம்! ''நமது பள்ளிகள் பலவற்றின் நிலைமை பட்டி தொட்டிகளில் இப்படித்தான் இருக்கிறது'' என்ற வள்ளியப்பா, ''குழந்தைகளுக்குப் பக்கத்துக்குப் பக்கம் படங்களுடன் — இடையிடையே வண்ணப்படங்களுடன் நூல்கள் வெளியிட வேண்டுமானால் அதற்கு ஏராளச் செலவு ஆகிறது; விலையையும் அதிகரித்துத்தான் வைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்கும் போது அரசு இதையெல்லாம் கவனிப்பதில்லை. இத்தனை பக்கங்கள் என்றால் இவ்வளவு விலை என்று நிர்ணயித்து விடுகிறது. விளைவுகளைச் சிந்திப்பதில்லை'' என்ற நியாயமான ஓர் ஆதங்கத்தை வெளியிட்டார்.

அரசும் அதன் கொள்கைகளும் எப்படியோ போகட்டும். தத்தம் குழந்தைகளின் அன்பைப் பெறுவதைக் கொள்கையாகக் கொண்ட பெற்றோர்கள் சீக்கிரமே சிரிக்கும் பூக்களின் இரண்டாம் பதிப்பு வெளியிட வேண்டிய அவசியத்தை உண்டாக்குவார்கள்.

— நமது நிருபர்

சிரிக்கும் பூக்கள் — குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா; விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை — 108. விலை ரூ. 20.

கங்கை

யஜ்ஞங்களுள் அச்வமேதமும், மலைகளுள் ஹிமய மலையும், வ்ரதங்களுள் ஸத்யமும், தானங்களுள் அபயப்ரதானமும், தவங்களுள் ப்ராணாயாமமும், மந்திரங்களுள் ப்ரணவமும், தர்மங்களுள் அஹிம்ஸையும், விருப்பங்களுள் செல்வமும் வித்யைகளுள் வேதாந்த வித்யையும், ஸ்திரீகளுள் லக்ஷ்மியும் தேவகணங்களுள் விஷ்ணுவும் உத்தமமான பாத்ரங்களுள் விஷ்ணு பக்தனும் எவ்வாறு ச்ரேஷ்டமோ அவ்வாறு தீர்த்தங்களுள் கங்கா தீர்த்தம் ச்ரேஷ்டமாகிறது.

அதுபோல் ஸ்வீட்களுள் சிறந்தது கிராண்ட் ஸ்வீட்ஸ்.

இனிப்புகள்: அதிரஸம், குங்குமப்பூ பாதாம் அல்வா, பாதாம் கதலி, பாம்பே காஜா, தேங்காய் போளி, தேங்காய் கோவா, குங்குமப்பூ கோதுமை அல்வா, குங்குமப்பூ ஜாங்கிரி, ரஸமலாய், மங்களூர் போளி, ரஸகுல்லா, சோன்பப்டி, இனிப்பு சோமாஸ்.

காரம்: பாம்பே அவல் மிக்ஸர், கான்பிளாக்ஸ் மிக்ஸர், கைமுறுக்கு ரயில் கட்டிடம், நவரத்ன மிக்ஸர், மிளகு வடை சீடை, சீப்பு சீடை, தட்டை, தேன்குழல், வறுபயறு, முள்ளுத் தேன்குழல், வெஜிடபிள் சமோசா.

பொடி வகைகள்: கருவேப்பிலை பொடி, ரசப் பொடி, இட்லி மிளகாய்ப் பொடி, சரம்பார் பொடி, பருப்பு பொடி, ஊறுகாய் பொடி.

திருமண வைபவங்களுக்கு: அதிரஸம், திரட்டுப் பால், சீர் முறுக்கு, பருப்புத் தேங்காய் முதலியவை தயாரித்துத் தருகிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

No. 24, 2வது மெயின் ரோடு, காந்திநகர்
அடையாறு சென்னை - 600 020.

போன் : 412557

செழியனுக்கு இது தேவைதானா?

* செல்வன் ஜி, திருச்சி — 17.

? எம். ஜி. ஆர். ஆட்சியமைத்துப் பத்தாண்டு விழாக் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடையப் போவது மக்களா? மந்திரிகளா?

! மந்திரிகளைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மற்றபடி மக்கள் மகிழ்ச்சியடையப் போகிறார்களோ இல்லையோ இப்போதைக்குப் பலதினசரிப் பத்திரிகைகளுக்கு ஒரே இதழில் மூன்று நாலு முழுப்பக்க விளம்பரங்கள் கிடைக்கின்றனவே!

* இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? இரா. செழியனுக்கு இது தேவைதானா?



* பெரிது படுத்தினர்.



* சின்னத்தனம்.



* கப்சிப் — முடிந்தது!

! கண்டிப்பாக இதுவும் தேவை; இன்னமும் தேவை. தி. மு. க. ஜெயித்துவிடக் கூடாது என்று செயல்பட்ட எம். ஜி. ஆரின் இந்த வெற்றியடையாத நீசத்தனத்திற்கு, நல்ல பார்லிமென்டேரியன் என்று பலராலும் பாராட்டுப் பெற்ற செழியன் இப்படித் தன்னைத் தானே காவு கொடுத்துக் கொண்டது அசிங்கம்.

* ஆர். விஜயராஜ், பெரியகுளம்.

? அமைச்சர் திருநாவுக்கரசு கொ. ப. செ. வுக்குச் சேலை துவைத்தாராமே?

! அவர் சேலை துவைத்தாரா இல்லையா என்ற பழைய ஜோக்கெல்லாம் ஒரு பக்கம் கிடக்கட்டும். சமீபத்தில் நடந்து முடிந்த ராஜ்யசபைத் தேர்தலில் 'தி. மு. க. பெற்ற வெற்றி நியாயமற்ற முறையில் பெற்ற வெற்றி' என்று சொன்னாரே, இந்த ஆண்டில் அதைவிடச் சிறந்த ஜோக் ஏதும் இருக்க முடியுமா என்ன?

* அருண், ஈரோடு — 3. *

? நர்ஸரிப் பள்ளி ஆரம்பிக்க என்னென்ன தகுதிகள் வேண்டும்?

! சம்பல் பள்ளத்தாக்கில் கொஞ்ச காலம் 'தொழில்' நடத்திய அனுபவம் இருந்தால் போதும்!

* மு. சிவஞான முருகன், ஸ்ரீவைகுண்டம்.

? குர்னிகால் சிங்கை இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்ற வேண்டும் என்று கூறியதோடு, நீதிமன்ற ஆணையை மீறியதற்காகத் தலைமைச் செயலாளர் விளக்கம் சொல்ல வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளதே?

! அ. இ. அ. தி. மு. க. ஆட்சியில் நடந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய வெட்கக்கேடுகளில் இதுவும் ஒன்று. சுப்ரீம் கோர்ட் சம்பந்தப்பட்டிருப்பதால் இது பளிச்சென்று வெளிச்சத்திற்கு வந்து விட்டது: அவ்வளவுதான்!

* கு. கணேசன், சென்னை — 15.

? கடந்த நான்காண்டுகளில் பலமுறை கவிழ்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டும், வெற்றிகரமாகத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துக் கேரள வரலாற்றில் சரித்திரம் படைத்துள்ள கருணாகரன் தலைமையிலான கூட்டணி அரசு பற்றி?

! பெரும்பாலான சர்க்கஸ் காரர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

* ப. விஜயபாலன், பம்பாய் — 23.

? பெண்ணின் எந்த அஸ்திரம் பலம் வாய்ந்தது — அழுகையா, கவர்ச்சிப் புன்னகையா?

! நாம் பலவீனமாக இருந்துவிட்டால் எதிராளியின் எல்லா அஸ்திரங்களுமே பலம் வாய்ந்ததாகிவிடும் நண்பரே.

* என். செல்வராஜ், கரூர்.

? பதினொரு மந்திரிகளின் நீக்கம் அவ்வளவுதானா?

! சொன்னதைச் செய்யும் நேர்மையும் அரசியல் நாகரிகமும் நம்மவரிடம் ஏது ஸ்வாமி? பக்கத்திலிருக்கும்ஹெக்டேயைப்பாருங்கள், இதோ, அதோ என்று பூச்சாண்டி காட்டிக் கொண்டிராமல் கப்சிப் என்று காதும் காதும் வைத்தாற்போல் செய்து முடித்துவிட்டார்.

* உ. சங்கரகுப்பு, தக்கலை.

? திருமணம் ஆகாத பெண்களுக்கு 'மெட்டர்னிட்டி லீவு' கொடுப்பது ஒழுக்கக் கேட்டை வளர்ப்பதற்கு உரம் இடுவது போன்றதல்லவா?

! ஒழுக்கக் கேட்டிற்கும், மெட்டர்னிட்டி லீவுக்கும் துளிகூடச் சம்பந்தமில்லை. ஏனெனில் லீவு கிடைக்கிறதே என்பதற்காக எந்தப் பெண்ணும் கர்ப்பமடைவதில்லை. ஒழுக்கத்தைத் துறக்கத் துணிந்த பெண், கருத்தடை., கருச்சிதைவு எல்லாம் தெரிந்து வைத்திருப்பாள்.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'மக்கள் கிளர்ச்சியில் இறங்கி என். டி. ராமராவின் தெலுங்கு தேசம் அரசைப் பதவியிலிருந்து தூக்கி எறிய வேண்டும்!' என்று மத்திய அமைச்சர் கே. கே. திவாரி கூறியிருப்பது நியாயம்தானா?

! ஒரு மத்திய அமைச்சரின் நாலாந்தரப் பேச்சுத்தான் இது. இருந்தாலும் ஏதோ என். டி. திவாரியே இப்படிப் பேசியது போல் எடுத்துக் கொண்டு என். டி. ஆர். பிரச்னையைப் பெரிதுபடுத்திப் பிரதமரிடம் கொண்டு போயிருக்க வேண்டியதில்லை. இவர் ஒரு சாதாரண கே. கே. திவாரி!

* உ.மார்த்தி, கோவை — 43.

? நிஜமாகவே தெரியவில்லை சார்! 'பர்பர்' என்றால் என்ன?

! பெப்பே!

* அருண், ஈரோடு — 2.

? 'அக்னி' துவக்க விழாவில், தேசிய ஒருமைப்பாடு என்ற அந்த அமைப்பின் நோக்கத்தையே விட்டு விட்டு, இந்தி வேண்டுமா வேண்டாமா என்ற புளித்துப் போன வாதத்தில் பேச்சாளர்கள் இறங்கி விட்டார்களாமே?

! தேசிய ஒருமைப்பாட்டின் முதல் எதிரி ஹிந்தித் திணிப்பு. அதைப் பற்றிப் பேசாமல் நழுவுவது பிரச்னையைத் தீர்த்து வைக்காது.

நீங்கள் கேட்டவை — தராசு



* மகிழ்ச்சி யாருக்கு?




* தேவைதானா?



* கவிழாதசாதனே.

* சிறந்த ஜோக்.



புளிப்பு ஏற ஏற போதையும் அதிகரிக்கும். எனவே புளிப்பு ஏற விடாமல் பிரச்னைக்கு அரசு தீர்வு காண்பதுதான் புத்திசாலித்தனம். நாட்டின் ஒருமைப்பாட்டினைக் காக்கவும் வளர்க்கவும் செய்ய வேண்டியனவும் உண்டு; செய்யக் கூடாதவையும் உண்டு. கலாசாரப் பரிவர்த்தனை, இலக்கியங்கள் மொழி பெயர்ப்பு, உள்நாட்டுச் சுற்றுலா போன்ற செய்ய வேண்டியவை குறித்துக் கருத்து வேறுபாடுகள் எழாது. ஆனால் மாநிலங்களின் அதிகாரங்களை மத்திய அரசு பறித்துக் கொள்ளுதல்; ஹிந்திக்கு மற்ற மொழிகளைவிட உயர் அந்தஸ்து அளித்தல் போன்ற காரியங்கள் ஒருமைப்பாட்டைக் குலைக்கும்; இவ்விஷயங்களில் விவாதங்கள் நடக்கவே செய்யும்; நடக்கவும் வேண்டும்.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
அருண்,
37, புதுமஜீத் வீதி,
மாணிக்க வாசக இல்லம்,
ஈரோடு — 3.

"வேண்டும் வேண்டும் பாலம் வேண்டும்!"



சென்னைய்ய செட்டி.

போயம்மாள்.

ஆற்றைக் கடந்து வரும் பள்ளிச் சிறுவர், சிறுமியர்...

— இப்படிக் குரல் கொடுப்பவர்கள் பதினொரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள். பர்கூர் பகுதியிலுள்ள புதூர், கொத்தளனூர், ஜெனிக்கொள்ளை, நேரிலக்கோட்டை — முதலிய கிராமங்களிலுள்ள மக்கள் பர்கூர் வர வேண்டுமென்றால் இடையில் ஓடும் பாம்பாறு என்னும் ஆற்றைக் கடக்க வேண்டும். வருடத்தின் பல மாதங்களில் வறண்டு கிடந்தாலும், மழைக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் ஓடும்போது...

ஆற்றின் அக்கரையிலிருந்து பர்கூரில் உள்ள பள்ளிக்குப் படிக்க வரும் சுமார் நூற்றைம்பது மாணவ, மாணவிகள் பள்ளிக்கு மட்டம் போட வேண்டியதுதான். அந்தப் பகுதியில் விளையும் பல ஆயிரம் மதிப்புள்ள மா, அன்னாசி, திராட்சைப் பழங்களையும் மற்ற விளைபொருட்களையும் அனுப்ப முடியாது. நோயுற்றவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முடியாது. வலி வந்து விட்டால் கர்ப்பிணிப் பெண்களின் பாடு திண்டாட்டம்தான்!

நாங்கள் சென்ற நேரம் பள்ளி நேரம். ஆற்றைக் கடந்து வந்து கொண்டிருந்த ஒன்பதாவது படிக்கும் சீனிவாசன், ஜெகதீசன், ஆகியோரையும் எட்டாவது படிக்கும் லோகநாதனையும் சந்தித்தோம்.

"ஆற்றில் வெள்ளம் ஓடினால் என்ன செய்வீங்க?"

"ஸ்கூலுக்குப் போக மாட்டோங்க. பரீட்சை, அல்லது வேறு காரணத்துக்காக முக்கியமாகப் போக வேண்டுமானால் ஆற்றின் ஓரமாகவே ஐந்து கி. மீ. சென்றால் பாலம் ஒன்று வரும். அதன் மூலம் ஆற்றைக் கடந்து பர்கூர் வருவோம்" என்றார்கள் புத்தக மூட்டையைச் சுமந்து கொண்டிருந்த அந்தச் சிறுவர்கள்.

"மாம்பழம், தேங்காய், திராட்சை, அன்னாசி, நெல் என்று ஏராளமான விளைபொருட்கள் இந்தக் கிராமங்களிலிருந்து போகின்றன. வெள்ளம் வரும் நாட்களில் எங்களுக்குச் சொல்ல முடியாத சங்கடம்தான்" என்றார் மாமரத் தோட்டம் வைத்திருக்கும் சென்னைய்ய செட்டி.

1985 ஆம் ஆண்டு வெள்ளத்தில் ஒரு பெண் அடித்துச் செல்லப்பட்டதாக போயம்மாள் என்பவர் சொன்னார்.

பாலம் இல்லாவிட்டாலும், ஆற்றில் இறங்கி, ஏறி இந்தக் கிராமங்களுக்குப் பஸ் செல்கிறது. வெள்ளம் வந்தால் பஸ் ஸர்வீஸும் அவுட்.

"இந்தக் கிராமங்களுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பஸ் விட்டது மட்டும் போதாது; ஆற்றின் மேல் ஒரு பாலத்தையும் கட்டிக் கொடுத்தால் பெரிய புண்ணியமாகப் போகும்" என்ற சென்னைய்ய செட்டியின் வேண்டுகோளில் நூறு சதவீத நியாயம் இருக்கிறது!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.

க்ளினிக் ஸ்பெஷல் ஷாம்பூ பொடுகினை எதிர்த்து அகற்றுகிறது. எனவே நீங்கள் அனைவரையும் கவர முடிகிறது.



பொடுகின் காரணமாக எவரையும் கவர முடியாமற் போனால், ஒரு ஸ்பெஷலிஸ்ட் ஷாம்பூவைப் பயன்படுத்தும் வேளை வந்துவிட்டது என்று பொருள். க்ளினிக் ஸ்பெஷல் ஷாம்பூ. இதன் மென்மை நுரை கேசத்தைக் கழுவுகிறது; அடங்கியுள்ள சிறப்புப் பொருள் பொடுகினைக் கட்டுப்படுத்துகிறது. உங்கள் கேசம் அழகு பெறுகிறது. சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும், அரிப்பற்றும் திகழ்கிறது.



க்ளினிக் ஸ்பெஷல்

ஷாம்பூ.

பொடுகற்ற, சுத்தமான,
ஆரோக்கியமிக்க கேசத்திற்கு.

HLL-2607

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமிக்க தயாரிப்பு.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

நமது சுற்றுப்புறச் சூழலுக்கு நவீன தொழில் நுணுக்கம் அடிக்கடி ஆபத்தாக விளங்கு கிற உலகத்தில், இயற்கை யின் தூய்மையைத் திறன்மிக்க தொழில் நுணுக்கம் கெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மதருஸ் ரி:.பைனரீஸ் லிமிடெட், அதன் தூய்மை கேடு குறைப்புத் திட்டத்தின் மூலம் நிரூபித்து வருகிறது.

ஆம். அதிகத் திறனுடன் இயங்கு வதற்காக புதிய தொழில் நுணுக்கங் களை புகுத்தும் அளவற்ற ஆர்வம் எம்.ஆர்.எல்லுக்கு உண்டு. இந்த எண்ணத்தைச் செயலாக மாற்றியும் வருகிறது. உதாரணமாக தொடர்ச்சியாக இயங்கும் ரசாயன ஆலை ஒன்றில் டிஸ்ட்ரிப்யூட்டட் டிஜிடல் கண்ட்ரோல் சிஸ்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக அமைத்துள்ள மிகப் பெரிய தொழிற்சாலை எம்.ஆர்.எல் தான். எம்.ஆர்.எல்லின் மிகச்சிறந்த முறையில் திட்டமிடப்பட்டுச் செயல்படும் உற்பத்தித் திட்டமானது இந்த எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நமது நாட்டிலேயே உற்பத்திச் செலவில் மிகக் குறைந்த அளவிற்கு வைத்திருக்கும் ஆலையாகத் திகழச் செய்கிறது.

ஆனால் நவீன தொழில் நுணுக்கத்தை நிர்ணயிக்கும் ஒரே அம்சம் உற்பத்தித் திறன் மட்டும் அல்ல. இயற்கை, எரிபொருள் சிக்கனம் ஆகிய விஷயங்களிலும் அதே அளவிற்கு எம்.ஆர்.எல். அக்கறை செலுத்தி வருகிறது.

எம்.ஆர்.எல்., அதன் விரிவாக்கம் செய்யப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தூய்மை கேடு கட்டுப்பாட்டுக்காக மிகவும் நவீன சாதனங்களை அமைத் துள்ளது. ஒரு ஸ்லூயர் பேசின், ஒரு ஏ.பி.ஐ. செபரேட்டர் க்ளாரிப் ஃப்ளாக்குலேட்டர், கிளாரிஃபையர் மற்றும் ஆக்ஸிடைசேஷன் பாண்ட் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஒரு விரிவான கழிவு நீர் சுத்தப்படுத்தும் இயந்திரச் சாதன அமைப்பு, வெளியாகும் கழிவு நீரை சுத்தப்படுத்தி அதன் தரத்தை சட்டபூர்வமான விதிகளுக்கு உட்பட்டு நல்லமுறையில் வைத்துள்ளது.

ஹைட்ரஜன் சல்பைடிலிருந்து கந்தகத் தாதுவைப் பிரித்தெடுக்க ஒரு கந்தக ஆலை, ஆவி ஆவதையும் தூய்மைக்கேடு அடைவதையும் குறைப்பதற்காக பெட்ரோலியப் பொருட்கள் சேமிக்கப்பட்டுள்ள தொட்டிகளுக்கு மிதவைக் கூரைகள் அமைப்பு, ஹைட்ரோ கார்பன்கள் மற்றும் இதர வாயுக்களை கையாண்டு நிறுத்தி விடுவதற்கான வானளாவிய நவீன புகைக் கூண்டு ஆகியவை, சுவாசிப்பதை பாதிக்காத படி பார்த்துக் கொள்கின்றன. வாயுக்களால் அசுத்தமாக்கப்படும் அளவுகளைக் கண்டறிந்து தெரிவிப்பதற்காகத் தானாகவே தொடர்ந்து இயங்கும் திறன்மிக்க ஒரு கம்ப்யூட்டர் சாதனத்தை நிறுவுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

எம்.ஆர்.எல்லின் வருடாந்திர எரிபொருள் உபயோகம் வியக்கத் தகும்படி மிகக்குறைவாக அதாவது 7 சதவிகிதம் அளவில் உள்ளது. அதுதான் எம்.ஆர்.எல்லில் இயங்கும் நவீன தொழில் நுணுக்கம் இயற்கையை உபயோகப் படுத்தி இயற்கையைக் காத்திடும் செயல். ஏன் என்றால் இயற்கை தான் அதன் மிகப் பெரிய வளம்.

இன்று ஆபத்திற்கு உள்ளாகி இருப்பவைகள்: சுத்தமான காற்று, நீலவானம் மற்றும் தூய்மையான சுற்றுப்புறச் சூழல்.



எம்.ஆர்.எல். — நாட்டின் வளங்களை பெருக்க உதவும் நேசக்கரம்.

மதருஸ் ரி:.பைனரீஸ் லிமிடெட்

480, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600 035.

SAA/MRL/3970